உ

ஸ்ரீஸற்குருவேநம:

ஸ்ரீகையிலாய வர்க்கத்தாதி

சட்டமுனி நாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

நிகண்டு - சூ௨௱.

இஃது,

மதுரை புக்ஷாப்

இ. ரா. ம. குருசாமிக்கோன்

அவர்கள் விருப்பத்தின்படி,

திருவெண்காடு.

ஆறுமுக சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

சென்னை

A. தீனதயாள முதலியார்

அவர்களால்,

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] **1927** [அணா 4.

S. 470

உ

ஸ்ரீஸற்குருவேநமஃ.

சட்டமுனி நிகண்டு

௲௨௱

காப்பு.

ஆதியந்தமிலாத பூரணத்தைநோக்கி
அடுக்கநின்றவுண்மனத்தாய் பதத்தைப்போற்றி
பாதியந்தமாகிநின்ற வுமையாள்சொல்ல
பாங்கானசின்மயத்தின் கருணையாலே
ஓதியந்தவாதமென்ற நூலுக்கெல்லாம்
உயர்த்திவைத்தநாகமணிக் கிரீடம்போலச்
சாதியந்தகுணத்தோடு நிகண்டுசொல்லச்
சச்சிதானந்தவெளி காப்புத்தானே.

பாயிரம்.

சவுக்காரம் எண்ணெய்வாங்க.

எட்டெட்டாமரபிலுள்ள நாதாக்கள்சொன்ன
யியல்பானவகாரத்தில் வழலைமார்க்கம்
ஒட்டொட்டாய் மறைத்துவைத்தார்வாதமூலம்
ஓகோகோவழலையில்லா வாதம்போச்சு
நெட்டொட்டாயப்போகாமல் நிகண்டுசொல்வேன்
நேராகஎண்ணெய்கக்கச் சுண்ணம்பில்வைத்து
மட்டொட்டாய்நீவாரு அன்பத்தஞ்சு
வாருதிபோலெண்ணெய்கக்கி சித்தியாமே. உ

வெடியுப்பு செயநீர்.

சுத்தித்தவழலைக்குக் கவசங்கேளு
சொல்லுகிறேன் வெடியுப்புபலமோபத்து
மத்தித்தசாரமொன்று சீனமொன்று
வாகாகப்புளிபத்துக் கூடக்கூட்டி
ஒத்தித்துயிடித்துநன்றாய்க் கொளுத்திவெந்து
வுறுதியாய்வெடியுப்பு சுன்னமாச்சு

பத்தித்துப்பனியில்வைக்கச்செயநீராகும்
பாங்கானசீனத்தி லின்னீர்வாரே. ௩

சீனச்சுன்னம்.

வாத்துடனேகொதித்துவெந்து சுண்ணும்பாகும்
வாகானவெண்கருவால் வழலைக்கப்பி
காத்துடனேவெயிலில்வைக்க வுள்ளெண்ணெய்கக்குங்
கைமுறையாய்ச்சுண்ணும்புப் பொடியில்வைத்துத்
தோத்துடனேதீயெரிக்கச் சாமமொன்று
துடியானவெண்ணெய்கக்கக் கறுப்பாய்நிற்கும்
மாத்துடனேயிதைக்கருவா லரைத்துக்கட்டி
வாகானசுன்னத்திற்புடத்தைப்போடே. ௪

சவுக்காரச் சுன்னம்.

போட்டபின்பு வெளுப்பாகுமப்பாகேளு
புகழானகடுங்கார மேத்திரன்றாய்
கூட்டபின்புதோறுமண்ட ரண்டமெல்லாங்
குறுக்கிவிக்கும்நீட்டிவிக்குங் குறையொன்றில்லை
ஆட்டபின்புவாதமென்ற வெண்ணெய்த்தொட்டு
அப்பனேவப்புமுத லெல்லாங்கட்டு
நீட்டபின்புவஸ்துவித்தைக் கிதுவேயாதி
நேராகயிதைவிட்டால் வாதம்போச்சே. ௫

சவுக்கார வழலையின்பெயர்.

போச்சென்றுநூல்களெல்லாம் பொய்யாகாமல்
புகழாகசொல்லிவிட்டேன் நிகண்டுக்குள்ளே
ஆச்சென்றுஇதைஅறிந்தா லவனேவாதி
அறியாவிட்டாலாசானை யடுத்துக்கேளு
மூச்சென்ற வாதியைப்போல்வாதத்துக்கு
முகிந்தவிடம்வழலையென்பார் சொல்லார்சொல்லார்
பேச்சென்றபேச்செல்லா மிதனாலாச்சு
போனஎந்நூலைப் பேணிக்கேளே. ௬

பாயிர முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சட்டமுனி நிகண்டு சூஉா.

நூல்.

வழலையின்பெயர்.

ஆகும்வழலையாதிபிறப்புகேள்
பாகுநல்லூஷரம்பகுந்தனற்சுன்னநீர்
வாகுகல்லுருப்பமருவியயெண்ணெயும்
போகுஜெலத்தொடுபூகமுமைந்தே. ௧

லவணகாரசாரம்-உடுக்கு விபரம்.

அஞ்சுருப்பட்டவாதிலவணந்தான்
மிஞ்சியதீய்க்கு வெறுங்குகைபாகிடும்
ஒஞ்சியுருகி யுறிஞ்சிடும்வாறது
நெஞ்சினில்நின்று நிலைத்தவர்சித்தரே. அ

சித்தர்முறையுஞ் சிவன்சொன்னவாறும்
ஒத்தவழலை யுருப்படவுருப்பது
அத்தியேயெண்ணெய் அடவாய்ப்பறிக்க
கொத்தியகாரசாரலவணமே. கூ

லவணவழலை நலங்கியசிற்பரி
கவனக்குருமுறை கடுவெள்ளைச்சாறை
தவளைச்சதாசிவந் தனித்திடுவண்ணன்
மவனநற்காரம்மறைந்ததிப்படிக்கே. ய

படியானயீசன் பகர்ந்திட்டசிற்பரி
முடியாதவாத முடிக்கின்றசங்கரன்
குடியானமூர்த்திகூரமைக்கருவால்
மடியாமற்றேரோட்டும்வாசகனுமே. யக

நாமம்பலபலநாட்டினர் நூலுக்குள்
காமம்பலவாய்க் கலந்ததொழின்முறை
சோமன்ரவிவன்னி சொல்லுமிதற்குப்பேர்
ரோமம்பிறந்தவொளிபோலவழலையே. யஉ

காச்சுவழலையின்பேயர்.

வழலைக்குநாமம் வகைவதைநூலினில்
நிழலைக்கடந்த நேரொற்றவார்த்தைபோல்
தழலைக்கடந்த தனித்தவெறும்பூப்போல்
உழலப்படுவார் உலகத்துவாதியே. ௰௩

பூவழலையின் பேயர்.

காச்சுவழலைக்குக் கருககேளுமெண்ணையை
மாச்சியேநீக்கி வளம்பெறவுண்டைசெய்
ஓச்சியேகார முருகவேஏற்றிடில்
ஆச்சியேநாம மறைந்திடக்கேளுமே. ௪

கேளாக்குருமுறை கெடியானயேகாவி
நாலானதேரை நடத்தியவாசகன்
தோளச்சுடலையோன் சொலப்பெருஞ்சூலினில்
ஆளாச்சற்குரு வந்தகனுமே.

தாணியினுதந் தனித்தபூநாதம்
காணியபூனி றுகலந்திடுமொச்சி
உரணியபார்மத முத்தமபூச்சாரம்
அரணியவூஷர மாதித்தன்வெணையே ௰௬

வெள்ளச்சிவேகத்திவிளங்குஞ்சத்தி
கள்ளிச்சிபூமிகலந்தருத்திரிச்சி
தெள்ளச்சிவெள்ளைச்சிறந்தவண்ணுத்தி
தள்ளிச்சியென் றுசவடாகப்பொங்குமே ௰௭

வழலை-முற்றிற்று-

நவசாரத்தின்பெயர்.

நவசித்தசாரம் நலம்புஞ்செலகூர்மை
அவசித்தகப்பலோ வாதியாமொன்பது
கவசித்தசூரன் கடுமேகநாதன்
நிவசித்தவாருதி நேர்வாதராசனே. ௰௮

வாதச்சிரோன்மணி வாகாமசுரன்தான்
போதச்செலக்குரு புகழ்வன்னிததீயோன்

காதச்செயநீர்க்குக் காரணச்சித்தனும்
வேதைத்துருசிக்கு பேற்குருவாகுமே. ௰௯

ஆகுமேநவச்சாரி யாதிகடுஞ்சாரி
ஒகுமேநற்சத்தி யுத்தமசெங்கைதாள்
தாகுமேவாதம் சமைக்கின்றவாருதி
காகுமேகாமினி கைகண்டசாரமே. ௨௰

சத்திசார்ப் பெயர்

சத்திவளச்சிசாதக சக்கிலிச்சி
முத்தியவாதச்சி முனிச்சூதகண்டச்சி
அத்தியகாந்தாரி யாகாப்பரைச்சி
பத்தியநாமம் பருஞ்சத்திசாரமே. ௨௧

எவச்சாரப் பெயர்.

எவச்சிநலச்சி யிசைந்தகறுப்பச்சி
அவச்சிதிரளச்சி வதிசுட்டசாம்பச்சி
கவச்சிபுகைநிற்குங் காரணமாஞ்சத்தி
புலிச்சியெவட்சாரப் போக்கினிப்பேரே. ௨௨

காசிசாரப் பெயர்.

காசிலவணங் கடுங்குப்பிச்சாரந்தான்
ஒசிப்பரங்கி யூட்டியகூர்மை
ஆசியவுப்பு வளங்கத்துறைச்சியாம்
வேசிலவணத்தி யென்காசிச்சாரம். ௨௩

ஏகம்பச்சாரப் பெயர்.

ஏகம்பச்சூலினீ யேற்றுங்கடுஞ்சாரி
வாகம்பச்சாரி மால்தங்கைமந்திரி
தாகம்பத்தாது சத்துருநாமத்தி
போகம்பமந்திரி புகழ்யேகக்காம்பியே. ௨௪

சீனக்காரப் பெயர்.

சீனிப்படிகை சிறந்தவெண்காரிதான்
ஆணிப்பிடிச்சி யடங்காதவெள்ளச்சி
பாணிக்குருச்சி பாங்கானவெண்பீலி
காணிவெண்சன்னத்தி கடுஞ்சினப்பேரே. ௨௫

வெண்காரப் பெயர்.

காரிபொரிக்காரி கடும்பேதகமணி
நேரியுருக்கினம் நேர்ந்தமணிகாரம்
வாரியதூமத்தை மடக்கியசிற்பரி
காரியசந்தானி கரித்தகுடோரியே.

சூடன் பெயர்.

தீபக்கொடிச்சிறந்தகதலிச்சி
மாபத்தரூபிமகத்தானதீக்கஞ்சி
தாபச்சுடர்க்கொடி தனிப்பள்ளைச்சூடனும்
ஆபத்தகேசரியாலாத்திபூரமே.

பச்சைக்கருப்பூரப் பெயர்.

பூரமதிதான் புகழ்வீசுஞ்சந்திரன்
ஆரம்பலகை யடவரங்கதலிப்பூ
ஊரங்கள்நீராக்கியுதையரவிக்கஞ்சிப்
பார்மகள்சாரிபச்சைக்கர்ப்பூரமே.

அமுரியுப்புப் பெயர்.

மூலத்தின்சாரம் முழங்குமமுரிதான்
கோலச்சடைநீர் குறிப்பானதீச்சலம்
ஆலச்சலக்கூர்மை யாதியாம்வஸ்துப்பு
காலத்தணியுப்பு கடுங்கூறலவணமே.

கல்லுப்பு.

அறுசுவைக்காதி யடங்காதவேலைநீர்
நெறிமுனிமூத்திரம் நேரானகூர்மை
கறுதறுவாதிதான் சடலிற்குருவிகேள்
தறுகியவாதத்தைச் சமைக்கின்றகல்லுப்பே.

வெடியுப்பு.

பொட்டிலைப்பூநாகம் பொருந்தும்படைராசன்
கட்டிலைக்கம்பிகருவாமணங்கந்தான்
ஒட்டிலைத்தீசுடர் வுறுபூமிகூர்மைதான்
மட்டிலாவேதைவளர்க்கும்வெடியுப்பே.

இந்துப்பு

சந்திரனுப்பு தனித்தமதிகூர்மை
அந்திரவேலை.யடங்குப்பனிமை
மந்திரப்போலே வளர்ந்தரவியுப்பு
இந்திரசாரமாம் இந்துப்பின்பேரே. ௩உ

வளையலுப்பு.

குப்பிலவணங் கொடுமணற்கூர்மை
ஒப்பில்பலைகை யுருப்பட்ட தெல்லுப்பு
செப்பியகண்டகிசிறந்தகடுவுப்பு
வப்பியகைப்பாய் வளகிலவணமே. ௩௩

சவுட்டுப்பு.

சவுட்டுப்புகூர்மைதனி வூழச்சாரம்
அவுட்டுறுகூர்மை வந்தகச்சாரமாம்
கவுட்டுனுதடுப்பூ கலந்தநீர்க்காச்சுப்பு
தவுட்டுறுமேனி தானுஞ்சவுட்டுப்பே. ௩௪

திலபலவணம்.

போக்குலவணம்பொருந்தியதீக்கூர்மை
வாக்குதிலாச்சார மத்திமைகூர்மைதான்
தேக்குநலங்காருப்பு சிறந்தகடுங்கூர்மை
காக்குங்கருவுப்பு தடுந்திலாலவணமே ௩௫

கெந்தலவணம்.

நாறியகூர்மை நலத்தகடுங்கூர்மை
ஆறியநாக்கி லழகியகூர்மை
தேறியசித்திரி சிறப்பானவுப்பது
மூறியவைப்பால் முதிர்கெந்திவுப்பிதே. ௩௬

புடாலவணம்.

சந்தானகூர்மை சங்கினீர்க்கூர்மை
பந்தானசாரணை பாச்சியமந்திரி
மந்தாரகாந்தி வளங்காலவணந்தான்
பந்தாரலோகத்தைப் பறிப்பிடக்கூர்மையே. ௩எ

சிந்துலவணம்.

சிறப்பாரவுப்புசினங் கடுங்கூர்மைதான்
கறப்பாலவணங் கடுஞ்சிந்துச்சாரமாம்
நறப்பாங்குணனில் நலப்பனிக்கூர்மை
தறப்பறவுப்பாகுந் தனிச்சிந்துல்வணமே. ௩அ

காசிச்சாரம்.

கருமென்றசாரங்கார் மேகசாரந்தான்
திருவென்றசாரஞ் சிறப்பாங்கடுஞ்சாரம்
உருவென்றமேக முறவஞ்சாஞ்சாரந்தான்
பருவென்றவந்தகன் படுகாசிச்சாரமே. ௩௯

பொன்னம்பர்பெயர்.

பட்சியினெச்ச பறைவையின்வச்சரம்
தெச்சியமச்சஞ் செறித்தமலக்கன்மங்
தட்சியராஜன் தனிச்சூதராக்ஷசன்
கட்சியவாசன்கடு பொன்னம்பரே. ௪௰

மீனம்பரபெயர்.

மீன்மலமதியில்விளங்கும்வயிரந்தான்
கான்மலபக்ஷிக பளித்தபச்சைதான்
தேன்மலச்செம்மீன் சிறந்தவயிரங்கேள்
ஊன்மலமென்று விரைத்தமீனம்பரே. ௪௧

அக்கினிகைபின்பெயர்.

அக்கினிசாலமடவாஞ்செலக்கனல்
மக்கியதீக்கட்டிவாருதிநஞ்சுதான்
தக்கியதீய்ச்சலம் சாதவன்னியாம்
சொக்கியமீனஞ்சு சொலக்கடற்றீயென்னே. ௪௨

விருத்தம்.

அப்பனேலவணமொடு காரசாரம்
அறிவாகவேயிருபத் தைந்துதன்னை
ஒப்பினேனெவ்வொன்ருய் வெவ்வேறபேருய்
ஒருகோடிசாத்திரத்திற் புதைத்தார்சித்தர்
தப்பினேன்மறப்பையெல்லாம் விரித்துச்சொன்னேன்
சண்டாளவாதிக்குச் சொல்லவேண்டாம்

எப்பனேநீகண்டறிந்த வாதிமுன்னே
யெதிர்த்தாலும்சிவன்தோற்றுப்போவார்தாமே. ௪௩

உபரசம்-௱௰௨-ன் பேர்விபரம்.

வேறு.

துரிசின்பெயர்:

பரசுபாணி பாங்காமனற்கண்டர்
தரிசுநலப்பாணி தனித்தசுடலையோன்
நெரிசுநற்பச்சை நிறமுற்றநிட்களன்
அரசுகங்காள னுடியகூத்தனே. ௪௪

கூற்றன்கொலையோன் குணனேவில்லாக்கினேன்
மாற்றுமால்மச்சினன் மந்தாரகெங்கையோன்
காற்றன்கருமேகன் கடும்பல்லுக்கேற்றவன்
தோற்றன்குருநாதன் சொற்பெயர்துரிசியே. ௪௫

பொன்னிமிளை.

சத்திதன்னுதங் தனிக்கன்னிமாதநீர்
முத்தியபொன்னிற முயன்றமாக்ஷீகம்
அத்தியவம்பரை யாதிமகாநாதம்
பத்தியகாமி பரிவானசத்தியே. ௪௬

சத்திசடைச்சி சார்வானசிற்பரி
மத்தியவெள்ளச்சி வழங்குங்கறுப்பிதான்
ஒத்தியநாதாந்தி யுநகுந்துரைச்சி
நத்தியகெத்தி நால்வகைமிமிளையே. ௪௭

அப்பிரகத்தின்பெயர்.

பூவிந்துநாதம் பொருந்துகெவுனந்தான்
மாவிந்து வமபரம மனோன்மணிநாதமாம்
தாவிந்துதப்பிரம தனிப்பிரகாசத்தி
ஆவிந்துசத்திநடு வப்பிரகநாமமே. ௪௮

காந்தத்தின்பெயர்.

சிவலோகசேசவன் சேரிலயனுகன்
தவலோகசீவன் தரணிக்குநாதமாம்
நவலோகவங்குசம் நலம்பெருசித்தனும்
புவலோகமெச்ச பொருந்தியகாந்தமே. ௪௯

கர்ப்பூரச்சிலையின்பெயர்.

சிலத்திற்பிரிதிவி சேதசிலாசத்து
அலத்தியகற்குரு வாக்தினுடன்விந்து
குலத்தின்சிலாபணி கூறியகாந்தியோன்
கலத்தியபேரெலாங் கற்பூரசத்துக்கே. ௫௰

கல்நாரின்பெயர்.

கல்லுச்சவளைகடியசிலைநாரு
அல்லுச்சிலைவிந்து வருங்கல்லின்காரமாம்
செல்லுஞ்சிலைரவி சிறுநாறுகல்லது
பல்லுத்தகல்நாரின் பாங்கானநாமமே. ௫௧

சாஸ்திரப்பேதிப்பெயர்.

ஆகுமலைநாதம்மங்கனலவேதியாம்
பாகுமலைக்கருபாங்காகுஞ்செஞ்சிலை
தாகுஞ்செலக்கெந்திசலத்தோடுகல்லுயிர்
வேகுஞ்சகஸ்திரபேதியினமமே. ௫௨

கல்மதத்தின் பெயர்.

மலையின்துடக்கு மலைநாதங்கற்றீற்று
கலையுஞ்சிலாமதங் கடுஞ்சிலதூமை
நிலையுஞ்சிலாரத்தம் நேரானநஞ்சுதான்
உலையுங்கல்மதமா பொழுகிய நாமமே. ௫௩

நீலாஞ்சனப் போயர்.

நீலச்சிலச்சூதம் நேர்கல்லிநீயமாம்
கோலச்சூதாஞ்சனங் கொடுலோகவஞ்சனம்
காலாச்சிலாஞ்சனங் கடியகண்ணஞ்சனம்
பாலக்குவட்டில் பாவுகல்லீயமே. ௫௪

கருங்கல்லின் பெயர்.

இந்திரநீல மிசைந்தாகருஞ்சிலை
அந்திரமேகத் தருள்வர்னநற்சிலை
தந்திரவிக்கிரகங் தானுமுருச்சிலை
மந்திரசரக்கூவம் மருவுங்கருங்கல்லே. ௫௫

நீலப்படிக்கக்கல்லின் பெயர்.

நீலப்படிக்கல் நேர்ந்தசெம்படிகமாம்
சேலொத்தவெண்கல் சிறந்தகச்சிவமாம்

மாலைப்படிகம் வழங்குமதிக்காந்தி
பாலைச்சிலையென்பார் படிக்கத்தின்பேரே. ௫௬

சுக்கான்கல்லின் பெயர்.

சொறிக்கல்லுவூர்க்கல்லு சூருஷாக்கல்லு
மறிக்கல்தழற்கல மருவியசுண்ணக்கல்
பொறிக்கல்வங்கக்கல் புகழும்பூஷரக்கல்
நெறிக்கல்லென்றேத்துவார் நேர்சுக்கான்கல்லே. ௫௭

ஈரக்கல்லின் பெயர்.

மந்தாரக்கல்லு மாங்கிஷத்தின்சிலை
விந்தாரக்கல்லு விளங்கியரெத்தக்கல்
கெந்தாரகோழிக்கல் குறுஞ்சிலைக்கல்லு
தந்தாரமான தனியீரக்கல்லுமே. ௫௮

இரசவர்த்தப் பெயர்.

மண்ணினவத்தம்மலை மேகச்சொர்னக்கல்
பண்ணிநல்சித்தன் பரிவாதம்வந்தக்கல்
தண்ணினவாதந் தணியாப்பிரட்டுக்கல்
கண்ணின்ரச வர்த்தத்தின்பேரே. ௫௯

கெருடக்கல்லின் பெயர்.

விடத்துக்கரசன் விளங்கும்விஷராஜன்
படத்துக்குக்கருடன் பாற்போலசீர்சேர்ந்தான்
நாடத்திக்குநாயகன் நற்பட்சிராஜனும்
கெடத்துக்குக்கார்க்கோடன் கெருடக்கல்பேரே. ௬௰

ஓட்டின் பெயர்.

பாண்டங்குசத்தி பருகியசில்லுதான்
ஆண்டியமண்கலம் மழகாங்குசக்கல்
நீண்டமண்ணோடு நேர்குளைச்சக்கிரம்
பூண்டசொல்லெல்லாம் புகழோட்டின்பேரிதே. ௬௧

செங்கல்லின் பெயர்.

செஞ்சிலைமண்கல் சிறந்தசெம்பலகை
ஒஞ்சியுருக்கல்லுவுயர் காளமாய்க்கல்லு
மஞ்சிலைசூளைக்கல் வனகோபுரக்கல்லு
அஞ்சிலையென்றுதானறை நாமம்செங்கல்லே. ௬௨

எலும்பின் பெயர்.

செல்லியவஸ்தி சிறியவங்கமாம்
மல்லியவிலாக்கொடி மன்னுயிர்க்குறடுதான்
பல்லியசந்துயிர் பலவிலாததோரணம்
எல்லியகண்டெனு மெலும்பினுமமே. ௯௩

மயிரின் பெயர்.

கேசரரோமங் கிளர்ந்தமசகந்தான்
ஆசரக்கம்பிளி வஸ்தியின்வேறுதான்
தேசரச்சிப்பஞ் சிகையுறுகூந்தல்தான்
மாசரக்கந்தம் மயிருடன்பெயரே. ௯௪

நண்டின் பெயர்.

பத்துக்காலுடையான் பருந்தின்விருந்தானன்
தத்துநரியுண்ணி தலையில்லாசேவகன்
கொத்துக்குறடு குளத்துக் குருவிதான்
நத்திய்யுள்ளேதான் நண்டுடன்பெயரே. ௯௫

நத்தையின் பெயர்.

ஊமச்சிரமுரி யூர்ந்திடும் நீர்க்காய்
நாமச்சிகல்லொட்டி நற்செலக்கூறுமாம்
ஓமச்சிவுள்ளுயிர் வுயர்ந்தநீர்க்குண்டுதான்
நாமச்சிகொம்பு தானத்தையின்பெயரே. ௯௬

நாகர்வண்டின் பெயர்.

கானகச்சங்கங் காட்டினுமுரிதான்
வானகப்பாம்புக்கு வாய்க்கிரையாவோன்
பானகச்சங்கஞ் செடியில்குடிபுக்கி
வானகநாகர் வண்டினின்பெயரே. ௯௭

கிளிஞ்சிலின்பெயர்.

உடல்ரெண்டுயிரொன்று மோடியவோடந்தான்
கடலேபடசி கானகச்சிப்பிதான்
அடலெனத்தூளிபோ லாடும்வலசாரி
திடலேகுளத்தினில் கிளிஞ்சியின்பெயரே. ௯௮

ஆமையின் பெயர்.

தஞ்சங்குருளே தனித்ததாமோதரன்
பஞ்சங்கக்கூர்மை பார்நீர்ப்பரிசைதான்

[illegible]யஞ்சங்கமூடி மவுனசிலாயுதன்
ப[illegible]ஞ்சங்கமாகப் பரவியவாமைமே. ௬௯

முட்டையின்பெயர்.

உவ[illegible]மையுறுவ ளுயர்ந்தநீற்றுண்டைதான்
[illegible]மயவண்ட முறவானமும்மூர்த்தி
தாமயமஞ்சற் றனிவெள்ளையாங்கரு
காமயவித்தைக் குகைகண்டவண்டமே. ௭௰

ஆனைக்கொம்பின் பெயர்.

வாரணக்கோடு மருவுங்கெசப்பிடி
[illegible]ாரணவான கரியுடன்கொம்புதான்
[illegible]ாரணவானை சிறந்திடுந்தமாம்
ப[illegible]ாரணவானையின் நற்கொம்பின்பேரே. ௭௧

பண்ணிக்கொம்பின் பெயர்.

[illegible]ராகத்தின் தந்தம் மலைவாசிக்கொம்புதான்
நி[illegible]ராகமிழுகம் நேர்முறுதந்தமாம்
[illegible]ராகத்தரணி தான்கிளைக்கொம்புதான்
பராகத்தின்சேவகன் பார்பண்ணிக்கொம்பே. ௭௨

ஆட்டுக்கொம்பின் பெயர்.

மேஷத்தின்கொப்பு விளங்கியசெம்பொத்து
காழற்றவோமங் கலந்தவைப்பசு
ஓழற்றசெம்பிலி யுயர்ந்தகுரும்பாடு
ஏழற்றவெள்ளாடு யியல்வகைக்கொம்புமே. ௭௩

மாட்டுக்கொம்பின்பெயர்

மேதையெருமை விளங்குங்கிடாக்காலன்
மாதைமயிடம் மருவும்பசுங்கொம்பு
கோதையெருது கோவினிடதந்தம்
பாதையினமம் பரிமாட்டுக்கொம்புக்கே. ௭௪

பல்லின்பெயர்.

தந்தங்கடைக்கவர் தாள்வாய்பரக்கூடம்
அந்தம்பரவைதா னழகுவாய்முத்தது
விந்தஞ்சுரமுல்லை விளங்குமொலிக்கல்லு
பந்தம்பலவாம் பல்லுடநாமமே. ௭௫

புள்ளி மிருகம்.

புள்ளிமிருகம் புகழ்ந்தமான்சிங்கபாம்
தள்ளிக்கடவிழி சாதகவோடிதான்
ஒள்ளியகிஷ்ண னுயர்ந்தமிருகந்தான்
நள்ளியகலைமான் நற்கொம்பின்பேரே. எசு

பூநாகம்.

மேகத்தின்விந்து விளங்கு சஞ்சீவிதான்
பாகத்தின்சோதி பருவியனுங்களு
நாகத்தின்பாம்பு நலமானபூமிவேர்
போசரசதீபன் பூநாகம்பேருமே. எஎ

இந்திரகோபப் பேயர்.

இந்திரபீச மிசைந்தனுப்பீசம்
தந்திரயிடியினிற் சார்ந்திடுகாதமாம்
அந்திரசஞ்சீவி லமுர்தசுரோணிதம்
பந்திரநாயந்தான் பகரிந்திரகோபமே. எஅ

தவளையின் பேயர்.

தத்தல்மண்டூகத் தனிநீர்தவளைதான்
மத்தனைல்மேகத்தின் வார்த்தையறிபவன்
முத்தியகோஷ மொழியுடமூர்க்கனும்
கத்தியசொறியோன் கானலத்தவளையே. எகூ

கோழியின் பேயர்.

இரவையறிவோ னிறங்கியசேவலாம்
நிரவியசண்முகன் நீண்டகொடியோனுல்
கரவியசூரன் கடியமேதார்ஞானிதான்
தரவையனுமந்தான் தன்கோழிப்பேரே. அ௰

சேவ்வட்டையின் பேயர்.

ஆயிரங்காலி யமந்தவரிச்சுருள்
பாயிரங்கானகம் பரவியதட்டான்தான்
தாயிரக்குண்டலி தனித்தமரவட்டை
சேயிரநாமஞ் செவ்வட்டையின்பேரே. அக

கரடியின் பேயர்.

பாதாளபேதி பாம்புண்டசித்தனும்
வேதாளபுத்தை விளங்கவுறுஞ்சுவோன்

பேதாளமான வெழுமலைராசன்தான்
ஆதாளமன்ன னகண்டகாடியே. அ௨

சங்கின் பெயர்.

வலம்புரியிடம்புரி வாருதிநாதந்தான்
தலம்புரிபட்சி தவளத்திசைநாதம்
நிலம்புரிபாணி நீங்காதவோசையோன்
தலம்புரிஞ்சின்னஞ் சங்குடநாமமே.

முத்துச்சிப்பியின் பெயர்.

சந்திரசிப்பி தனிச்சோதிநீர்ச்சடம்
அந்திரவாளி லழகியகெர்ப்பத்தி
தந்திரவருணன் தான்துளிவிந்துவாம்
பந்திரமுத்தின் பரிவானசிப்பியே. அச

முத்துப் பெயர்.

சுக்கிரனுணி துலங்குஞ்சிறுவஞ்சி
புக்கிரன்சோதிக்கு ளாக்கியதன்மணி
தக்கிரன்வாருதி சக்கின்றபிள்ளைதான்
நக்கிரன்சோதி நல்முத்தின்பேரே. அரு

பவழத்தின் பெயர்.

வாருதிதண்டு வளந்தசெந்தண்டுதான்
நேருதுக்கொடியோன் நேர்பிரவாளமாந்
தாருருவேலை சாத்தியபெண்மாலை
பாருதிநாமம் பவழத்தின்பேருமே. அசு

கோமேதகத்தின் பெயர்.

கோமயவர்னங் கொடியனல்ராகுவாம்
தாமியமாற்சாலம் தன்னிடநேத்திரம்
ஓமியபுலிக்கண் ணுத்தமதேன்கல்லு
காமியமீயுங் கடியகோமேதமே. அஎ

புட்பராகத்தின் பெயர்.

கேதுச்சிலாங்கன் கெடிநயனத்தேரன்
மாதவசுரன் மானுடகண்டவன்
தாதுகவளையோன் சஞ்சலச்சீவனன்
போதுநற்சூத்ரன் புஷ்பராகமே. அஅ

வயிரத்தின்பெயர்.

அருணன்கதிரோ னாதிநாராயணன்
தருணரவிவிந்து தளுக்குறுசூரியன்
நருணசிலைராசன் நற்றீபகாந்தியோன்
வருணனுஞ்சிலையின் வளந்தவயிரமே.

பச்சையின்பெயர்

புந்தியின்விந்து புகழ்ந்தபசுங்கிளி
அந்திப்பழம்பச்சை யாயிடமேனி
கந்திகலைச்சி கடியதனுப்பச்சை
மந்திப்பசளையாம் வாழ்பச்சைப்பேரே.

நீலத்தின்பெயர்.

இந்திரநீல மிசைந்தசனிவிந்து
அந்திரக்கண்மணி வருநிமக்கல்லுதான்
தந்திரமேசந் தன்னிறச்சாய்கைதான்
பந்திரநீலத்தின் பரிவானநாமமே.

மாணிக்கம் சிவப்பு.

மாணிக்கஞ்சோதிக்க மன்னியசெவ்வாய்
ஆணிப்பரங்கி,யாதிதனுராகம்
ஊணிக்கனல்நிற மொளியோடிறத்தினம்
வாணிச்வமேனி மகத்தானசிவப்பென்றே.

வயிடூரியம்.

மருவியகாந்தி மன்னியசெய்வொளி
உருவியபாணக் கல்லுற்றகாளச்சிலை
தருவியசிந்து சாதவச்சூத்திரம்
வருவியசிவன் வயிடூரியமிதே.

கெண்டகச்சிலை.

கருஞ்சிலைக்குளரன் கவுனியலிங்காமற்
றருஞ்சிலைக்கல்லு சாதகநீசிலை
வருஞ்சிலாமேனி வாருதிகங்கைதான்
கெருந்திரநாமங்கள் கெண்டகச்சிலைக்கென்றே.

சூடாலைக்கல்.

ஆடாலைமாந்த னாதிதனுரத்தனம்
நீடாலைக்கொடு நேர்காந்தக்கல்லுதான்

கோடாலேச்சக்காங் கொடியசிலைநாகஞ்
சூடாலைக்கல்லின் சொற்குறிநாமமே. ௬௫

மாக்கல்.

கலமாச்சிலைமாக் கலந்தமேதச்சிலை
சிலமாச்செந்தூரங்கள் தீட்டியகுப்பிமாப்
புலமாப்பலகைமேற் பொருந்தவெழுதுக
கலவலமாச்சிலையென்று மாக்கல்லின்பேரே ௬௬

தேயிக்கல்.

செம்பரைசெம்பொடி சிலாகைநிறக்கல்லு
வம்பிறைபூஞ்சக்கல் மருவும்புரைக்கல்
நம்பிறைபொக்குக்கல் நலமானசாதக்கல்
தம்பிறையான தனித்ததேய்கலுமே. ௬௭

மஞ்சக்கல்.

குங்குமவானங் கோடிச்சிலையாது
மங்கும்பசுமெ மலையடிமண்ணது
தங்கும்படுச்சிலை தாதகமஞ்சள்தான்
வங்கஞ்சொறிபுள்ளி மஞ்சக்கல்நாமமே. ௬௮

தவளைக்கல்.

மண்டூகசஞ்சீவன் மருவுமாசக்கல்லு
தண்டூககாத்திரி தத்துஞ்செறிக்கல்லு
பண்டூரசித்தன் பரிவானசாபக்கல்
மண்டூரதவளைக்கல் பாங்கானபேருமே. ௬௯

சிலாவங்கம்.

கஞ்சுக்கல்லுமாங் கடுவுங்கத்தான்சிலை
வஞ்சுக்கான்பருவதம் வரையிங்குடிலந்தான்
நஞ்சுக்கல்லு நலங்குமேகச்சிலை
தஞ்சுகச்சிலாவங்கந் தன்னிடபெயரே. ௭௰

சிலாநாகம்.

நாகச்சிலைக்கல்லு நலங்குபொறிக்கல்லு
பாகச்சிலைக்கல்லு பஞ்சநிறக்கல்லு
வாகத்தருக்கல்லு மருவியதீற்றக்கல்
தாகப்பெரும்பேர் தனிநாகக்கல்லுமே. ௭௧

அன்னபேதி.

ஆதிக்கல்நாத மளவன்னகாலனும்
பேதிக்கல்சவுடு பெருத்தகநாம்புதான்
ஓதிக்கல்வேக முயன்றகல்வீரியம்
வாதிக்கிநாம மருவன்னபேதியே. ௱௨

அஸ்திபேதி.

எலும்பையுருக்கி யெலும்பைநீராக்கி
அலம்புருவஸ்திக்கி வாதியாகாலன்றன்
தலும்பியதந்தந் தண்ணிராம்வச்சிரம்
நெலும்பியேலும்பை நேர்பதிநாமமே. ௱௩

சோர்னபேதி.

குவட்டுமூலைச்சி குகைமேலநாதத்தி
அவட்டுநலத்தங்க மணுகிறசிலமாக்கி
புவட்டுகல்மஞ்சட் பொறிவானிரதிதான்
துவட்டியசொர்னஞ் சூழபேதிப்பேருமே. ௱௪

மாங்கிஷபேதி.

மலையின்துருச்சி மாங்கிஷநீருக்கி
கலையிற்கடுங்காரி கறிசிலமாக்கிதான்
இலையிற்பிணந்திண்ணி யுற்றகடுவுப்பு
வலையிற்குவடுறு மாங்கிஷபேதியே ௱௫

உவர்மண்.

பூமிசெருக்கம்பூ புதழ்மண்ணினுதமாம்
காமிகளாமண் மடுந்தணற்பூமி
சேமிற்செறுகுறு சேர்ந்தரவிகாந்தி
ஓமியநாமமுவர் மண்ணின்பேரே. ௱௬

கல்கிட்டம்.

திட்டஞ்சிலைக்கல்லு கேளுஞ்சொறிகிட்டம்
வட்டப்பறிக்கல்லு வழக்கியசெம்பிறை
ஓடடக்குமிளிக்கல்லுபர் காட்டுக்கிட்டமாம்
நெட்டொற்றநாமம் நேர்கல்லின்கிட்டமே. ௱௭

கலைமணல்.

அயமணல்வாரி யழகியவாத்துநேர்
தயமணற்குண்ணஞ் சாந்ததருவிதான்

உயமணல்சீல மோங்கியவப்பிரகங்
கயமணல்நாமங் கருமணற்பேரே. ௱௮

செம்மண்

நாகமண்காவிநலந்திடு செம்பூமிப்
பாகமண்மாலே பருகுஞ்சிவத்தமண்
வேகுமண்சித்திரம் வெருவியெழுதுமண்
தேகமன்னுமஞ் செம்மணின்பேரே. ௱௯

சுத்தமண்.

புடமண்குடோரி பூமிவெளுப்புமண்
தடமண்சரவண்சாதகப் பாலவெள்ளைக்
குடமண்ணல்லோகங் குப்பிக்கும்வெண்மண்
துடமண்சலவைமண் சுத்தமண்பேரே. ௱௰

மூடவாட்டுக்கால்.

மலேக்கால்குலேக்கால் மன்னுங்குவட்டுக்கால்
நலேக்கால்நல்மேடக்கால் நல்மலேதொங்குங்கால்
தலேக்கால்கடுமேகந் தன்னிடகெற்பக்கால்
முலேக்கால்குவட்டின்மேல் முடவாட்டின்காலின்னே. ௱௧௧

கருவண்டு.

தும்பிசுழத்தி சோரகத்தண்டுதான்
கர்பிச்சரவீணை கானசுக்கீதமாம்
வம்பிக்கரும் வெண்மலருக்குநாயகம்
செம்பிக்கரும்பிசிர் கருவண்டென்னே. ௱௧௨

பண்ணிமுள்.

ஏனத்தின்முள்ளு யெடுமூன்றுவனத்தி
கானகத்தில்சித்துங்கடிய முட்பாணமாம்
ஊனத்தின்முள்ளு வுதறும்வராகிவேல்
மேனத்துப்பண்ணி விளங்கியமிட்பேரே. ௱௧௩

எலிமுள்.

சானத்தின்சேமகன் கடிவளைக்குடியோன்
வானைத்தபூனைக்கு மருவியசத்துரோள்
ஊனைத்தமுள்ளோனுறு கின்றசுண்டெலி
தேனைத்தமுள்ளெலி செப்பியநாமமே. ௱௧௪

கடல்நுரை.

அக்குனிசால வலையிற்றிரண்டதி
தக்கினித்தீநுறை சாதகமாம்பிட
மக்கினிகூரமை வாருதிவிந்துவாம்
ஒக்கினிற்கடல் நுரையோதியநாமமே. ௱கரு

மீனெலும்பு.

மச்சத்தின் செல்விமகரமீனங்கங்
அச்சத்தின் செல்வங்கசமீனெனும்புதான்
மச்சத்தின்கச்சமுறு மீன்றலைவாளா
மிச்சத்தின் மீனினெலும்பிடநாமமே. ௱கசு

முட்சங்கு.

சுவரேமுசங்கங்கடு கண்டகச்சங்கு
நவரேமுசங்கம் நலங்குங்குலச்சங்கம்
முவரேமுசங்க முயன்றவேற்சங்கமாங்
தவரேமூரோமங்கனி முள்ளின்சங்கமே. ௱கஎ

பேரோசனை.

மன்னின்பிரட்டுமா சித்தர்மோசந்தான்
தன்னின்பசுமலை தாக்குழலூற்று
உன்னியவேகையுறங் கெட்டமல்லுதான்
பென்னியநாமம் பேரோசனைப்பேரே. ௱கஅ

நாகபச்சை.

பரிசகநின்றுபருஞ் செம்பைமச்சைதான்
வரிசைக்குளிபச்சை மாவியுடல்மேனி
கரிசக்கடும்பச்சை தானகக்கூபமாம்
நிரிசிற்றநாக பச்சையினும்மே. ௱கக

மரகதப்பச்சை.

கடும்பச்சைக்கு வடுகானகப்பச்சைதான்
நடும்பச்சைக்கல்லு நாயகமேனிதான்
மடும்பச்சைவர்னம் வான்மேகப்பச்சைதான்
நெடும்பச்சை மரகதநோனநாமமே. ௱உ௰

புத்தாம்பழம்.

புத்துக்குகைச்சி புகழ்ந்தகரும்பிதான்
மத்துக்குகைச்சிவாள் மூலம்பாலியாஞ்

சித்துக்குழைச்சிதிரண்ட கொடிச்சிதான்
அத்துக்குள்புத்தாம் பழத்துடநாமமே. ௱௨௧

வெள்ளைச்சுக்கன்.

வெண்கல்லுமண்கல்லு விலங்கும்வயற்கல்லு
பண்கல்லுசீராட்டம் பாயும்ரவிக்கல்லு
தண்கல்லுவங்கந்தானே விளையுங்கல்
உண்கல்லுவெள்ளையுயர் சுக்கான்கல்லுமே. ௱௨௨

கதண்டு.

கானகந்தும்பிகரி முகவானையாம்
வானகப்புதைச்சி வச்சிரதலைச்சிதான்
தேனகக்குடிச்சி சித்தர்மகிட்சி
ஊனகக்கதண்டி னுரைத்திடுநாமமே. ௱௨௩

காகச்சிலை.

காசிக்கல்மூங்கில் கருமுகில்தண்டுக்கல்
வாசிக்கல்வானக்கல் மாருதவண்ணக்கல்
ஆசிக்கல்சிக்கலளவாந் திரணிக்கல்
தாசிகால்நாமந்தனி காகச்சிலையென்றே. ௱௨௪

காண்டாமிருகக்கோட்டு.

காண்டகக்கொந்தளங்கடி மொற்றக்கொம்பனும்
நீண்டகயானைநேர் கருஞ்சாணிதான்
பூண்புகக்கைப்புயன் போக்கும்விடதாரி
ஊண்டகக்காண்டா மிருகத்தினுமமே. ௱௨௫

கஸ்தூரியெலும்பு.

வீணைமிருகமேலா முதிர்ந்தான்
வாணைமிருகமாங்கிட வாசத்தோன்
பூனைக்கடுவாநிகழ் வாகச்சொல்லியங்
கானயகஸ்தூரிமிருகத் தெலும்பென்றே. ௱௨௬

மந்தாரச்சிலை.

மேகமந்தார விளங்கியவர்னக்கல்
பாகம்பலவர் னம்பகரிற்கனற்சிலை
வாகங்குலவரை மதிமேகக்கல்லது
நாகவேமந்தா ரச்சிலையுடநாமமே. ௱௨௭

கடற்பாசி.

வாருதிப்பாசி மருவியபின்னல்தான்
காருதிச்சீவல் நடுவேலைகந்தரம்
நேருதிப்பாசி நீங்காச்செலமலம்
மாருதி கடலுக்குள்ளடங்கியபாசியே. ௱௨அ

சாலக்கிராமம்.

தன் மலைத்தாசிதானனமூவர்கல்
வன்மலைத்தக்க மருவியகெர்ப்பத்தி
உன்மலைச்சக்கர முயர்ந்தமால்வீடுதான்
பின்மலைச்சாலக் கிராமத்தின்பேரே. ௱௨௯

மாங்கிஷச்சிலை.

சதைநிறஞ்சென் னிறந்தங்குஞ்சடம்நிறம்
உதைநிறமான வூட்டியகார்நிறம்
பதநிறமண்ணிறம் பாங்கிச்சிலைநிறம்
மதிநிறம்போல மாங்கிஷச்சிலையே. க௩௰

மாந்துளிர்க்கல்.

ரவிநிறந்தேனிறம் நிலங்கியபூநிறஞ்
செவிநிறந்தேனிறஞ் செம்பினிறங்கான்
தவிநிறந்தன்னிறந் தனிமாதளச்சிலை
வலிநிறமாந்துளிர்க் கல்விடநாமமே. ௱௩க

காலப்படிகம்.

சிவனிடதேகத் தேவிக்குமுத்திரை
அவனெனக்காந்தியழ காமதிக்காத்தி
புவனெனவச்சிரப் பூமிக்குநாயகன்
தவனெனவேகந் தவித்தபடிகமே. ௱௩௨

கல்காவி.

மாந்துளிர்விச்சிலை மருவியசெஞ்சிலை
சேந்துயர்மண்சிலை செம்மண்சிலையென்றும்
ஆய்ந்துயர்காந்தியாதிரவிச்சிலை
காந்தியமேனிகல் காவியன்பேரே. ௱௩௩

செம்பூமணல்.

செவ்வியரவிமணல் சிவந்திடுலோகமண்
கவ்வாயதாம்புரங் கலந்திடுவர்னமண்

நவ்வாயச்செம்பொடி நாட்டியசெங்கோலம்
தவ்வாயசெய்பின் தண்மணல்நாமமே ௱௫௪

நாவமணல்.

மின்னல்தனக்கு விளங்கியசீரல்தான்
கன்னரல்ரசிதங் கருவஞ்சுவானத்தான்
தன்னன்பொன்விந்து சாதகவாதிதான்
நன்னலர்நாகமணலிடநாமமே. ௱௫௫

வங்கமணல்.

கெடுப்பிணையடிப்பிணை கேளுங்குடிலந்தான்
நெடுப்பிணைசவளைநேர் கொடிவங்கமா
மடிப்பிணைகைப்பிணை மாருதிநாபந்தான்
வடிப்பிணைவங்க மணலுடநாமமே. ௱௫௬

ஈயமணல்.

மித்துருபதுமை வெறுவேதைச்சத்துரு
அத்மிருக்கமிஷமகத் தியராசன்
நத்துருவர்னம் நாட்டியநாதனும்
இத்துருநாமங்க ளீயத்தின்பேருமே. ௱௫௭

வெள்ளிமணல்.

வாரியசீநம்வழங்கிடு வெண்மணல்
தாரியமோடுசார்ந்த மதிமணல்
கூடியதுய்யான்குத மணலென்றுபேர்
ஆறியவெள்ளிமண லிடநாமமே. ௱௫௮

எமமணல்.

மேருவின்மாரி விளங்கும்பரிமணல்
தாருவும்துண்டந்தளி நாகச்சாரத்தான்
காருமதிதனுகளை யினுஞ்செம்பொன்னும்
சேருநல்லேம மணலுடநாமமே. ௱௫௯

லோகமணல்.

கருமலைவாரி கறுத்தகருமணல்
தருமலையிரும்பு சாதகக்கருமணல்
திருமலைப்பிறங்கஞ் சேர்கிஷ்ணலோகமா
முருமணல்வாரிலோக மணலென்றே. ௱௬௰

மயிலிறகு.

மயூரமகிலமன் னுயிராட்சதன்
கையூரநல்மேகத்தின் களித்திடுதகசிதான்
தையூரறுமுகன்று னேறுவாகன
மயூரமயிலினிற குடனுமமே. ௱சக

கருஞ்சுக்கான்.

கருமணல்சு ங்கான் காவளைசுக்கான்தான்
தருமணல்சுக்கான் தனிக்காச்சுக்கானும்
திருமணல்பொருக்குச் சேந்ததரும்பாறை
அறுமணற்கருத்த சுக்கானிடநாமமே. ௱சஉ

கானக்கல்பெயர்

தரணிவரிக்கல்லு சாதகமாக்கல்லு
நிரணியசர்ரை நேர்புன்னிக்கல்லுதான்
அரணியசெம்பிறையாதி யுளுவைக்கல்
கரணியநாமம் கானக்கல்பேரே. ௱சங

குருந்தக்கல்லின் பெயர்.

கோளகைமச்சிரங் கெடுஞ்சாணைக்கல்லு
நீளகவயிரம்நே ரொத்தரூமமாம்
வாளகப்பூச்சிலை மருவியரம்பமாம்
தாளகக்குருந்தந்தனிக் கல்லின்பெயரே. ௱சச

ரசிதச்சிலைபெயர்

ஈசானமேருயிசை வெள்ளக்குண் ணுமாம்
மாசானபருவத மடங்கமதிமலை
ஆசான்வெள்ளம்பல மதிமலைநாதமாம்
காசாறசிதமலை யென்றுநாமமே. ௱சரு

ஏமச்சிலையின் பெயர்.

மேருகொடுங்கை வெண்ணுவற்சாரல்
வாரும்புவிமையம் வளர்ந்திடுமேமமாந்
தாரும்புவனம் சதாசிவாசந்தான்
சாருபூயேம மலையுடநாமமே. ௱சசு

நாகச்சிலையின் பெயர்.

மந்தரநாகமணி முடிசர்ப்பமாம்
விந்தரபூச்சள் மேவியவாகன்

அந்தத்தூம மழகாங்குலவரை
நந்தரநாகச் சிலையுடனுமமே. ௱௪௭

வங்கச்சிலை.

பங்கக்குவடு மாருதிகுடிலமாம்
வங்கக்குவடு தேவியுடபீசந்தான்
சிங்கக்குவடு பானுவுன்தன்மூலம்
தங்கக்குணமாகுந் தனிவங்கச்சிலையுமே ௱௪௮

ஈயச்சிலை.

காரிகடுமலை கானகத்தீயமாம்
நாரியபரிசனம் நமனும்பரிக்கிது
வாரிசக்குவளைமலை யெனுங்காரீயம்
பாரியயீயப்படர்மலைப் பேருமே ௱௪௯

அயச்சிலை.

காந்தவயசுகடுகிய குண்ணமாம்
வாந்தலோகம் வளர்ச்சிவனுளமலை
யேந்தியவாயுத மிழுங்குங்கருமலை
ஆந்தியகாந்தத் தயமலைப்பேருமே. ௱௫௰

திராமலை.

கொட்டத்திரச்சி கூறியதோர்மலை
அட்டக்குவடு வந்தகன்பீடமா
முட்டக்கலிப்புழு தண்டவெட்டைதான்
தட்டத்திராவின் றன்மலைப்பேருமே. ௱௫௧

வெங்கமலை.

கோழங்கொடுமலை கோமணிகுண்ணமாங்
காழங்கலநாதங் கடிதுருசந்துமே
வேழந்தனுகை மேலாங்குறுங்குண்ணி
மாழமாம்வெங்கல மலையினுமமே. ௱௫௨

செம்மலை.

ரவிகுலக்குண்ணம் நலங்குசெம்படிபலம்
ரவிகுலமேரு நாதக்குவடுதான்
ரவிகுலக்குண்ணம் நலக்கியசெம்பொன்னும்
ரவிகுலசெம்பாம் மலையுடைநாமமே. ௱௫௩

பித்தளை மலை.

கோங்குபொன்வர்னங் குவன்படருவதங்
தாங்கியசீனி சரிகைமலையென்பார்
வாங்குநல்நாளிக்க மந்தாரபீதமாம்
ஆங்குநல்பித்தலைச்சியுடனுமமே. ௱௫௪

உபரசச்சரக்கு முற்றிற்று

விருத்தம்.

பாங்கானவுபரசங்கள் நூற்றிரண்டுபத்து
பரிவாகவொன்ருென்ருய் விரித்துச்சொன்னேனன்
வாங்காகவுபரசங்கள் யெங்கேகாண்பான்
வாய்ப்பேச்சுவாதத்தால் மண்ணுமில்லை
ஓங்காகவுபரசந்தான் சாரணைக்குவாதி
வுத்தமனேவொவ் பொன்றிற்கோடிவேதை
தேங்காதகருவெல்லாம் நிசண்டிற்சொன்னேன்
சிறுபிள்ளையாடுமித்த மிந்தவாதந்தானே. ௱௫௫

பாஷாணம்மலை தோறும்பிறந்தது தானப்பா
பாங்காகமுப்பத்திரண்டு நாமம்
பாஷணம்வொவ் வொன்றில்நாமபேதம்
பாடிஞர் வாயுள்ளசித்தரப்பா
பாஷாணப்பிறப்பி தென்றுசொல்லர்சொல்லார்
பாடினதோர் சாஸ்திரத்திற்பலந்தானேது
பாஷாணகுலத்தோடு நாதக்கள்சொன்ன
பரிபாஷைகருவெல்லாம் பாடுறேனே. ௱௫௬

தாதுவாகியபாஷாணப்பிறப்பு.

கற்கடப்பாஷாணம்.

கந்தர்கவுந்தங் கல்லடிமூலம்
விந்தர்கஞ்ச மேலுமைதாதுதான்
பந்தரப்பாணிபார் மூலக்காணிபாம்
அந்தர்கற்கடகப் பாஷாணப்பேருமே. ௱௫௭

கௌக பாஷாணம்.

கொங்கங்குடகங்கூ விளங்குந்தமாம்
சங்கங்கவுந்தங் காரமகோரந்தான்

அங்கமெனந்தபாணிப் பாஷாணந்தான்
பங்கமாங்கொதிப் பாஷப்பேருமே. ௱௫௮

சூதபாஷாணம்.

அந்தரகெந்தனா திவராட்டியன்
சுந்தரஞ்சொற் குறிநாமமகாமர
மந்தரமஞ்சி மாருதமகிபன்றான்
விப்தரஞ்சூதமாம் பாஷாணப்பேருமே. ௱௫௯

அரிதாரம்.

மாலுடன்பாக மருவியலட்சுமி
சேலுடன்கன்னிசிறு மூக்கறச்சிதான்
ஆலுடகொடிச்சி தானாதிதான்சத்தி
மேலுடனரிமின் தாரத்தின்பேருமே. ௱௬௰

கெந்தம்.

கந்திபொன்வர்னங் காரிழைநாதமாம்
அந்திபநாறும்பூவதி ரசசுரோணிதாம்
தந்தியசத்திதன் மாதக்குணச்சலாம்
பந்தியகெந்தகப் பரிபாஷைநாமமே ௱௬௧

வீரம்.

ஆதிரவுத்தினதி வெள்ளைசெந்தூரம்
வாதியகர்கெற்பம் வகாத்தலைவனும்
ஓதிவிபூவிந்து வுத்தமசேவகன்
மாதியபூமியில்வள்ளைச் சவ்வீரமே ௱௬௨

வைக்கிராந்தபாஷாணம்.

வைக்குங்குமூர்தமா முகிற்சுன்னமாங்
கைக்குங்கொடுமைகான னவிற்குண்ணது
மைக்குநல்பூமா மலைநாதமாகுப்
ஐக்கும்வைகிராந்த மரகின்றநாமமே. ௱௬௩

தாலப் பாஷாணம்

தாலமருந்தஞ் சாதகலம்பமாம்
மூலங்கடுங்கும்பம் மும்மதக்கோடுதான்
கோலநற்சாங்கங் கோபுளகந்தான்
ஆலமாந்தாலப் பாஷணநாமமே. ௱௬௪

மூர்தபாஷாணம்.

ஆதியனந்தனங் கவன்புங்கவன்
காதியகாசாங்கன சாரணன்பூரணன்
மேதிக்கவுனன் வேந்தன்வெகுளியாம்
மோதியமூர்த பாஷாணநாமமே. ௱௬௫

சிற்பந்தபாஷாணம்.

கந்தன்கபாலன் கடுமேகச்சாய்கையோன்
அந்தன்சிரசோனந்தகன் சம்புதான்
பந்தன்பரமன் பாயுறுகெர்ப்பத்தோன்
சிந்தன்சிற்பந்தப் பாஷாணப்பேருமே. ௱௬௬

தொட்டியபாஷாணம்.

தோத்திரபலகை துலங்குபூவோடு
மாத்திரச்சிலாமை மந்தாரவேறுதான்
கோத்திரங்குறிஞ்சில் கு பகலிபமாம்
பாத்திரந்தொட்டிப் பாஷாணப்பேருமே. ௱௬௭

குதிரைப்பால்பாஷாணம்.

தந்தஞ்சுணவன் சரமுறுவாசியோன்
விந்தங்கவுனி விளங்கியகற்பல்லு
பந்தங்கவரிசைப் பல்லுருசெங்களை
அந்தங்குதிரைப்பால் பாஷாணப்பேருமே. ௱௬௮

சங்கபாஷாணம்.

தவளச்சங்கஞ் சாதகக்குவடுதான்
புவளம்புனிதம் பொங்கியதோஷமாம்
மவிளங்கச்சமாகிய வெண்சிறஞ்
சவளமாஞ்சங்கப் பாஷாணநாமமே. ௱௬௯

கௌரிபாஷாணம்.

கேகயபூதங் கெந்தம்மந்தமாம்
ஆகயமாஞ் சிலாதிக்குமரிதான்
பாகயமிந்துபரி வாங்குறுக்கந்தான்
வாகயகெவுரியாம் பாஷாணநாமமே. ௱௭௰

துற்றபாஷாணம்.

தூம்பிரகோபஞ் சுந்தாத்தாவதுவாம்
தாம்பிரகெர்ப்பம் தாளமற்சிதமாய்

வாம்புரக்கோபம் வன்னக்கவங்கந்தான்
வேம்புரதுத்தத்தின் வொட்டியநாமமே. ௱எக

பலண்டுறுகப்பாஷாணம்.

பாகம்யோகப் பரிவாகும்பாங்கமாம்
வாகந்தாகம மர்ந்துமதுரமாம்
வேகம்விடிவிம்பம் வேதக்குருக்குல
மாகப்பலண்டுறு பாஷாணப்பேறுமே. ௱எ௨

கந்தபாஷாணம்.

கருநிறவாயுக் காலன்சனியனும்
உறுநிறச்சீவன் தானேங்கியவன்னி
தருநிறபஞ்சா சாதக்காக்ஷி
அருநிறக்காந்தமாம் பாஷாணம்பேருமே. ௱எ௩

லிங்கபாஷாணம்.

வன்னியின்கெர்ப்பமகத் தானசண்டகன்
கன்னியபெருமான் காரணமாம்லிங்கம்
தன்னிச்சமரசம் சார்வானசெந்தூரம்
அன்னிப்பிறந்திடும் லிங்கத்தின்பெயரே. ௱எ௪

சரக்கண்டபாஷாணம்.

அப்புறுத்தூணி யாகுஞ்சரம்பரம்
நப்பிறுக்காண்டம் நல்குந்தனுப்பாணம்
ஒப்பிறுச்சீவம் வோங்கியகாண்டிபம்
தப்பெறுவாமஞ் சரக்காண்டப்பேருமே. ௱எ௫

தாளகம்.

மாலுடபாக மகத்தாலட்சுமி
பாலுடநாழிதான் பகருங்குடியாள்
கோலுடகுண சலிகுங்குமவர்னச்சி
ஆலுடதாளக மறைந்திடுநாமமே. ௱எ௬

மனேசிலை.

நாமுகன்வேவி நலங்குஞ்சரசோதி
வான்முகவாணி மருவியவெள்ளச்சி
தாமுகவாக்கி தாமரைவாசினி
கோமுகநாமக் கொடுமனேசிலைக்குமே. ௱எ௭

அவுபல் பாஷாணம்.

அவறஞ்சவல மந்தகந்தமம்
உவலமுருண்டு கமுத்தமசத்துத்
தவலங்குவலஞ் சராசரப்பாசாணம்
பவலமவுபல பாசாணப்பேருமே. ௱எ௯

சலாங்க பாஷாணம்.

யம்பமருபஞ் சாதகக்கும்பமாம்
வப்பஞ்சரப்ப மந்தகக்காந்தமாம்
விம்பம்போகம் விளங்கியவூஷரம்
அம்பஞ்சலாங்கப் பாசாணப்பேருமே. ௱எ௯

கற்பரி பாஷாணம்.

நிதம்பபாந்தம் நெருங் தங்குலிசனும்
விதப்பமாஞ் சந்தமேவியமேதச்சி
கதம்பங்கருமமாங் கானகத்தின்தூமம்
அதம்பமாங்கற் பரிப்பாஷாணப்பேருமே. ௱அ௰

கற்பாஷாணம்.

பாசம்பரிசம் பரவியாகாசம்
ஆசமாங்குந்தர மந்தரச்சிந்துவாம்
கோசங்குமுதங் கூவிளம்பூவிளம்
ஆசங்கற்பாசப் பாஷாணநாமமே. ௱அ௧

அஞ்சனம் பாஷாணம்.

தூரமாந்துட்டி சொற்சிலைவங்கந்தான்
கூரமாகக்கிணங் கொல்லன்பகைசாரி
ஆரமாஞ்சிலைகாரி வயத்துக்குவந்தகன்
பாரமாமஞ்சனப் பாஷாணப்பேருமே. ௱அ௨

கச்சலப் பாஷாணம்.

அச்சமனந்த ஞதிவராகன்தான்
மச்சரூபன்மறையுருக் குலத்தோன்
தச்சமசந்தன் தாசகக்கிள்ளையோன்
கச்சமகச்சாலப் பாஷாணப்பேருமே. ௱அ௩

சீதாங்கப் பாஷாணம்.

சீதமங்கிடச் சேந்திடுவளையமாம்
பாதம்பரிசம் பன்னங்குஞ்சாத்தன்

நீதம்பரிமள நிட்களகல்லுதான்
ஆதஞ்சிதாங்காப்பா ஷாணப்பேருமே. ௱அச

சிலாமதப் பாஷாணம்.

மந்திரவுதிரமரு வியாற்குறி
விந்தரந்தூமை விளங்கியகற்கனம்
பந்தரங்காந்தியாற் பாயுறுமோணிதான்
அந்தரசிலாமதப் பாஷாணப்பேரும். ௱அரு

கார்முகிற் பாஷாணம்.

கனலொடுவாயுக் கலந்திடுஞ்சூதம்
அனலொடு வேந்தனு நுமகாவிந்து
பனலொடு மேமம்பரித்திடுந்தாரையாம்
வனலோடு கார்முகில்வளந்தபாஷாணமே. ௱அசு

அப்பிரகம்.

பூமியின்கல்லுபுகழ்ந்த மலைப்பாதம்
வாமியின்தீட்டம் வழியுடகாந்திதான்
காமியசத்திகந்தாப் பாச்சிதான்
ஓமியவப்பிரகம் பாஷாணப்பேருமே. ௱அஎ

வெள்ளைப் பாஷாணம்.

வெள்ளைவிடயம் மேருயசங்கமாம்
தள்ளைவிளைவளம் சமாசபாகந்தன்
உள்ளைக்குமுதமோங்கும் படிகந்தான்
நள்ளையவெள்ளைப் பாஷாணநாமமே. ௱அஅ

தாதுப்பிறப்பு-௩௨-ம்-முற்றும்.

விருத்தம்.

போானமுப்பத்தி ரண்டுதாது
பிறந்துநின்றமலைசொன்னேன் பேருஞ்சொன்னேன்
வாரானநாதாக்கள் மறைப்பாய்ச்சொன்ன
மறைப்பெல்லாம் நிகண்டாகத்திதந்துபோட்டேன்
ஊரானசாஸ்திரத்தைப் பார்த்துக்கெட்ட
ஓங்கியமோர்வாதிகட்கு வுயிருஞ்சொன்னேன்
காரானமூலத்தில் நந்திசொல்லக்
கரைநடந்தபாஷாணம் பேருஞ்சொன்னேன் ௱அகூ

பரங்கிவைப்புப் பாஷாணப்பேர்

வேறு

தோட்டிப் பாஷாணம்.

ஓடுபுத்தோடு வுலவமாம்பலகைதான்
ஆடுபுச்செப்புப் தொட்டியென்பார்சிலர்
நாடுநல்லெருமைநற் றொட்டிதானென்பார்
கூடும்பொறிச்சிக் குலாவுபேர்தொட்டியே. ௱௯௰

சிலாகி பாஷாணம்.

குலாவும்பொறுச்சிக் கூடியபேர்யுள்ளி
நிலாவுங்கறுப்பி னெரியபாண்டத்தி
அலாவுஞ்சிவம்பு வாகியாஞ்செப்பிச்சி
கலாவுனுற்றொட்டிப் பாசாணங்கண்டிடே. ௱௯௧

மிருதார் சிங்கு.

ரசிதமிருதாரு நலங்கியபொன்வண்ணம்
அசிதச்சிவப்பு வகாக்களங்குதான்
மசிதநல்வங்க மருவியயீயந்தான்
கசிதமிருதமிததாரகச் சிங்கிநாமமே. ௱௯௨

தீமுறுகற் பாஷாணம்.

அண்டமுறுகல்லடி பட்டகாந்திதான்
கண்டங்கருங்கல் கார்முகில்வர்னமாம்
தண்டங்கிறிச் சல்சமைந்திடுகைந்தாம்
பண்டந்தீமுறுகற் பாஷாணப்பேருமே. ௱௯௩

கருமுகிற் பாஷாணம்.

காத்தாயமுதாங் காரண்டவைப்பது
வாக்காய்முகில்நிறம் வாசுகன்மூச்சுதான்
தாக்காய்பதங்கஞ்சமை யுத்தநாறிதான்
காக்காய்கருமுகிற் பாஷாணம்பேருமே. ௱௯௪

சாதிலிங்கம்.

சண்டமதாதஞ் சாதிப்பதங்காம்
கண்டம்பவலங்கடு வன்னிகெற்பந்தான்
இண்டமாமிங்குள மிசைந்தசிவத்தி
பண்டமாஞ்சாதிப் பருலிங்கப்பேருமே. ௱௯௫

வெள்ளைப்பாசாணம்.

எலிக்குநற்காலனியல் விஷராஜனும்
அலிக்குக்கொடு விடமாகாதவெள்ளைதான்
மலிக்குக்குடோரி மன்னுயிர்காலனும்
பலிக்கியவெள்ளைப் பாஷாணப்பேருமே. ௱௯௬

கௌரிபாசாணம்.

சங்கரன்பெண்டீர் சார்வானபொன்னிச்சி
ஐங்கரனுயி வானந்தவாதிச்சி
பொங்கரவணிந்தோன் புகழுடன்மாகத்தி
தங்கியகௌரிக்குச் சாற்றியநாமமே. ௱௯௭

சவ்வீரம்.

ஏறியவீரமெவரைக் கூடினேன்
ஆறியவிற்பனனதி வெள்ளைச்செந்தூரந்
தேறியசேவகன் சேர்பிடராஜனும்
கூறியவீரங் கொள்கியநாமமே. ௱௯௮

கோழித்தலைக்கெந்தி.

குக்குடச்சூடு கொந்தலைக்கெந்திரன்
தக்குடச்செம்பி சாதகராகத்தி
அக்குடப்பாணி யானந்தவல்லியாம்
தெக்குடக்கோழித்தலைக் கெந்திப்பேருமே. ௱௯௯

வாணக் கெந்தி.

படைக்குவாசன் பாங்காஞ்சுரைக்கெந்தி
முடைக்குவாச மூதண்டநாதம்
விடைக்குவாசன் வேந்தனுக்கேதாரம்
கடைக்குவாசன் கடுவாணக்கெந்தியே. ௨௱

வைப்பரிதாரம்.

கொச்சிக்குளந்தைக் கூடும்பிராமணி
அச்சிநடச்சி வரியுடதாரத்தி
மெச்சிகனத்தி விளங்குந்தனத்திதான்
வைச்சிவைப்பாமரி தாரப்பேருமே. ௨௱௧

பவளப்புத்துப்பாஷாணம்.

புத்துப்பவழம் பொருந்துங்குழியா
மத்துக்கொடிச்சி வழங்குங்கரடகி

எத்துச்சுளக்கி யியைந்தகுழச்சிதான்
பத்துப்பவழப்புத்துப் பாஷாணமே. ௨௱௨

கோடாசோரி

குருமுறைமன்னன் கொடியதோர்வீரம்
அருமறைக்களிம்பு வகற்றியவண்ணன்
தருமுறைச்சோரன் தனிவாதராசன்
பெருமுறைக்கோடா சொரியின்பேருமே. ௨௱௩

பஞ்சபக்ஷி பாஷாணம்.

சித்திரபக்ஷிசேர்ந் தஞ்சிவன்னத்தி
மத்தியமாயமரு வியவைம்புலம்
பத்திரன்பாவை பரங்கிக்கிப்பூதமாம்
அத்திரபஞ்ச பக்ஷியினாமமே. ௨௱௪

குங்கும பாசாணம்.

மஞ்சலரும்பி மாதுக்குமாதுதான்
அஞ்சற்குழைச்சியான பொற்கொங்கைச்சி
கஞ்சுக்கமளிகடிய பொன்னாண்டிச்சி
கொஞ்சநற்குங்கும பாஷாணப்பேருமே. ௨௱௫

இரத்தபாசாணம்.

பறங்கிச்சிறிக்கிப் பார்ப்பாரக்கன்னியா
யறங்கிச்சிறிக்கி யாண்டிச்சிப்பொன்னிச்சி
தறங்கிச்சிவப்பி சாதகவன்னத்தி
பறங்கியறத்த பாஷாணப்பேருமே. ௨௱௬

துத்தம்.

துத்தங்கவரி தூம்புரசிப்பிச்சி
அத்தமிரசித மாகியகற்பரி
முத்தஞ்செய்காகம் முதிர்ந்தசொறியனும்
பத்தம்பற்றுத்தம் பரங்கானபேருமே. ௨௱௭

துரிசு.

நீலக்கள்ளிசேரிய கண்டர்தான்
கோலலவணக் கொடியசிவசத்தி
ஆலமுடையயோனதி சுடலையான்
மாலான்மேனிவாள் பச்சைமேனியே. ௨௱௮

மேனிக்குருகுல வேதாந்தவாதிதான்
பாணிசதாசிவன் பரிசுத்தப்பாணியாம்
ஆணிமுடி நீலமாதிமகாகுரு
வாணிதுரிசியின் மகத்தானநாமமே. ௨௱௬

ரசிதப்பாசாணம்.

ஆண்டிமதிக்குல மந்தமவெள்ளச்சி
பூண்டில்நெடுமண் பொங்கியகொங்கைதான்
காண்டில்நல் வெள்ளைகடுகியகாந்திதான்
ஊண்டில்ரசிதப் பாஷாணப்பேருமே. ௨௱௰

சூதபாசாணம்.

சிலையானசூதமாம் சேர்ந்தகணவனும்
மலையாங்குறவனும் வாசுகிநாதந்தான்
கலையானகந்தன்காவக்குடியோனும்
நிலையானசூதகப்பாஷாணப்பேருமே. ௨௱௧௧

நீலப்பாசாணம்.

வன்னக்கறுப்பிவெப்பானநீலிதான்
கன்னக்கரணக்காங்கயசோமனும்
தன்னந்தனஞ்செயன் சந்திரமௌலியாம்
நின்னக்கடுவேகன் நீலப்பாஷாணமே. ௨௱௧௨

கெந்தப்பாசாணம்.

நாத்தன்சடங்கன் நலம்பெறுநாதனும்
பாத்தன்விசையன் பாங்கானபுங்கவன்
மூத்தன்முயலகன் மூதண்டசத்திதான்
ஆத்தனுங்கெந்த கப்பாசாணநாமமே. ௨௱௧௩

சோர பாசாணம்.

களவன்கந்தன்கார் முகன்கண்ணன்றூன்
அளவனனந்தனுதி விராட்டியன்
இளவன்திருடனிசை லோகமாரணன்
துளவனும்சோர பாசாணப்பேருமே. ௨௱௧௪

காகப் பாசாணம்.

வாசிக்கொடியோன் மைந்தன்கருமுகில்
ஆசிக்கருப்பனந்த கன்வாசனன்

மாசிக்குருக்கன் மாருதிவாசகன்
காசிக்கருமுகில் காகபாஷணமே. ௨௧௫

லவணப்பாசாணம்.

ஆணிச்செருக்க மாதித்தன்கூர்மை
நீணித்தவுப்பில் நிலைத்திட்டவுப்பிலி
காணித்தகப்பிகடு கும்பதங்கனும்
வாணித்தலவணப்பாசாணமாமிதே. ௨௧௬

நாகபாசாணம்.

சீறல்பொருமால் சிறந்திடுஞ்சற்பத்தி
ஆறல்முறுகல னந்தகமாபங்கம்
கூறல்குலிசங் கொடியகுடிலந்தான்
பேறலாம்நாக பாசாணத்தின்பேருமே. ௨௧௭

இந்திரபாசாணம்.

இந்திரசத்தியியல் பாம்மாகாகன்னி
மந்திரரூபிவானவர் போற்றிதான்
அந்திரக்குடிலச் சியழகுதுரைச்சிபெண்
தந்திரயிந்திர பாஷாணப்பேருமே. ௨௧௮

விருத்தம்.

தந்திரமாய்ப்பாங்கி வைத்தவைப்பதெல்லாம்
சாதகமாய்முப் பத்திரண்டுதாது
அந்திரமாய்ச்சித்த ரிட்டநாமமெல்லாம்
அளவிட்டுச்சொதலி விட்டேன்ல்லநூல்மார்க்கம்
எந்திரமாய்ச்சுட்டாலும் போர்த்தப்பாலே
யெடுத்தநூன்முறை யெல்லாம்பொய்யாப்போகும்
மந்திரமாய்ப்பாட்டாகி விருத்தமாகி
வகையானவெண் பாவாய்மறைந்திட்டாரே. ௨௧௯

மறைந்திட்டவுபச மும்சூரமப்பா
மைந்தனேபாஷாணப் பிறைப்பவைப்பு
மறைந்திட்டசாஸ்திரத்தை வொவ்வொன்றாக
வாகாகமலேபோல நிகண்டாய்க்கோர்த்தேன்
மறைந்திட்டமறைப் பெல்லாம்வெளியதாக
வாதமென்றபிறட்டை யெல்லாம்வாகாய்சொன்னேன்
மறைந்திட்டகருவை யெல்லாம்தொட்டேயாடு
வாதமென்றசொல்லெல்லா நிகண்டிலாச்சே ௨௨௰

நவலோகத்தின்பெயர்.

பொன்.

ஆதிசெய்நாக மாணிபட்டறியது
மதியதுதனு மன்னியேமேருவாம்
ஓதிப்பெருந் தாயுத்தமபிசந்தான்
பாதித்தன்வித்தென்பார் மன்னியசொர்ணமே. ௨௨௧

தங்கம்.

சொன்னத்தகடு சுகமானகுந்தனம்
வன்னப்பசுமை மகத்தானதாண்டவம்
பன்னப்பசுங்குரு பாருக்குநாயகன்
தன்னமாய்நின்றதங்கத்தின்பேருமே. ௨௨௨

வெள்ளி.

குணுக்குறுதுத்தம்குலாவும்பாசிதான்
இனுக்குயெருமை யியலியநாக்குதான்
தணுக்குத்தசினி தனிக்கோட்டைக்கரசா
மணுக்கியல்வஸ்துவாம் வாதக்கருத்தென்னே ௨௨௩

இதுவும் அது.

கருதியதுய்யான் காணுமதிசென்பார்
அருதியவான் மீனுகியரூபாய்தான்
நெருதியாசிதநேர் பெறுதாரமாம்
பருகியவெள்ளிப் பகுந்திடும்நாமமே. ௨௨௪

செம்பு.

செந்திலோராசி சிறந்தாவியென்பார்
பந்தலேதாம்பரம் பழுப்பின்காளிக்கம்
அந்தலேப்பரிதியா கியவிடமாம்
மந்தலேசெம்பின் வழங்கியநாமமே. ௨௨௫

காரியம்.

காரிகளங்கைகவ்வுங் கிராவணம்
வாரிகருநாக மன்னுஞ்சவளேயாம்
பாரிகணவன் பலதோஷம்போக்குவான்
ஆரியகாரீயத் தமைந்திடுநாமமே. ௨௨௬

வெள்ளீயம்.

வங்கங்குடிலம் மகத்தாவெண்ணகம்
சிங்கப்பறிக்கிச் சீயறச்சேவகன்

பங்கம்நவலோகம் படுத்துஞ்சூரனும்
பொங்கமாம்வெள்ளீயம் புகழ்ந்திடும்நாமமே உஉஎ

நாகம்.

சீறல்பொருமல் சிறந்திடுபொங்கல்தான்
கூலவிறைச்சல் கூடியவைம்புகை
மாறல்நற்சோரமரு வியவண்ணகந்தான்
தேறல்நல்வாதிச் சேர்நாகப்பேருமே. உஉஅ

பித்தளை.

ஊத்தல்பரிதாது உடைச்சல்முக்குறை
வாத்தல்குட்வன் ப.ன்னியகாளிக்கம்
நாத்தம்பசும் பொன்னலங்கியசேருவை
ஆத்தல்பித்தனைக் கறைந்திட்டநாமமே. உஉசு

வெண்கலம்.

கஞ்சகங்கோஷம் கடிகியநாதமாம்
வஞ்சகங்கண்ணடி மாருதமாமணி
பஞ்சகங்கிண்ணி பரவியதன்னேசை
தஞ்சமாம்வெண்கலஞ் சாற்றியநாமமே. உ௩௰

திரசுதி.

கொட்டச்சிவட்டுக் கூனுங்கருலோக
மொட்டச்சிமந்த முறியமுறிசல்தான்
வட்டச்சிமட்டு வராகுநல்லோகந்தான்
திட்டச்சியான திராவிடநாமமே. உ௩க

இரும்பு.

அயசுகருப்பு வடர்ந்தகருமணல்
வயசுகொடுக்கும் தாழ்பூமிநாதமாம்
சுயசுச்சரோசரங் காலில்நெகிளந்தான்
இயசுபுடச்செய் யிரும்பிடநாமமே. உ௩உ

உருக்கு.

உருக்குவொளிகறையோங்கு பணிவாளந்தான்
அருக்கிறதீக்ஷன் மயக்கமசுதரன்
மருக்கியவுருக்குமலைக் குக்குடோரிதான்
தருக்கியவுருக்கின் சாற்றியநாமமே. உ௩௩

விருத்தம்.

பாகானலோகமது பதினொன்றுக்கும்
பரிபாஷைநாமமெல்லாம் பாங்காய்ச்சொன்னேன்
வாகானலோகத்தின் பேரைக்கண்டு
மாட்டுகிறயினங்கொண்டு வரிசைகண்டு
தாகானகனன்கொடு செந்தூரஞ்சுன்னம்
சாத்திரத்திற் சொன்னபடிதாக்கியாடு
ஏதானதொன்றுமில்லை யெல்லாஞ்சித்தி
யெடுத்தமுறைதப்பினல் பொய்யுமாமே ௨௩௪

வேறு.

குருமுறை மார்க்கஞ் செய்யும்படி.

சாரக்குரு.

சாரஞ்சாகுஞ்சாய்த்திடில் வங்கத்தை
சாரஞ்சாகுஞ்சாய்த்திடில் நாகத்தை
சாரஞ்சாகுஞ்சாய்த்திடில் நிமிளையை
சாரஞ்சாகுஞ்சாய்த்திடில் சாகுமே. ௨௩௫

சாகுஞ்சாரந் தனித்தயிணங்கனிற்
சாகுஞ்சாரந் தாவியநண்டரில்
சாகுஞ்சாரஞ் சமைத்தகல்லுப்பினல்
சாகுஞ்சாரஞ் சவுக்காரந்தாக்கிடே ௨௩௬

தாக்கியசாரந்தனிக் குருவாகவே
நோக்கியளமனு கர்ந்திடுஞ்சீனமும்
வார்க்கியபுழுகொடு வகையெட்டுக்கொன்றுதான்
தூக்கியேபூசிச் சூழப்பிடமிடே. ௨௩௭

பிடத்தினிற்சாரம் பெருங்குருவாயிடும்
நடத்தியவாதம் நாலுகம்பத்தாது
கடத்திடுபோக்குக் கவரோவெகுகோடி
அடைத்திடு சாரமாதிக்குருவாமே. ௨௩௮

தூரிசுகுரு.

குருவாய்த்தூரி சியைக்கூறிடக்கேளுங்கள்
அருவாகுமண்டச் செயநீரில்தோய்த்திடு
திருவாகும்வங்கம் செயமானசுன்னமும்
தருவாகும் வீரமுந்தானனைகூதமே. ௨௩௯

சூதத்துடனே சுகமானவெள்ளாரம்
போதத்துடனே புகழானகற்பூரம்
வாதத்துடனே வளர்ந்தகுருவண்டு
நாதத்துடனே நல்விந்துகூட்டிடே. உசம

கூட்டிடுவநு புள்ளியின்வண்டுள்ளே
நீட்டிடுமுட்டையை நேரேயெடுத்திடு
ஆட்டிடுபேயெல்லாம் புதுரிசின்மேல்
ஆட்டிடக்காய்ந்த புன்புகழக்கேளுமே. உசக

அப்பிடுமேலே வாநிவழலையைச்
செப்பிடுசுன்னமாஞ் சிலையுஞ்சுத்தி
ஒப்பிடுவங்க முருக்கித்துவைச்சிடு
கொப்பிடுதுரிசிக்குரு முறையாகுமே. உசஉ

சாரக்குரு.

ஆகவேதுரிசியட வாகச்சுன்னந்தான்
பாகவேசாரம் பரிவானசுன்னமும்
தாகவேவீரந் தனித்தபுழுகொடு
ஓகவேபூசி யுலரயுலர்ந்திடே. உசங

உலர்ந்ததுரிசிகை வூகஞ்சுசுன்னத்தில்
மலர்ந்திடுஞ்சுன்னம் வாதத்துக்காதிதான்
புலர்ந்திடுங்கண்டர்தம் போக்கையறிந்தலேன்
கலந்திடும்வாதத்தில் காட்டுங்குறியிதே. உசச

இதுவுமது.

காரக்குருவுட் கலந்தமுறைகேளு
பூரக்குருவிலே போட்டரைசாரத்தை
நீராயக்கரைந்து நின்றதெளிவுள்ளே
வீரத்தைப்போட்டு விரைந்துவைத்திடே. உசரு

துவைத்தேரவியுட சொக்கிடுங்காரந்தான்
அவத்தேபுழுகும்மதில் வீரபூரமும்
கவித்தேநல்லெட்டொன்று கலந்தப்பிக்காய்த்தபின்
நலத்தேநற்பூநீரில் நாட்டியெரித்திடே. உசசா

எரித்திடுங்கடிகையிரு மூன்றுமுத்தியு
மரித்திடுங்காரமயம் வணங்கிக்குருவாகும்
பரித்திடும்வேதைப்பல் பலவாடிடும்
தரித்திடுங்காரஞ்சததகோடிக்கோடுமே. உசஎ

உப்புக்குரு.

உப்புக்குருச் செய்யவுறவாகட்டுக்கேள் 248
அப்புக்குளிந்துவையணைத் தூதுசுன்னமாய்ச்
செப்புக்குட்சாரத்தைச் சேர்க்கச்செயநீராம்
ஒப்புக்குள்நீரி லுறப் போடுசீனமே. ௨௪௮

சீனங்கலக்கிச் சிறந்துப்புற்றூேய்த்திடு
பானம்பறக்கப் பரந்தரவியில்லை
வானஞ்சவுக்கார மருவுசவ்வாதுசேர்
ஊனநற்கார முறுமியவீரமே. ௨௪௯

வீரத்துடனே மேதிச்சிப்பூசிடு
ஆரத்துடனே யழகாயுலர்த்திடு
வூரத்துடனே வூஷரத்தேவைத்து
நேரத்துடனே நீட்டியெரித்திடே. ௨௫0

நீட்டியெரிப்பு நேரொருசாமந்தான்
மாட்டியேவுப்பு மணிபோலநிற்கும்பார்
ஆட்டியவாதமறு பதுமாடிடும்
கூட்டியவுப்பின் குருமுறைகேளுமே. ௨௫௧

முறையானவீரமும் மூட்டுவழலையும்
கறைவானசீனமுங் காட்டாய்புழுகொடு
நிறையாகவெல்லாம் நேரொக்கிப்பூசியே
சிறையானவைங்குகைச் செம்பிட்டுவூதிடே. ௨௫௨

ஊதிடவுப்புவு சந்திட்டசுன்னமாம்
வாதிடவந்தால் மடிபிடித்தாடலாம்
மோதிடவாதமுறு கினபூமிபோற்
காதிடவுப்பிற்கனை யற்றவேதியே. ௨௫௩

பூரக்குரு.

குருவாகப்பூரத்தைக் கூறிடக்கேளுங்கள்
தருவாகுமுப்பில் சாரமிட்டாட்டினல்
திருவாகுஞ்செயநீர்தான் சேர்ந்தநீர்க்குள்ளே
அருவாகப்பூரமதிலிட்டு வைத்திடே. ௨௫௪

வைத்திடுசாமவருவிர விக்குள்ளே
கைத்திடுங்குகையிற் கலந்திட்டுவூதிடு 254

னைத்திடும்பூரம் நலமாய்க்குருவாகும்
ஐத்திடுங்குருவிலள வற்றபோக்குமே. உ௫௫

விருத்தம்.

காரமொடுசாரமுடன் கண்டரோடு
கடியதொருவுப்புமுதற் பூரமைந்தும்
வாரமொடுயிதுவஞ் சாலிருபத்தஞ்சாச்சு
வாசனைக்குக்கட்டிப் போம்காரசாரம்
வீரமொடுபுனுகிட்டுச் சீனஞ்சேர்த்தால்
வெகுமோடிசுண்ணம் புக்கிதுவேபோக்கு
ஓரமொடுசவாதிநொடு காரசார
முருக்கினத்துக்காதியிது வுண்மைதானே. உ௫௬

திரிகுணசலச் செந்தூரமார்க்கம்.

வேறு.

உவரசப்போக்குமூறி லோகப்போக்குந்
தவரசமான சரக்கானபோக்கும்
சுவரசகாரசாரத்தின் போக்கும்
மவரசசெந்தூர மாகுங்குறியிதே. உ௫௭

குறியெனத்தாளகங் கெந்திமனேசிலை
தெறியெனமூன்றுந் திரியகுணசலாம்
நெறியெனக்கார சாரலவணமும்
பொறியெனக்கார சாரகுணசலே. உ௫௮

குணசலிதூரண்டுங் கூறினேம்நூலெலாம்
குணசலுஞ்சூதமுங் கூட்டசெந்தூரமாம்
குணசலுஞ்சூதமுங் கூட்டுமுபரசம்
குணசலுஞ்சூதமுங் கூட்டுசரக்குக்கே. உ௫௯

சரக்கொடுலோகங்கள் சாற்றசெந்தூரமாம்
சரக்கொடுகாரலவண செந்தூரமாம்
சரக்கொடுசூதமுந்தங்க முங்கூட்டிடில்
சரக்கொடுசெந்தூரஞ் சதகோடிவேதையே. உ௬௰

களங்கு மார்க்கம்.

காரியம்வங்கங்கலந்த கெவுரியும்
ஆரியலிங்கமுமடவானகார்முகி

பாரியலோகம் பரிவாமுபாசஞ்
சாரியாய்சோரமுஞ் சாற்றக்களங்கமே. ௨௬௧

களங்கத்துக்காதியாய் கண்டதிதுவஞ்சும்
அளங்கத்துவொவ்வொன்றி லநேகங்களங்காகும்
பிளங்கத்தவாதி பேரையறியாமல்
உளங்கத்தவித்து வூதியேகெட்டாரே. ௨௬௨

மெழுகுவழி.

சாரநீர்பட்டாற் சகலமெழுகாகும்
காரநீர்பட்டாற் கலந்துசிறிதாடும்
பூரநீர்பட்டாற் பொருமிச்சிடுதாகும்
வீரநீர்பட்டால் மெழுகாகும்வேதையே. ௨௬௩

வேதைக்குநல்ல விரைந்தமெழுகுகேள்
மாதைக்கெழுந்தமறு முலைப்பால்வெண்ணெய்
தாதைக்குயெல்லாந் தணற்காட்டிவாட்டினால்
பாதைக்கும்பாஷாணம் படுமுன்மெழுகாமே. ௨௬௪

மெழுகொடுகுருவும் வேதைக்களங்கமும்
தழுகொடுசெந்தூரஞ் சமைந்தமுறையெல்லாம்
நழுகொடுதங்கமும் நற்சூதங்கூட்டினால்
இழுகொடுவேதைய கலாமற்காணுமே. ௨௬௫

சூதத்தின் போக்கு.

இனிமைசிவசத்தி யேத்தியவர்னத்தோன்
தனிமைசிவசத்தி சங்கரன்விந்துதான்
பனிமைபராபரம் பாஞ்சிடுந்தூமமாம்
கனிமைசரக்கிற் கலந்திடிற்சீவனே. ௨௬௬

சீவன்சிவன்றான் சிறந்திடும் விந்துவாம்
காவன்சிதறிக்காணு நெறிமுற்றும்
ஆவனற்கேசரி யாகியவேந்தனும்
பாவனற்சூதம் பகர்ந்திடுநாமமே. ௨௬௭

விருத்தம்.

ஓட்டியதோரோட்ட மெல்லாஞ்சூதத்தாட்டே
வுற்றுநின்றகாயசித்தி சூதத்தாட்டே
ஆடியதோர்குளிகையெல்லாஞ் சூதத்தாட்டே
வாதியென்றவாதமெல்லாஞ் சூதத்தாட்டே

தேடியதோர்செந்தூரஞ் சூதத்தாட்டே
செப்பரியகுருமுறையுஞ் சூதத்தாட்டே
ஊடியதோர்பூரணமுஞ் சூதத்தாட்டே
வுத்தமனேவகாரத்திற் ருயுமாச்சே. உசூஅ

புடமார்க்கம்.

காட்டைப்புடத்தான் கடியவெருகொன்று
நீடைக்கவுதாரி நிலையானவெருமூன்று
ஊடைக்குக்குக்குட மோங்குமெருபத்து
ஆடைக்குப்பண்ணியைம்ப தெருவென்னே உசூசூ

எருவான நூறு யிசைந்தகனபுட
மருவானவாயிர மகத்தாங்கெஜபுடம்
திருவானபுடமுறை செப்பினேம்புத்திதான்
குருவானசொற்போற் குறியாம்நிகண்டிதே உஎய

ஊற்றின்குறி

ஒற்றத்துருத்தி யொழுகியவூற்றது
மற்றதுரெண்டுமொட்டு வுருக்கினம்
பற்றற்றநாலுபறித்திடுஞ் சத்தெல்லாம்
கொற்றற்றவூற்றின் குறியிதுபாருமே உஎக

எரிப்புத் திட்டம்.

ஓங்கியவொற்றை விறகதுதீபமாம்
வாங்கியரெண்டு விறகுகமலமாங்
தாங்கியவைந்து விறகுகாடாக்கினி
பாங்கியமுத்தி பகர்ந்திட்டேன்பாருமே. உஎஉ

காலத்தின் குறி.

அற்பசிகார்த்திகை யடர்ந்திடுமார்கழி
நற்பசிவூத்து நலம்பெறுகாலந்தான்
வற்பிசைசத்துக்கள் வருகுமுருக்கினல்
கற்பிசைவூத்துக் கலந்திடுங்காலமே. உஎங

ஜெயசீர்காலம்.

தையொடுமாசி தனித்திடும்பங்குனி
கையொடுகாரசார முஞ்சுன்னமும்

274

மையொடுஜெயநீர் பருகியிறங்கிடும்
மையொடுநீர்தான் வருகின்றகாலமே. உஎச

குருமுறைக் காலம்.

சித்திரையானி சிறந்திடும்வைகாசி
அத்திரைசரக் கிலடர்ந்துரவிபடில்
மூத்திரைக்குருதாம் மூதண்டவேதையாம்
பத்திரைக்குருவுக்குப் பாங்கானகாலமே. உஎரு

செந்தூரகாலம்.

ஆடியாவணிவடுத்திடுங் கன்னியும்
நாடிதிராவகம் நலமானகாலந்தான்
ஊடியசெந்தூர முறைவைக்கநல்லது
கோடியேகோடி குலாவியவேதையே. உஎசூ

திராவாககாலம்.

காலமறிந்திடு கடுகவேவூதிடு
கோலமறிந்து கூட்டுத்திராவகம்
ஆலமறிந்துவணக்கச் செந்தூரமாம்
சேலமறிந்து சிறந்தகுருவிடு. உஎஎ

சிங்கியின்குணம்.

சிங்குவைத்தயிலஞ் சேமாகம்பண்ணிடும்
தங்கிக்குருவாமள வற்றசுன்னமாம்
அங்குனிற்சுன்னம் படுமுன்சரக்குசாம்
தங்கிற்றவாதிக்கு தானுயிர்சீவனே. உஎஅ

கிராவணகுணம்.

உள்ளூறவாங்கு மோடாதுதூமந்தான்
நள்ளூறச்செந்நூரம் நற்களங்கேற்றிடுந்
தெள்ளூறவேதை சேர்ந்தோடுந்தூர்ந்தான்
அன்ளூறக்கிராவண மதிச்சாரணக்காமே. உஎகூ

வஸ்துவின் பெயர்.

மாதவிடாயை வளமாய்முறித்திடும்
ஓதநல்விந்துவு மும்நீருங்கூட்டியே
போதநல்லமுரியு பொருந்துமலைப்பாலும்
வாதநல்லஞ்சும் வஸ்துவின்பேருமே. உஅ0

280

இதுவுமது.

பேரானவஞ்சும் பிணையக்கலக்கியே
நேரானசூதம்நிலத்திடும் வெள்ளோரம்
வாரானபூரம் மன்னியவோந்தான்
காரானகாட்டிற் கனத்தகுருவண்டே. ௨௮௧

வண்டானவட்டமாம் வண்டிலறுபள்ளி
தண்டாமுதுகினிற்றூனை யிருந்திடும்
பண்டானவண்டின் பரிவானமுட்டையும்
ஒண்டானபுல்லினுயர் நுரைப்பூச்சியே. ௨௮௨

பூச்சியினோடுவினுகுசவுக்காரம்
ஆச்சியகோழியட வானவெண்மலம்
மாச்சிமனோசிலை மகத்தானவங்கநீர்
ஓச்சியிதுவெல்லா மொக்கவரைத்திடே. ௨௮௩

துரிசிகுரு

அரைத்தகுழம்பை வப்பிடுகண்டர்மேல்
விரைத்தரவியினில் விளங்கிக்குருவாகும்
நிரைத்தநற்சூதம் நிமிஷத்திற்கட்டும்
நரைத்ததலையது நற்கறுப்பாமே. ௨௮௪

ஆமதுநதா மடந்தவழலையால்
தாமதுயிட்டுச் சலம்போல்முறித்திடு
ஓமதுவழலைதா னுறுகாதகாலத்தில்
ஓமதுவஸ்துவின் னுறுதியும்போச்சுதே. ௨௮௫

போச்சுதென்னுதே பூசித்துரிசிமேல்
தாச்சதுகாய்ந்தபின் தானேகவசங்கேள்
காச்சிதுகற்பூர சிலாசத்துச்சுன்னமும்
வாச்சிதுசூடனும் பவளமாய்ச்சரியிடே. ௨௮௬

இடடதுரோகித்து வியல்வாகவெண்கரு
மட்டதுவாறது மத்தித்துமேற்பூசி
ஒட்டதுசீலைவுறுகவே வொண்ணிட்டு
நட்டதுவெய்யலில் நலமாகக்காச்சிடே. ௨௮௭

காச்சியெடுத்து கடுவங்கநாகமும்
ஒச்சியுருக்கி வுருகிலமுத்திட்டு

288

ஆச்சிதுரிசில கண்டமகாகுரு
பாச்சியவேதை பரிவாமுறுதியே. ௨அஅ

உறுதித்துறையிதுவுத்தமமாதிதான்
அறுதித்துறையிது வாடலாஞ்சுன்னங்கள்
பெறுதிப்புகைநீர் பேரானவித்தையாம்
எறுதிச்செயநீரெளிதான் வித்தையே. ௨அகூ

வித்தைக்குவாதி மேலான துரிசுதான்
மைத்தைக்குவாதி வயஸ்தம்பஞ்செயதிடும்
கத்தைக்குவாதி தனிச்குதங்கட்டிடும்
பத்தைக்குவாதி குருபாரத்துரிசியே. ௨கூ௰

சுன்னமுறை.

ஊதியசுன்னமுசுந்த முதற்றரம்
மாதியபூநீறு மருவுரெண்டாந்தர
மாதியுபரசமருவு மூன்ருந்தரம்
கோதியசெயநீர் கெகநாலாம்வித்தையே. ௨கூக

நாலாம்வகைக்கு நாயகன்கண்டாற்ருன்
மேலாம்வகைநான் விள்ங்குத்திராவகம்
சேலாமிதுக்கெல்லாஞ் சேவகன்சவ்வீரம
மாலானதங்கம்வாதத் திற்ருயெண்ணே. ௨கூ௨

மாதவிடாய்.

துடக்கதுதீட்டஞ்சு ரோதர்த்ததாம்
அடக்கதுசோரமறி வான்சொன்னீர்தான்
நடக்கதுகாட்சியாம் நாரிமருந்தது
தடக்கதுசத்திதன் னுதப்பேருமே. ௨கூ௩

நாதஞ்சரீரம்நலமான யின்னீர்தான்
போதந்திரோதாயி பொங்கியவெள்ளமாம்
மாதம்பெருகிமருகின்ற சென்னீராம்
வேதம்பிறந்தது விளங்கியதீட்டமே. ௨கூ௪

சுக்கிலம்.

பாரதஞ்சூதம் பரிவானவிந்துவாம்
மாரதஞ்சுக்கிலமயக்கிய காமநீர்
கோரதம்வித்து கொடியசிகாரமாம்
சாரதங்காமஞ் சரீரத்தினு ணுமே. ௨கூ௫

295

ஊனுகிநின்று வுயிராய்ச்சிவனுகி
வானுகிநின்று மருவியவிண்ணுச்சு
தானுய்ச்சகலமாய்த் தாபாசங்கமாய்க்
கோனுருஞ்சுக்கிலங் கூறியநாமமே. உசுசு

பெண்காமகளை.

களையாந்திரிதிகன்னிக்குக் காமநீர்
குளையானயோனியிற்கூறிய விந்துவாம்
விளையானபூமிவெதும்பிய காமநீர்
தளையானயோனியின் தன்களைநாமமே. உசுஎ

முலைப் பால்.

அமுதகலச மடங்காதபச்சைதான்
குமுதச்சரீரக்கொள் கியபானமாம்
திமுதச்செயநீர் சிவநாமவிந்துதான்
தமுதமுலைப்பால் சாற்றியநாமமே. உசுஅ

அமுரி.

அமுரிலவண மடங்காதவாருதி
கமுரியவூசிநீர்கடு முலைத்தங்கநீர்
தமுரிசவீரநீர் சடக்கிற்செய்நீராம்
வமூரியமூத்திரம் வழங்கியநாமமே. உ.சுகூ

ஆகியகைந்துநீ ரடவானநாமங்கற்
போகியவஸ்துவிற்பூதமுமஞ்சிது
பாகியவஞ்சிற்பலபல போக்குமாம்
தாகியவஸ்துவிற் சகஸ்திரங்கவருமே நூா

பஞ்சபூதம்.

கவரானவீரங் கருதியுசூதமுங்
தவரானபூரமும் தனித்தவுரத்தோடு
பவராங்குருவண்டு பாரஞ்சுபூதந்தான்
நிவரானநீரில் நேராய்க்கரைத்திடே. நூாக

துரிசிகுரு.

கரைத்தேயரைக் கையிற்காட்டுபரிரெக்கு
நிரைத்தேயரைத்து நேராங்துரிசிக்குத்
தரைத்தேநற்பூசித் தாக்குரவியிலே
பரத்தேபொருமி பாற்கிற்குருவாமே. நூாஉ

குருவிதுவஸ்துவின் கூறுனவித்தைதான்
திருவிதுமெத்தத் திறமானவேதையாந்
தருவிதுவென்று சாற்றினரீசன்றான்
கருவிதுவெல்லாங்காட்டிய வாறுமே. ௩௱௩

விருத்தம்.

பலபலவாந்துறையெல்லாம் விரித்துநன்றாய்ப்
பாங்கானவங்கமெல்லாம் நிகண்டினாலே
பலபலவாந்துறைபேதம் நாமபேதம்
பண்பானசொற்பேதம் பாகபேதம்
பலபலவாம்வஸ்துவொடு குருவின்பேதம்
பாச்சுகிறசந்தான கிராவணத்தின்பேதம்
பலபலவாய்க்கிடவாமல் நிகண்டுசொன்னேன்
பராபரமாஞ்சின் மயத்தின்பரவினாட்டே. ௩௱௪

வேறு.

தாம்பரகுரு.

தாம்பரந்தானுந் தகடாயடித்திடு
ஓம்புபுளியிலைபோலே நறுக்கியே
தேம்புரானற்பலஞ் சிறுகவெடுத்திதேக்
கோம்புபழச்சாற்றிற்கு மட்டிக்கழுவிடே. ௩௱௫
கழிவியெடுத்துகளிம் பெல்லாம்போக்கியே
கொழுவிக்குதிரைப்பல் பாசாணந்தானது
தழுவிவராகன்றான் தானெடுத்திடு
அழுவியவீரமது ரெண்டுகரசே. ௩௱௬
காசிடைநாலுகலந்திடு கெந்திபைக்
காசிடைரெண்டு கலப்பாய்சவுக்காரங்
காசிடைமூணுகடிய தோர்கல்லுப்பு
காசிடைதானுங் கடுஞ்சூதங்கேளுமே. ௩௱௭
கேளேயிதுவெல்லாங் கெடியாய்த்திராவகம்
நாளேயிதில்விட்டு நலமாயுரைத்திடு
தாளேநற்றாம்பரத்த கட்டுவிதுபூசி
வாளேரவியில்வள மாயுலர்த்திடே. ௩௱௮
உலர்த்தியபின்பு வுறுக்கப்புடங்கேளு
புலத்தியகொடி வேலிப்புகழாகும்வேரேசீ

309

அரைத்திடுகடுத் தேங்காயமட்டதுவே
மலத்திக்குகைபோல் வளமாய்ப்பிடித்திடே. ௩௱௯

பிடித்தக்குகைக்குள்ளே போராகமுன்செய்த
அடுத்தத்தகடுவதுக் குள்ளேவைத்துநீ
மடித்தேமேல்மூடி மண்சிலேமேற்செய்து
தடித்தயேருவுந் தன்புளிப்புராணியே. ௩௱௰

புராணியினேடு புகழாய்நறுக்கிட்டு
அராணிபெருவையடி முடிவைத்திட்டு
தராணிக்கெசபுடந்தான் போட்டுத்தீயிடக்
கராணியசெம்புகனத்த குருவாமே. ௩௱௰௧

குருவினிடைக்கிக் கூட்டிடுசார்த்தை
அருவியயெட்டொன்று வதிவிடுவீரத்தை
தருவியயெட்டொன்றுதான் போடுவெள்ளையை
மருவியரெத்து வளமாயுருட்டிடே. ௩௱௰௨

இட்டிடண்டோட்டி விசையவேசீலேசெய்
மட்டிடுபிடமும்வளம் பெறவைத்திடு
கொட்டிடுமல்வத்திற் குமட்டியரைத்திடு
தெட்டிடிபனியிற் செயநீருமாகுமே. ௩௱௰௩

தாம்பரச் செயநீர்.

செயநீர்மசத்தாஞ் கசயநீரிதான்பேர்
அயநீரைவார்த்து வரைத்திடுசூதத்தை
பயநீர்மெழுகாகும் பார்பாருசுந்தரா
தயநீரிசூதந்தான் தன்செயங்கேளுமே. ௩௱௰௪

கேளுவிச்சூதமுங் டிகயானதங்கமும்
நீளுஞ்சமனுப் நேரத்தின் மேற்சுத்தி
வாளியுருக்கமணி போலவாடிடும்
தாளிருக்குருவாய்த்தான் செய்யப்பாருமே. ௩௱௰௫

சூதக்குரு.

பாருமணிமேதே பாங்கானவீரந்தான்
தாருசவுக்காரந் தானுனசுன்னமும்
கோருந்துரிசிக் குருவுடன்பூரமும்
போரும்புகழும் புகழ்ந்திடுசீனமே. ௩௱௰௬

316

சீனத்துடனே சிறப்பாகவாறுந்தான்
தானமணிக்கிச் சமனாகத்தூக்கிடு
ஊனொத்தவாய நீராலுறுகவரைத்திடு
வானொத்தமணிமேல் மருவவிம்பூசிடே. ௩௱௰௭

பூசியுலர்த்திப் புகழுறக்காய்ந்தபின்
மாசியநண்டோடு வளமாய்ப்பொடிசெய்து
ஓசியேகீள்மேலுமுறு கணிக்கேயிட்டு
ஆசிக்குகைக்குள்ள முத்திபுடம்போடே. ௩௱௰௮

ஷை குருவில்சர்க்குருவாக.

புடந்தான்கனபுடம் பேராங்கெசபுடம்
அடந்தானிதுக்கு வமரத்தீயிட்டி
குடந்தான்தினம்மூன்று குளிர்ந்திட்டபின்புதான்
இடந்தானேமீசான மேத்திடுபூசையே. ௩௱௰௯

பூசைக்குயீசன் புகழாம்பரமசத்தி
ஆசைக்கணேச னுதிமகாநந்தி
நேசக்கிச்சூலம் நிறைந்தநிற்வாணி
பாசைக்கிப்பாதம் பரிவுடன்போற்றுமே. ௩௱௨௰

போற்றியேதீட்சைஷப் புகழாய்ச்செபித்திடு
ஆற்றிபேசூதக்குளி கைக்குருவாகும்
மாற்றியேவர்மத்தை வைத்திடிற்காணது
யேற்றியேசூதக் குருவின்முறையிதே. ௩௱௨௰௧

இந்தக்குருவில்சரக்குகள்குருவாக.

முறையானகுருவொடு மூட்டுப்புழுகுநீ
கறையானசீனமுங் கலந்தேயிழைத்திடு
துறையானசரக்கெல்லாம் தொட்டேபிரட்டியே
நிறைவாகவூதிட நேரேகுருவாமே. ௩௱௨௰௨

குருவானதொன்றிற் கூட்டுவீரத்தைத்
திருவானலிங்கமும் சேர்த்துயிழைத்திடு
உருவானநவலோக மூட்டுநூற்றொன்றுக்கு
குருவானதிசைமாத்து தப்பாதுவாறுமே. ௩௱௨௰௩

வாறுகேளொவ்வொன்றில் மகாகோடிவித்தையாந்
தாறுகேளொவ்வொன்றிற் சங்கவரைவேதை

கூறுகேளொவ்வொன்றில் கோடானகோடிதான்
ஆறுகேளொவ்வொன்றி லடங்காதவேதையே. ௩௨௪

சரக்குவுருக்கினம்.

வேதையுருக்கினம் விளம்பக்கேள்சுந்தரா
பாதையர்சூதமகாகு ருவிற்காரமுஞ்
சாதையாய்நின்ற சவாதினிற்கூட்டியே
பேதையாய்மத்திப் பேணியெடுத்திடே. ௩௨௫

எடுத்தேசரக்கான வெட்டெட்டிற்பூசியே
மடுத்தேயுருக்கமணி போலவாடிடுந்
தொடுத்தேநவலோகஞ் சூட்டுநூற்றொன்றுதான்
படுத்தேதிசைமாற்றுப் பத்தாகும்பாருமே. ௩௨௬

பாரேசரக்கைப் பரிவாயெடுத்துநீ
சேரேயினத்தின்மேற் செந்தூரம்பூசியே
காரேயுருகக்கண்விட்டு வாடிடும்
தாரேயொருநூறுதான் தொந்தமேறுமே. ௩௨௭

ஏறுமேயிப்படி யெட்டெட்டும்வெவ்வேறுப்
கூறுமேவொவ்வொன்றிற் கோடானகோடிதான்
தாறுமேசொல்லச் சதகோடிசங்கமாம்
நாறுமேவாசனே நாட்டலாம்வேதையே. ௩௨௮

வேதைக்கவரை விரித்திடப்போகாது
மாதைக்கியீசன்வகுத்த முறைப்பாடு
காதைக்கிச்சித்தர் கவர்கோடிசெய்தார்கள்
போதைக்கிப்பாடிப் புதைத்துவைத்தார்களே. ௩௨௯

வைத்ததோர்முன்றுன் வாழ்செயசூதமுங்
கைத்ததோர்சீனமுங் கடிகியவெள்ளியுந்
தைத்ததோர்ரெண்டுஞ் சமஞ்ரிருக்கியே
நைத்ததொருமணியாம் நலமால்யெடுத்திடே. ௩௩௰

வெள்ளிக் குரு.

எடுத்தமணிக்கி யிசையவேபூசிட
மடுத்தசவுக்காரம் வளமானவீரமும்
மடுத்தேபுழுகுமதி ஞெடுசீனமும்
தடுத்தந்ததாளகந்தா னஞ்சுங்கேளுமே. ௩௩௧

கேளேரசிதமணிக் கிடைகூட்டியே
தாளேவால்நீராற் றயங்கவரைத்துநீ
நாளேமணிக்கிநலம் பெறப்பூசியே
சூடேரவியிற்சுகம்பெற வைத்திடே. நநஉ

வைத்தேநல்லண்டம் வளமாய்ப்பொடிசெய்து
கைத்தேமணிக்கிக் கடுங்கவசமேலிட்டு
நைத்தேகுகைக்குள் நலமாயமுத்திட்டு
தைத்தேநல்வாய்க் தத் தனிச்சிலைசெய்திடே. நநந 333

செய்தேகனபுடம் சிறந்திடுமுன்போலே
ஐதேயீசானமாத்தாளைப் பூசைசெய்
கைதேகுளுந்தபின் காட்டியெடுத்திடு
மைதேரசிதமாங் குருவாகுமே. நநச

பாஷாணக் குரு.

ஆமேகுருவுலணைத்திடு வீரத்தைத்
தாமேசவ்வாதுங் தனிக்காரங்கூட்டிமிய
ஓமேயிழைத்துவுறு வெள்ளைக்கப்பிநீ
தேபேயுருக்கிற் சிறக்கமணியாமே. நநரு

{ தாளகம் - அரிதாரம் - நிமிளை - மிருதார்
சிங்கி - கெவுரி - இதற்கு - மதனரசித - குரு }

மணியையெடுத்துவாய் நீரைத்திட்டுத்
தணியவேவெள்ளையிற்று னெங்குபூசியே
கணியருருக்கிடுகாட்டு நூற்றெருந்தான்
அணியாயெழும்பி யாடிடுந்தொந்தமே. நநசு

தொந்தத்திலொன்று சூடடுவயச்செம்பிற்
கந்தத்தில்வங்கங்கடி யதோர்நாகத்தில்
சந்தத்தில்நூற்றொன்று தாக்கக்கடிதமாம்
உந்தொத்தமாற்று வொருபதினைந்துமே. நநஎ

அஞ்சுசரக்கு தனிக்களங்கு.

நஞ்சானதாளகம் நலத்தவரிதாரம்
கஞ்சநிமிளைக்கடிய மிருதாரந்
தஞ்சாங்கெவுரிதா னஞ்சும்நீகேளு
ஓஞ்சாகமுன்போ லொவ்வொன்றுருக்கிடே. நநஅ

உருக்கியவொவ்வொன்றை யோருபுப்பூசியே
தருக்கியுருக்கிடத் தானூறுதொந்தமாம்
பருக்கியவொவ்வொன்று பாச்சவேலோமத்தில்
மருக்கியநூற்றுமின்று மாட்டரசிதமே. ௩௩௯

ரசிதக்குருவுக்கு நலமானசீனமும்
பசிதப்புழுகும் பாங்கானவீரமும்
வசிதவெடுத்து வளமாகமத்திச்சு
எசிதவேபெட்டெட்டாஞ் சரக்குமேல்மாட்டிடே ௩௪௰

பாட்டியேவொவ்வொன்றாய் வைத்தூதச்சுன்னமாம்
நீட்டியேசுன்னமும் நேர்வீரகாரமும்
பூட்டியேவாட்டப் புகழாய்ச்சிவந்திடும்
காட்டியேலோகத்திற் காண்பாய்க்குறியுமே. ௩௪௧

குறியானலோகங் கொடியாரசிதமே
மறியாதபோக்கு மாமிந்தப்போக்குதான்
நெறியானதங்கமும் நேர்வெள்ளிரெண்டும்
பொறியாடிநாற்போற் பொக்கிதிற்கோடியே. ௩௪௨

சரச்செயநீர்.

உவருமண்சுன்னமு மூட்டிக்கலக்கியே
தவருங்கிளிஞ்சி தானேயதிலிட்டுக்
கவரவெடுத்துக் கடுவெள்ளையாக்கியே
திவரவெடுத்துத் தேய்ச்சுக்கழுவிடே. ௩௪௩

கழுவுங்கிளிஞ்சிக் கடுகவுலர்த்திட்டுத்
தழுவம்மலமெட்டுத் தானேயெடுத்துநீ
கொழுவும்வெடியுப்புக் கூட்டிடுநாலு
ஒழியமறைத்து வோட்டினில்வைத்திடே. ௩௪௪

வைத்ததின்மேலே மறுநாளுலர்த்தியே
தைத்ததின்மேலே தனிச்சிலைமண்செய்து
நைத்திடத்தானே நலமாய்ப்புடம்போடு
மைத்திடப்பாரு வட்டுப்போலாகுமே. ௩௪௫

வட்டையெடுத்து மருளப்பொடிசெய்து
நட்டியகல்லுப்பு நாட்டுயிருபலம்
ஒட்டையசீன மொக்கவொருபலம்
தட்டையரைப்பலந்தான் காரம்போட்டிடே. ௩௪௬

போட்டிதுவெல்லாம் பொடித்திடுமைபோல்
நாட்டிதிற்சாரம் நலமாய்ப்பலம்நாலு
மூட்டிக்குகைக்கிக்கீழ் முறையாய்ப்பொடியிட்டு
தாட்டியதின்மேலே சாரமும்வைத்திடே. ௩௪௭

வைத்ததின்மேலே வளமாய்ப்பொடியிட்டு
தைத்திடநன்றாய்த் தானேயழுத்திட்டு
கைத்திடச்சில்லிட்டுக் கட்டியேசீலையும்
மொய்த்திடவெளியிலே மூட்டிப்புடமிடே. ௩௪௮ 348

இட்டபிடத்தை யியல்பாகவாங்கியே
கொட்டுநற்சாரங் குறிப்பாயெடுத்திடு
அட்டேபொடியை யரைத்துத்தூளாக்கியே
பட்டேமுன்போலப் பாங்காய்முடித்திடே. ௩௪௯

அமுத்தியேமுன்போ லனலேறப்போட்டுவா
கமுத்திடப்பிடந்தான் கண்டுகெண்டேரிடு
நிமுத்தியேயேழு நிறைபுடந்தீர்ந்தபின்
துமித்தியசாரந் துடிபடச்சாகுமே. ௩௫௰

சாகுநற்சாரமுஞ் சமனண்டவோடுந்தான்
வாகுடனன்றாய் மருளவரைத்திடு
ஓகுந்தினமூன்று வூரவைத்துப்பின்புதான்
பாகுங்குகையினிற் பாச்சிடக்கேளுமே. ௩௫௧

கேளேகுகையிற் கெடிரெண்டுகாசிடை
தாளேகாரந் தாக்கியுருக்கையில்
நாளேநற்சாரப் பொடிசிதிலூட்டிடு
கோளேபொடியெல்லாங் குமுறவுங்கொள்ளுமே. ௩௫௨

கொண்டேயுருகுங் கொடியநற்காரந்தான்
தண்டேநற்கல்வத்திற் றனிதைக்கொட்டியே
வண்டேயரைத்து வழுத்திடுபீங்கானில்
அண்டேசெயநீர்தானாறு போலோடுமே. ௩௫௩

ஆறுபோல்நின்ற வழகானநீரிலே
தாறுபோல்வீரந் தன்னொடுபூரமே
வாறுபோலாடும் வழலையின்சுன்னமும்
கூறுகேள்மூன்று முக்காசிடைபோட்டிடே. ௩௫௪

354

போடேபொடித்துப் பொருந்தக்கலக்கியே
வாட்டேகுளுந்த விடத்திலேவைத்திடு
தீட்டேசிவனுந் தேவியும்பூசைசெய்
காட்டேயின்னீரிற் கறைகொள்ளாவித்தையே ௩௫௫

வித்தைபிறந்தது மேலானசாரத்தில்
வித்தைபிறந்தது மெய்குருவண்டத்தில்
வித்தைபிறந்தது மேலாம்வழலையில்
வித்தையிதற்குள்ளே வேண்டியதாட்டியே ௩௫௬

ஊஞ்சல்

துரிசிச் செயநீர்

ஆட்டவேதந்திபா லடவாயுறிகட்டு
நீட்டவேயண்டெடு நிலக்கவதில்வைத்து
பூட்டற்றசவ்வீரம் புகழப்பலமொன்று
ஊட்டியகட்டி யூஞ்சலுங்கட்டிடே. ௩௫௭

கட்டிவூஞ்சற்கடுக்கடுந் தீப்பிடமிட்டு
ஒட்டியேயிட்டுவூசலிலாட்டிடு
தட்டியேசாரநீர்தடவிடு துள்ளிபோல்
ஒட்டியேவீரமுருகமெழுகாமே. ௩௫௮

மெழுகானவீரத்தில் மூட்டிடத்தங்கந்தான்
தழுகாவிமாகன் தனிமலரேக்கொடு
ஒழுகாதவொன்றாய் யூட்டத்தினும்பார்
நழுகாதெடுத்துநற் பீங்கானில்வைத்திடே ௩௫௯

வைத்ததுரிசிவளமாய்க் குருவ்வைத்தான்
தைத்தேமெழுகு மேற்றுனெட்டுக்கொண்ணிடு
ஒத்தேபிசைந்து வூறவைத்துப்பூசைசெய்
வைத்தேதடவப்பரிசன் வேதையே. ௩௬௰

பரிசனவேதையாம் பாங்காய்செயநீரில்
பரிசினவீரமும் பூரமுஞ்சூதமும்
கரிசினவுரமுந்தானுங்கு ருவண்டுங்
கரிசினவறுப்புள்ளிக்கரு வண்டின்முட்டையே. ௩௬௧

முட்டையினோடு முகிர்ந்தகருநாபி
பட்டையின்கோருபரிவான வெண்மலம்

தட்டைமரனுசிலைசவுக்காரச் சுன்னமும்
மட்டையரைத்துவாள் கண்டற்கப்பிடே. ௩௬௨

அப்பிரவியில் லாரவேகாயயில் 362
ஒப்பிச்செய நீருறவுறப்பூசிடு
தப்பிக்குருவாய்த் தவளமாம்பக்ஷத்தில்
செப்பிலெடுத்துச் சிறக்கவும்வைத்திடே. ௩௬௩

வைத்தகுருவில் வார்த்துவைசூதத்தை
கைத்தியதிங்களிற் காணுமலுண்டிடும்
ஒத்தக்குருவுக்கு ளூறவாறுசூதத்தை
நைத்தியமென்று நலம்பெறத்தின்னுமே. ௩௬௪

தின்னு முமிபோலாஞ் செந்துபொருமிடும்
பண்ணுரசமிட்டுப் பாச்சுசெயநீரைத்
தண்ணுங்குருவுக்குத் தான்பத்துஞ்சூதஞ்சாம்
ஒண்ணுநிறுக்க வொச்சவும்நிற்குமே ௩௬௫

நிக்கச்செயநீரில் நீட்டமருந்துகேள்
ஒச்சவேநாபி வுறவானபூரமும்
தக்கவேசவ்வீரந் தானுருங்குருவண்டு
மக்கசவுங்காரம வாள்காரங்கூட்டியே. ௩௬௬

கூட்டியரைத்துக் குழப்பிச்செயநீரில்
ஊட்டுப்பிசறுவுறு குருசூதத்தில்
ஆட்டியலர்த்து வடவாதச்சூதம்சாம்
நீட்டியசூதம் நேராகமெல்லுமே. ௨௬௭

மெல்லவேசூதமிடும் விதங்கேளுஞ்சுந்தரா
பல்லவேநாகம் பரிவானதாளகம்
செல்லவேவீரம் சேர்மூன்றுஞ்சூதம்நேர்
அல்லவேசம்பழச் சாற்றிலரைத்திடே. ௩௬௮

துரைத்தேபதங்க மடவாயெடுத்திட்டு
அரத்தேகுருவாங் துரிசியில்நீட்டிடு
தரைத்தேயிதைத்தின்னுங் தனிச்சூதம்வாராதே
பரைத்தேயிதின்முறை பாங்காகக்கண்டிடே. ௩௬௯

கண்டிடுயிச்சூதங் கண்டார்க்குப்போசனம்
தண்டிடுயிச்சூதந் தானேபதைக்கக்கேள் 369

பண்டிடுநாலுபலந் தூக்கிக்கொண்டிதை
ஒண்டிடுபீச முறவிடக்கேளுமே. ௩௱௭௰

கேளுமேதங்கங் கெடியாகச்செம்பாக்கி
நாளும்மேநாலு விராகன்தகடுசெய்
ஆளுமேசூத மதுமேலேபூசிட்டு
வாளுமேவெய்யலில் வளம்பெறக்காச்சிடே. ௩௱௭௧

காச்சித்தகட்டைக் கனக்கப்பொடிசெய்து
ஒச்சியேசூதத்தி லுறவாய்க்கலந்திட்டு
பாச்சியரைத்துப் பாச்சிடுகுப்பியில்
ஆச்சியகுப்பிவா யடவ்வாயடைத்திடே. ௩௱௭௨

தங்கச்செம்பு செயநீர்.

அடைத்திட்டகுப்பி மேலப்பமருந்துகேள்
நடைத்திட்டவஞ்சுப்பூ நலமாமிருகாரம்
படைத்திட்டசாரம் பாங்கானசுண்ணம்பு
தடத்திட்டங்கூட்டிச் சம்பழத்தாலாட்டிடே. ௩௱௭௩

ஆட்டிபேயப்பி யடவாயுலர்த்திட்டுக்
கூட்டியேநன்றாய்க் குதிரையின்னெத்தியில்
பூட்டிக்குழிக்குள்ளே புதைப்பாயறுதிங்கள்
காட்டிக்கிடந்தபின் நலமாயெடுத்திடே. ௩௱௭௪

எடுத்திடுகுப்பிக்கு ளிருக்குட்செயநீர்தான்
மடுத்திடுவேறே வளமாய்வடித்திட்டு
நடித்திடுகெந்தகம் நாட்டிப்பலம்ரெண்டு
அடுத்திடுந்தாளக மரைப்பலங்கூட்டிடே. ௩௱௭௫

கூட்டுமனேசிலே குறையாதொருபலம்
நீட்டுசவ்வீரம் நேரேபலமொன்று
ஊட்டுவரைப்பலமுங் கட்டுங்கல்லுப்பு
ஆட்டுயிதுவெல்லா மந்தநீர்விட்டுமே. ௩௱௭௬

காரீயக் கட்டு.

விட்டேயரைத்து வெருவிடுசூதத்திற்
பட்டேநற்காரீயம் பாங்கானகட்டுகேள்
ஒட்டேநற்கெந்தக முருகப்பலமொன்று
நட்டேநற்சூதந் தான்பலம்நாலுமே. ௩௱௭௭

காலோடுகெந்தகங் கடுகப்பொடிசெய்து
மாலோடுகார மாட்டதிற்காற்பலம்
சேலோடுமூன்றுந் திறமாய்ப்பொடிசெய்து
ஏலோடுகாரீயத் திருபலத்தீந்திடே. ௩௭௮

ஈய்ந்திட்டகாரீய மெளிதாகக்கட்டுண்டு
தாய்ந்திட்டதட்டிற் றவளம்போலாயிடும்
பாய்ந்திடுவேகம் பரிவாய்சரக்கொடு
ஆய்ந்திடும்வாதிக் கியாதிகரணுகமே. ௩௭௯

நாகக் கட்டு.

நாகத்தைக்கட்ட நலங்கேளுசுந்தரா
பாகொத்தவப்பிரகம் பரிவானசாந்தமும்
வாகொத்தநிமிளை வழங்கியகாரமுந்
தாகொத்தாரமுஞ் சவுக்காரச்சுன்னமே. ௩௮௦

கன்னத்துடனே துடியகன்கல்லுப்பு
தன்னைத்தவேழுஞ் சமனாகக்கூட்டியே
கன்னைத்தெருக்கம் பாற்கலந்தேயரைத்திட்டு
பன்னைத்தநாகம் பலம்ரெண்டெடுத்திடே. ௩௮௧

இதுவுமது.

எடுத்திட்டவீர மெழுகுவிதிற்பூசி
அடுத்திட்டரைத்த மருந்தைக்கவசித்து
படுத்திட்டசீலைமண் பாச்சியேயேழுசெய்
கடுத்திட்டதீயிற் கனக்கப்புடம்போடே. ௩௮௨

போட்டிடநாகம் புகழாகக்கட்டுண்ணும்
நாட்டிடமுன்சூதம் நலமாயிடைகேளு
கூட்டிடுநாகங் குறையாதொருபலம்
காட்டிடக்காரீயக் கட்டிற்பலமொன்றே. ௩௮௩

ஒன்றாகச்சூதத்தி லொறைக்கவரைத்திட்டு
நன்றாகக்குப்பியில் நலக்கவெடுத்திட்டு
கண்ணானவாலுகைக் கவியப்பதித்திட்டு
பண்ணாகமுத்தீயும் பாச்சியெரித்திடே. ௩௮௪

எரித்திடும்போது யியல்பாய்ச்சிலாக்கிட்டு
மரித்திடுந்தயில வகைகண்டுநீபாரு

கருத்திடுங்கெட்டியாக் களங்குவெளியோடுந்
தரித்திடும்வறுமையுந் தானோடிப்போகுமே. ௩௮௫

போகவேயீசன் புகழுவேநீவாணி
ஆகவேயீச னுத்தாள்கணபதி
தாகவேகந்தன் தானெட்டுத்திக்கொடு
வாகவேபூசை வளமாகவைத்திடே. ௩௮௬

வைத்திடுஞ்சூதக் குருவினில்வேதைகேள்
ஐத்திடும்லோகத்தி லைன்பதுக்கொன்றிடு
கைத்திடுமாத்துக் கலங்காதுபத்தாகும்
வெய்த்திடுஞ்சூதக் குருவினில்வேகமே. ௩௮௭

வேகக்குருவில் வீரத்தைக்கூட்டியே
பாகப்புழுகும் பரிவானசீனமும்
தாகப்பரிமேற் றப்பிப்புடம்போட
ஓகோத்ததங்க முறுதிக்குறுவாமே. ௩௮௮

தங்கக்குரு.

குருவாகத்தங்கங் கூறிடுக்காலத்தே
அருவானகற்பமா பாதிமகாகுரு
திருவாஞ்சிவமயந் தேவிக்கிநாதமா
மருவானதங்கம் மகாகுருக்காணே. ௩௮௯

ரசக்கட்டு.

காணவேதங்கக் குருவினிலோரிடை
பூணவேசூதக்குரு பூட்டதில்மூணிடை
தோடவேவாய்நீராற் சுழலவரைத்திடு
ஊணவேசூத முருண்டிடும்பாருமே. ௩௯௰

குளிகை.

பாரேகுளிகை பரிவாய்ச்செயநீரில்
தாரே துவைத்துத் தனிவெள்ளைக்கண்டரில்
தூரேபிரட்டிச் சுடலையில்வாட்டியே
காரேகருமத்தங் காயினில்வைத்திடே. ௩௯௧

வைத்தேயொருசீலை மண்செய்துமூடியே
கைத்தேபுடமிடக் கட்டிக்குளிகையாம்
பைத்தேகுளிகைக்கிப் பாச்சிடச்சாரணை
தைத்தேகுகைக்குள்ளே நாட்டிடுசூதமே. ௩௯௨

சூதமுருகையிற் சூட்டவேசாரணை
மாதயபூநாகச் சத்திடுமுந்தியே
பேதயப்புடமிட்டுப் பேதித்துத்தள்ளவும்
ஆதயசூதம் சுரமுகமாகுமே. ௩௯௩ 393

முகங்கண்டபின்பு மூட்டப்பிரகச்சத்தை
அகங்கண்டகெந்தகச் சத்திடுபின்புதான்
தகங்கண்டபாஷாண சத்தோடுபரசம்
பயங்கண்டுதீர்ந்து பரிவாய்க்களித்திடே. ௩௯௪

களிக்குமுறைமையைக் காட்டிடக்கேளுங்கள்
அளிக்கின்றசாரமாங் காரமுமையஞ்சு
வளிக்கண்டுகூட்டி மாபுடமேசெய்து
சுளிக்கின்றசூதத்திற் குட்டிடக்கேளுமே. ௩௯௫

கேளேயுபரசங் கெடிநூற்றிருபதும்
வாளேயறுபத்து நாலுபாஷாணமுந்
தாளேநவரத்தினந் தானுனவொன்பதும்
ஏளேயிருநூற்றுப் பதினெட்டுமாச்சுதே. ௩௯௬

ஆச்சேநற்பாஷாண மறுபத்துநாலுந்தான்
ஓச்சேயுபரசமொரு நூற்றிருபதும்
காச்சேயிருபத்தஞ் சாங்காரசாரமும்
நாச்சேநற்கோளாகும் நவரத்தினமுமே. ௩௯௭

தினமேநவலோகஞ் சேருபரிச்செம்பையும்
அனமேயிருநூற்று வாமிருபத்தேழும்
கனமேபொருதிரங் காட்டிடச்சாரணை. ௩௯௮

குளிகையின் பெயர்.

{ சகடகுளிகை கெவுனகுளிகை போககுளிகை
சந்தானகுளிகை அஷ்டமாசித்துகுளிகை - க
மலகுளிகை-ஸ்வரூபகுளிகை }

நாமமேயிப்படி நாட்டிடமுத்தாம்
காமமேயீயுங் கவுனகுளிகையாம்
தாமமேயெழுதிரம் சுரூபமாம்
பானித்துப்பத்துத் தீட்சையும்டபண்ணிடே ௩௯௯

399

தாணிபதினொன்றிற்றுனட்டமாசித்தி
வாணிபதினைந்தில் மகத்தாங்கமவினி
ஊனியிருபத் தொன்றிற்சுரூபமாம்
பாணித்துப்பத்துத் தீட்சையும்பண்ணிடே. ௪௱ ௯௱

பண்ணியேபத்து தீக்ஷையும்பூசித்தால்
ஒண்ணியேகேசர மோங்கியெழும்பிடும்
நண்ணியேவாசி நலமாய்நிலைத்திடும்
திண்ணியேகற்பங்கள் சேரவுந்தீர்ந்திடே. ௯௱௧

கற்பஞ்சாப்பிடப் பாத்திரம்.

தீத்திடுகற்பங்கள் தின்றிடுங்காலத்தே
தேத்திடுந்தேத்தா பரத்தினிடவேரில்
பாத்திடும்பாத்திரம் பண்பாகச்செய்துநீ
கோத்திட்டமுரியைக்கு முறவும்வார்த்திடே. ௯௱௨

வாத்திடுமுன்பின் வளமாகத்தள்ளியே
தேத்திடுதேத்தாம் விரையையதற்குள்ளே
காத்திடமுரி கடுகமுறித்திடும்
தூத்திடமுரியின் தோடமும்போச்சுதே. ௯௱௩

போச்சுதேடாத்திரம் புகலக்கேள்பின்னொன்று
வேச்சுதேதூருண்டின் வேம்பினிற்பாத்திரம்
ஆச்சுதேசெய்து வதிலேபலகற்பம்
நாச்சுதேநெய்யும் நற்றேனுக்காகுமே. ௯௱௪

ஆமேபலபல கற்பங்கள்கொள்ளவும்
ஓமேநற்காந்தமாம் பாத்திரமுத்தமம்
தாமேயிதுமூன்று பாத்திரஞ்சாதகம்
வாமேயிதுமூன்றில் வாய்த்திடுங்கற்பமே ௯௱௫

கற்பதோஷத்துக்கு கிஷாயம்.

கற்பங்கள்கொண்டு களித்திடும்நாளையில்
சொற்பமாய்த்தாகமுஞ் சூழமயக்கினல்
நற்பறவெட்டையும் நலமானமூர்ச்சையும்
வற்பிறவந்தால் வாங்குங்கிஷாயமே. ௯௱௬

வாங்கவேதாளிச பத்திரிதன்னுடன்
ஓங்கவேசுக்கு முடனிடுசீரகம் 406

தாங்கவேவொவ்வொன்று தானேபலங்காலாய்
ஆங்கப்படிநீரிலாழாக்காய் கொள்ளுமே. ௬௱௭

கொள்ளுமதரங் கொடிபசிறுதேக்கு
தள்ளுநற்கண்டு தான்பலங்காலாய்
அள்ளியநீர்படி யாழாக்காய்காச்சியே
தெள்ளியேகொள்ளத் தேகஞ்சிறக்குமே. ௬௱௮

வேறு.

துரிசி குரு.

துரிசிபலமொன்று தூக்கியெடுத்துநீ
பரிதிமனேசிலை பலம்நாலுவாங்கியே
தரிசிபழச்சாற்றிற் றனேயரைத்தித
உருசுதுரிசி மேலுறவாகப்பூசியே. ௬௱௯

பூசியுலர்த்திப் புகலவேகாய்ந்தபின்
ஆசியசீலைமண்ணட வாகச்செய்திடு
தாசியெருவிற் றனேபுடமிடில்
வாசியவாசனைக் கண்டபின்வாங்கிடே. ௬௱ய

வாங்கிடக்கண்டர் வளமாய்வெளுத்திடும்
ஓங்கிட்டதனை யுறவாய்ப்பொடிசெய்து
தாங்கியொருபலந் தானுந்துரிசின்மேல்
தேங்கிடெள்ளெண்ணெய்ச் சிறப்புடன்பூசுமே. ௬௱க

ஷை-சேயநீர்.

பூசியவெள்ளைத் துரிசிப்பொடியெல்லாம்
தாசியேமெள்ளத் தாமேபிரட்டியே
ஓசியேவெல்லா முறவறவேத்திட்டுக்
காசியேவெய்யலிற் காயவும்போட்டிடே. ௬௱௨

போட்டிடுமூன்றுநாள் புகழக்காய்ந்தபின்
ஆட்டுந்துரிசி யாதிகுருவாகும்
நீட்டிறுகையிலே நீக்குத்திப்பார்க்கவும்
மூட்டுறுகையிலே முழுச்சுறுக்கேறுமே. ௬௱௩

ஏறுந்துரிசிதானியல் பாய்ப்பசுப்பில்லை
கூறுந்துரிசிக் கொடுஞ்சுன்னமாச்சு

தேறுந்துறைக்கிச் செய்யுமுறைகேளு
நாறுஞ்சுடர்மதி நாயகன்சொன்னதே. ௪௰௪

சொன்னதுரிசி சூழ்பலமொன்றுதான்
பன்னநற்சாராம் பாச்சநிலோர்பலம்
உன்னியரைத்திடு வோங்கிச்செயநீராம்
கன்னயவீரங் காற்பலம்போடுமே. ௪௰௫

வீரக்குருவேதை.

போடச்சிவக்கும் புகழானசெயநீர்தான்
நீடச்சவுகாரச் சுன்னமோர்காசிடை
ஊடைக்கரைத்து வையுத்தமநீரிலே
ஆடத்துறையை யாடநீகேளுமே. ௪௰௬

கேளுஞ்செயநீரிற் கெடியானவீரத்தை
ஆளத்தில்வைத்து வனல்மேலேவாட்டிடு
தாளநற்சீலை தன்மேலேசுற்றிடு
வாளநற்றீபத்தில் வளமாகவாட்டிடே. ௪௰௭

மேற்படி-குரு.

வாட்டிடவீரம் வளமாயுருக்கியே
நாட்டிடுவெள்ளி மணிபோலேநின்றிடும்
ஊட்டிடவீரத்திடை தங்கங்கூட்டியே
மூட்டிடநன்றாய் முதிரவுருக்கிடே. ௪௰௮

உருக்குமணியை வொன்பதுலோகத்தில்
தருக்கியநூற்றொன்று தாக்கிநீபார்த்திடு
பருக்கியமாற்றுப் பதினாறுமாயிடும்
செருக்கியவீரத்தின் செயலிதுவாகுமே. ௪௰௯

மகாகுரு விபரம்.

ஆமேநற்கட்டி வீரமோர்காசிடை
ஓமேநற்றங்க மொருமூன்றுகாசிடை
தாமேயிதுரெண்டுந் தாக்கியுருக்கிட்டு
சேமேமணியாய்ச் சிறக்கவெடுத்திடே. ௪௫௰

எடுத்தமணிக்கி யியலநாலுக்கொன்றுதான்
படுத்தழலேயும் பாங்கானவீரமும்
அழுத்தபுழுகுமா சற்றசினமுங்
கடுத்தநற்பூரமுங் காற்காவிடையிடே. ௪௫௧

வீரக்குருவில் மகாகுரு வேதை.

இடையிதுவெல்லா மிழைத்தரைவெண்கரு
நடையிதுமணிமேல் நலமுறிப்பூசியே
குடையிதுவெய்யவிற் குமுறவுலர்த்திடு
தடையாதண்டோடு தான்பொடிசெய்யே. ௪௨௨

செய்தபொடிக்குள்ளே திறமாயிதுவைத்துப்
பைதகுகைக்குள்ளே பாய்ச்சியேமூடிடு
கைதவச்சீலைமண் கட்டிக்குகைமேலே
உய்தக்கெசபட மோங்கிநீபோட்டிடே. ௪௨௩

போட்டேயீசானம் புகழநிர்வாணிக்கும்
நாட்டேநற்றேவிக்கும் நலமாகப்பூசைசெய்
ஊட்டேமதுப்பூசை யோங்கிச்செபித்திடு
காட்டேகுளுந்தபின் கடுகவெடுத்திடே. ௪௨௪

எடுத்திதைப்பா யிதுதான்மகாகுரு
தொடுத்ததின்வேதையைச் சொல்லவேகேளுநீ
நடுத்தகுருவொடு நற்காரங்கூட்டியே
மடுத்தசவ்வாதிட்டு மத்தித்துவைத்திடே. ௪௨௫

வைத்ததிதைத்தொட்டு வகைபறுபத்துநாற்
கைத்ததிப்பாஷாணங் கைமுறையாகவே
தத்ததைப்பூசித் தானேபிரட்டிநீ
ஓத்ததிலொன்பது லோகத்திலிட்டிடே. ௪௨௬

இட்டிடக்கேளு வியல்நூற்றுக்கொன்றுதான்
பட்டிடவாங்கிப் பழுத்திடும்பாருநீ
ஒட்டிடமாற்று வொன்பதுகண்டிடும்
தெட்டிடும்வீரக் குருவின்திறமிதே. ௪௨௭

வெள்ளிகுரு-ரசிதவேதை.

திறமானவெள்ளி குருச்செய்யநீகேளு
நிறமானவெள்ளி நேர்மூன்றுகாசிடை
அறமானவீர மதுவொருகாசிடை
குறமாகக்கூட்டிக் குமுறவுருக்கிடே. ௪௨௮

உருக்குமணிக்கு வுறப்பூசைநீகேளு
பருக்கியவீரம் படிகம்புழுகொடு

கருக்கியபூரஞ் சவுக்காரசன்னமும்
நெருக்கிமணிக்கி நேர்நாலுகொன்றிடே. ௪௨௯

ஒன்றாகக்கூட்டி யுறவரைவெண்கரு
பன்றாம்ரசித மணிமேலேபூசிடு
கன்றானவெய்யலிற் கடுகவுலர்த்திடு
வன்றானகிளிஞ்சிற் பொடிக்குள்ளேவைத்திட. ௪௩௦

வைத்தேகுகையில் வளம்பெறச்சீலைசெய்
தைத்தேகெசபுடம் தானங்கேபோட்டிடு
ஒத்தேகுளுந்த பின்னேங்கியெடுத்திடிற்
புத்தேரசிதக் குருவிதுபாருமே. ௪௩௧

பாரேகுருவிற் பாச்சிடுகாரந்தான்
பாரேகுருவிற் பாச்சுசவ்வாதுதான்
பாரேவுறவரை பாங்காய்மெழுகுபோல்
பாரேயிதனைப் பரணியில்வைத்திடே. ௪௩௨

வைத்ததைத்தொட்டு மருவியவெள்ளிமேல்
கைத்திதைப்பூசிக் காட்டுநூர்வங்கத்தில்
நைத்தரசிதம் நாற்பதுமாற்றுமாம்
ஒத்தநற்செம்பி லொருநூற்றுக்கொன்றிடே. ௪௩௩

இட்டமாற்று விருபதுதானகும்
மொட்டிடநாக மொருநூற்றுக்கொன்றிடில்
கட்டிடமாற்றுக் காண்பதுவைன்பதாம்
தொட்டிடக்குடவன்மேற் சூட்டொன்பதுக்கொன்றே

சூட்டிடவெள்ளி சுகமாறிருபதாம்
மூட்டிடவேதை மூதண்டவெள்ளியாம்
காட்டிடக்காட்டிடக் கரையில்லாத்தொந்தமும்
பூட்டிடரசிதமாம் போக்கிதுவாமே. ௪௩௫

அறுபத்துநான்கு பாஷாணமும் சுன்னமாக

ஆமோசிதகுரு விற்புழுகிட்ட
ஓமேநற்சீனமு முருகும்வழலையுந்
தாமேநல்வீரமுஞ் சாத்திமேயமத்திச்சுக்
காமேசரக்கெல்லாங் கட்டிநீயூதிடே. ௪௩௬

ஊதிடப்பாஷாண முடரசத்தோடெல்லாம்
வாதிட்ச்சுன்ன யாமலைமண்முதல்

ஓதிடு நூலெல்லா முறுதியாய்ச்சொல்லிடும்
வாதிடும்சுன்னத்தில் வழிகோடிகாணுமே. ௪௩௭

காணுமேமுன்றான் கட்டியபொற்சுன்னம்
பூணுமேவீரமும் புழுகுடன்சீனமுந்
தோணுமேவழலையுஞ் சூட்டியேமத்தித்து
நாணுஞ்சரக்கெல்லாம் நாட்டிநீயூதிடே. ௪௩௮

ஊதிடப்பாஷாண முபரச்சுன்னமாங்
காதிடக்காரசார முஞ்சுன்னமாம்
ஓதிடவொண்ணுக் கோயிரமுமாம்
வாதிடவாடும் மாதவளைமாயாகுமே. ௪௩௯

போக்கானவாதித் தரிசினசெயநீரில்
வாக்கானபாஷாண வகையெல்லாந்தோச்சுநீ
தாக்காய்க்கரியோட்டிற் றானுறவாட்டினால்
தூக்காய்ச்சரக்கெல்லாஞ் சுழன்றுயிறுக்குமே. ௪௪௰

இறக்குஞ்சரக்கை விசையவினத்தின்மேல்
சிறக்கவேபூசிச் செந்தூறவாட்டினால்
துறக்குமேயிப்படி தொந்தநூற்சுட்டிடும்
நிறக்குமேவேதைநிலை நூறுத்தோடுமே. ௪௪௧

பரிகுருசூதம்-கவனகுளிகை.

ஓடுஞ்செயநீ ருறக்குத்தவீரத்தில்
தேடுஞ்சவுக்காரச் சுன்னமுஞ்சத்திட்டு
நாடும்ரசமது நாட்டிடுவீரெடை
கூடுஞ்செயநீர் குத்தியரைத்திடே. ௪௪௨

அரைத்தமருந்தை யப்பியேதங்கத்தில்
நிரைத்தரவியில் நேராயுலத்திட்டு
கரைத்தநல்லண்டோடு கடுகப்பொடிசெய்து
உரைத்தநற்றங்கத்தின் கீழ்மேலுமூட்டிடே. ௪௪௩

மூட்டியேமூடி முதிரக்கெசப்புடம்
ஆட்டியேபோட்டு வாயியைப்பூசைசெய்
நாடடியேவாங்கு நலமாய்பரிக்குரு
தீட்டியசின்மயஞ் செப்பியவாறிதே. ௪௪௪

வாறானசூதம் மருவிப்பலம்ரெண்டு
பேறாம்பரிக்குரு போடொருகாசிடை

மாறும்செயநீர் வார்த்தேயரைத்திடு
தேறுனசூதந் திரண்டுவுருகுமே. சசரு

உருகிபசூத மூட்டிக்கரண்டியில்
பருகியவெள்ளெண்ணெய் பாச்சியுருக்கிடு
தருகிமேவாங்கிற் றுன்பினகுகைக்குள்ளே
சொருகிமேகாரஞ் சேரவுமூதிடே. சசசு

ஊதிடச்சூத முருகியேகண்விடும்
பாதிடலோகம் பரிவேதித்திடும்
நாதிடச்சூதத்தில் நாட்டினூர்சாரணை
மாதிடமெத்த வாங்கிடுங்கெவுனமே. சசஎ

கெவுன குளிகை.

கெவுனகுளிகையைக் கெடியாயடைக்கிநீ
தவனத்தில்வாய்நீரைத் தானுள்ளேகொண்டிட
புவனத்திற்காசம் போகுமொருசட்டை
எவனத்தினமா யிருப்பாருகத்துக்கே. சசஅ

வே று.

சாரக்கட்டு - முன்வேடியுப்பு நீரில் சரக்கட்டு செயநீர்.

கெந்தகந்தாளகங் கெடியாமனோசிலை
அந்தகர்ப்பூர மதினொடுசூடனும்
பந்தகவீரமும் பரிவாந்துரிசியும்
சுந்தகச்சூதமுஞ் சொல்லோவராகனே. சசகூ

வராகனிடைரெண்டுமா சீனக்காரந்தான்
தராகவெடியுப்பு தான்ரெண்டுகாசிடை
கராகமுற்காசிடை கட்டியகல்லுப்பு
நிராகப்பதினொன்று நிறுத்துயெடுத்திடே. சருய

எடுத்தேயிதுவெல்லா மிசையவேகல்வத்தில்
மடுத்தேவெடியுப்பு நீரிலாட்டிடு
கடுத்தேநற்சாரங் கலங்காதரைத்தபின்
னெடித்தேநற்சார மொருபலங்கட்டியே சருக

கட்டிக்குப்பத்துநாள் கலந்தப்பிக்காயவை
பட்டிக்குப்பத்துப் பாங்காகப்பூசிடு

445 451

நட்டிக்குப்பூசி நலமூறக்காய்ந்தபின்
தட்டிக்குக்காய்ந்தபின் றன்மேற்கவசமே. ௪௫௨

கவசமிதுமேலே கட்டியகல்லுப்பு
உவசமரைப்பல முறப்போடுகல்வத்தில்
தவசியசீனகாரந் தானுமரைபலந்
திவசியகற்பூர சிலாசத்துச்சுன்னமே. ௪௫௩

சுன்னமரைபலஞ் சூழமூன் றுங்கூட்டியே
கன்னலமுரியாற் கலங்காதரைத்திடு
பன்னவதின்மேலே பாச்சுக்கவசமாய்
ஒன்னனசார முலாவுலர்த்திடே. ௪௫௪

உலந்திட்டபின்பு வுறுகளேகிலும்
அலந்திட்டரைத்து வதன்மேற்கவசித்து
புலந்திட்டுலர்த்திப் போடொருசீலைமண்
நலத்திட்டகிளிஞ்சிநீர் நலமாய்த்துவைத்திடே. ௪௫௫

வைத்தேகலையத்தில் வளமாகக்கீழ்மேலும்
நத்தேகலையத்து நல்வாய்க்குச்சீலைசெய்
கைத்தேபிடமிட்டுக் கண்டிதைவாங்கினல்
ஒத்தேநற்சார முறுதியாய்க்கட்டுமே. ௪௫௬

கட்டுநவாசாரங் காணும்பலம்நாலு
ஒட்டுஞ்சவுக்காரச் சுன்னம்பலம்நாலு
கொட்டியரைக்கக் குமிறியிளகிடும்
செட்டும்பனியிலே சேரவும்வைத்திடே. ௪௫௭

வைத்தேயரைக்க மகத்தாஞ்செயநீராம்
கைத்தேசெயநீரைக் கலங்காமல்வாங்கிடு
பைத்தேசவ்வீரம் பலங்காற்பொடிசெய்து
நைத்தேசெயநீரில் நலமாகப்போட்டிடே. ௪௫௮

போடச்செயநீரிற் புகழச்சிவப்பாகும்
ஆடச்சுருக்காகு மாதிநவாச்சாரம்
தாடக்கணந்தான் சவுக்காரவேகமும்
மூடச்சவ்வீரந்தான் மூதண்டவேகமே. ௪௫௯

வேகுஞ்செயநீர்தான் வேதாந்தசாரமாம்
போகுஞ்செயநீர்தான் பொற்சடையோனுக்கும்
ஆகுஞ்செயநீர் தானத்தாள்கருணையாம்
வாகுஞ்செயநீர் மகத்தாமுதகமே. ௪௬௰

தங்கக்குரு.

உதகத்தைக்குத்தி யுறுகவுரைவீரம்
மதகுத்தத்தங்கத்தின் மேல்நாலுக்கொன்றுதான்
பதகொத்துப்பூசிப் பரிவாயுலர்த்திட்டு
பொதகொத்தநாகரவண்டைப் பொடிசெய்யே. சகூக

பொடிகீழுமேலுமாய்ப் பொன்னுக்கமுத்தியே
கெடிகீழுமேலுங் கெசப்புடம்போட்டிடு
அடிகீழேவாரி யப்பாலெடுத்திடு
துடிகீழெடுத்திடச் சொர்னங்குருவாமே. சகூஉ

குருவோடுநேராய்க் கூட்டுச்சவ்வீரத்தைக்
கருவொடுபாறைபாங் கல்லுப்பிலேபூசி
அருகொடுசாரநீ ரதுகுத்திப்பூசிடு
கருவொடுகாய்ந்தபின் கண்டிதையூதிடே. சகூங

உப்புகுரு.

ஊதிடநன்று யுப்பதுசுன்னமாம்
மாதிடவீர மாட்டச்சிவந்திடும்
பாதிடவொன்பதும் பரிசிக்கவேதையாம்
ஓதிடவுப்பு வொருகோடிவேதையே. சகூச

உப்புசெயநீர்.

வேதையாமுப்பு விளங்கியசுன்னத்தில்
தாதையாஞ்சாரஞ் சமபாகஞ்செய்துநீ
நாதையாயாட்ட நலமாயுதகமாம்
போதவுதகத்தைப் போக்கொடுவாங்குமே. சகூரு

பூரச்சுன்னம்.

வாங்குமுதகத்தில் வாளரபூமிட்டுநீ
ஓங்கியெடுத்து வூதிடச்சுன்னமாம்
பாங்கியபூரமாஞ் சுன்னமும்வீரமும்
தாங்கியுழைத்தத் தனிச்சிவப்பாகுமே. சகூசு

பூரச் செந்தூரம்,

ஆகுஞ்சிவப்பு தானனசெந்தூரம்
பாகுஞ்செந்தூரத்திற் பாச்சிடுதாயைதான்
ஓமிதுதானே வொன்பதுலோகத்தில்
வாகும்பரிசித்து வாதாடலாகுமே. சகூஎ

பூரச் செயநீர்.

ஆமேகற்பூரமா மன்னீருக்கொக்குந்
தாமேநவாச்சாரஞ் சமனாகச்சேர்த்துநீ
ஓமேயரைத்திட வோங்குசெயநீராம்
சாமேதுவைத்திடச் சரக்கெல்லாஞ்சாகுமே. சகூஅ

சாகுஞ்செயநீரிற் றாளகந்தோய்த்துநீ
வாகும்ரவிபடில் மாஞ்சுமலர்ந்திடும்
போகும்வெளுத்துத்தான் புகழஞ்சுசுன்னத்தில்
ஆகுமேதாளக மதனிற்புடமிடே. சகூகூ

தாளகச் சுன்னம்.

இட்டிடத்தாளக மெழுந்தமகாசுன்னம்
அட்டிடவீரமது நேரிடைகூட்டி
ஓட்டிடக்காரமு ் லிங்கமுமொக்கிடும்
தட்டிடப்பிரிசனந் தாக்கிடத்தங்கமே. சஎ௦

தாக்கிடுதாளகச் சுன்னமும்வீரமும்
வாக்கிடுகாரமு மருவுஞ்சவ்வாதுடன்
போக்கிடக்கூட்டிப் புகழுங்கபரிக்குத்
தூக்கிடப்பூசிச் சூழவுருக்கிடே. சஎக

துத்தம் தூரம்புவேதை.

உருக்கிடச்சத்தா யுரையுங்கபரிதாஞ்
சொருக்கிடிற்றுத்தம் தூரம்புவேதைகேள்
பருக்கிடிற்சத்து பணமொன்றுதாக்கியே
தருக்கிடிற்சூதந் தானிடைக்கூட்டுமே சஎ௨

கூட்டும்ரசத்திடைக் குலாவுந்துரிசியை
நாட்டுரசத்திடை நலமானவீரத்தை
நீட்டியரைத்து நெய்வார்த்துச்சீலையில்
திட்டியுருட்டித் திரியாகச்செய்திடே. சஎ௩

செய்ததிரியைச் சிறுதளிக்குள்வை
கொய்தகடுநாசிக் கூடுபோற்கட்டியே
பொய்தபுருஷப் பிரமாணமேவைத்து
நைதவமேலே நற்செம்புயிட்டிடே. சஎச

இட்டேகீழ்த்தீப மிசையக்கொளுத்திட்டுத்
மட்டேயவிக்க மண்டுமேதூம்புரம்

475

பட்டேபுகைதான் பருச்செம்புதகட்டிலே
நட்டேகறுக்கும் நலமாயணற்காட்டே. ௪எரு

அனல்காட்டிவாங்கி ஞலாணிபதினறு
புனல்காட்டிடுந்துத்தம் பூண்டபுகையாலே
தனல்காட்டிவாழ்வார் சகலமகாசித்தாம்
இனல்காட்டித்தாம்புர மெடுக்குமுறையிதே. ௪எசு

கபரிசெந்தூர வேதை.

முறைபானகபரி சத்துப்பலமொன்று
துறையானதங்கஞ் சூட்டும்பலங்கால்தான்
நிறையாகநின்று நேர்ந்துவுருகையில்
கறையானசூதங் காட்டுபலமொன்றே. ௪எஎ

ஒன்றுயெடுத்து வுடைத்துப்பொடியாக்கிக்
கன்றானகெந்தகங் காட்டுப்பல ரெண்டு
தன்றானமனேசிலே தாளகம்ரெண்டுகேள்
நன்றுயரைப்பலம் நால்வகைக்கூட்டிடே. ௪எஅ

கூட்டிடில்வீரங் குமுறப்பலமரை
நீட்டிதுவெல்லாம் நிமிரப்பொடிசெய்து
மூட்டிதுகுப்பியில் முறையானவாலுகை
ஆட்டிட்டுப்பேத்தி யடவாயெரித்திடே. ௪எகூ

எரித்திடுமுத்தீயு மிதமாகமூன்றுநாள்
சரித்திடுநல்லச் சலாக்கிட்டுநீபாரு
கருத்துட ஒனியிற் காகரத்தேநிற்கில்
மரித்திடுஞ்சூதம் மகத்தாஞ்செந்தூரமே. ௪அ௦

செந்தூரமொன்று திகழநவலோகத்தில்
பந்தூரதற்குப் பதினயிரத்தொன்று
கந்தூரமாத்துக் காணுமெழுபது
உந்நூறுங்காணியிடை யுண்ணச்சித்தியே. ௪அக

சித்தியாமிப்படி சேர்ந்தவுபாசம்
ஒத்தியுருக்கவே யொவ்வொன்றுசத்தாகும்
பத்தியவொவ்வொன்றிற் பரிசனவேதையாம்
நத்தியுரைக்க நாவில்லேகாணுமே. ௪அ௨

வங்கக் குரு.

காணேகபுரிகடி தாகுமுன்னசுன்னம்
பூணேசவ்வீரம் புழுகிட்டுவாட்டியே

தாணேநல்வங்கத் தகட்டுமேற்பூசியே
ஊணேபிடமிட வுறுதியாஞ்சுன்னமே. சஅங

சுன்னத்தில்வீரஞ் சூட்டியேகாரமுந்
தன்னுத்துநின்ற சவ்வாதுமேற்கூட்டி
கன்னுத்தபாஷாணங் காட்டியவுபரசம்
மன்னுத்துப்பூசி மருவவுருக்கிடே. சஅச

உருக்கிடவெல்லாமொவ் வொன்ருப்ச்சத்தாகும்
பருக்கிடச்சத்தொன்றிற் பண்ணலாஞ்சுன்னங்கள்
சொருக்கிடவொவ்வொன்றிற் றுரைநூறுசெந்தூரம்
மருக்கிடக்களங்கங்கள் மகாகோடியாகுமே. சஅரு

ஆமேநல்வங்க மடவாகச்சுன்னமுந்
ஓமேபுழுவு முறவானசீனமுந்
தாமேநல்வீரமுந் தாக்கியரைத்திடு
சேமேநிமிளேமேற் செந்தூரம்பூசிடே. சஅசு

நிமிளாகுரு.

பூசியேவஞ்சுன்னப் புகழாங்குகையில்வை
வாசியேபோல வளமாகவூதிடு
நேசியேபோல நிமிளேயுஞ்சுன்னமாந்
தாசியேயான தனமிதுகண்டிடே. சஅஎ

கண்டிடுநிமிளே குருவொடுவீரமுந்
தண்டிடுதங்கமுந் தானேயிழைத்திடு
மெண்டிடுவங்கமுங் காரமுமாட்டியே
ஒண்டிடுசவாதி யுறப்பொடுமத்தியே. சஅஅ

மத்திச்சமெழுவகை வளமாகத்தொட்டுநீ
அத்திச்சபாஷாண மறுபதுந்தொட்டுநீ
ஒத்திச்சலோகத்தி லொருநூறுக்கொண்றிட
பத்திச்சமாற்றுப் பதினறுமாகுமே. சஅகூ

ஷை-குருவி லறுபத்துநான்கு பாஷாணச் சுன்னம்.

ஆகுநிமிளேக் குருவிற்புருகிட்டு
வாகுநல்வீரமும் வளமானசீனமும்
ஏகுநற்கூட்டி யியல்பாஞ்சரக்குமேல்
பாகுமுபரசம் பரிசித்துப்போட்டுதே. சகூய

போட்டுதவெல்லாம் பொருமியேசுன்னமாம்
மாட்டுதக்கார சாரமுஞ்சுன்னமாம்
நீட்டுதவைந்து சுன்னக்குகைவைத்து
நாட்டுதமெள்ள நலம்பெறத்தாக்கிடே. சகூக

தாக்கிடத்தாக்கிடச் சகலமுஞ்சுன்னமாம்
தேக்கிடுவீரத்தைச் செந்தூரக்கட்டாகும்
வாக்கிடப்போகாது வாயியுடனூதம்
போக்கிடக்கோடி போக்காகவாடுமே. சகூ௨

ஆடுமேசுன்னத்தி லணைத்திடுவீரத்தை
ஓடுமேகாரமு முற்றசவ்வாதிடு
நாடுமேமத்தித்து நற்காரசாரமுந்
தேடுமேவுபாசச் சேர்ந்தபாஷாணமே. சகூந

சேர்ந்தசரக்கெல்லாந் திரளப்பிரட்டியே
போந்தவுருக்கிடப் பொன்போலேநின்றாடும்
சாந்தோரொவ்வொன்றிற் சதகோடிவேதையாம்
காந்தபராபரி காணவள்நாதமே. சகூச

நாதநிமிளை நலமானசுன்னமும்
போதநல்வீரமும் புகழானசீனமும்
ஓதப்புழுகுமொவ வோர்வாகன்றான்
பாதயசாரம் பலத்தின்மேற்பூசிடே. சகூரு

பூசியேவைத்துப் புகழமண்மூடியே
ஆசியேவாளுகை யடவாயெரித்திடு
வாசியேசாரம் வற்றிவெளுத்திடு
ஓசியேசார முறப்பொடுகல்வமே. சகூசா

கல்வத்திலிட்டு காட்டிடில்வீரமும்
கல்வத்திலிட்டு காட்டுவழலையும்
கல்வத்திலிட்டு காட்டுநற்சீனமும்
கல்வத்திலிட்டுக் காணவரைத்திடே. சகூஎ

சாரச் சுன்னம்.

அரைத்தேசிறுக வடவாகப்பில்லைசெய்
துரத்தேநல்லைஞ் சுன்னக்குகையில்வை
நிரைத்தேகனலை நீட்டியேவூதிட்டு
தரைத்தேநற்சாரந் தவமாஞ்சுன்னமே. சகூஅ

499

துரிசி சுன்னம்.

சுன்னமாஞ்சாரத்திற் சூட்டியேவீரத்தைத்
தன்னமாயாட்டு தனிலேபுழுகிட்டு
வன்னமாய்கண்டற்கு வாகாயிதைப்பூசி
கன்னமாய்வெய்யலிற் காட்டிடச்சுக்கானே. ௬௱௬௯

சிங்கிக் காது.

சுக்காணுய்நின்ற துரிசியைநீகேளு
அக்கானவைத்து சுன்னக்குகைவைத்து
தக்காகவூது தானேகடுஞ்சுன்னம்
சிக்காந்துரிதான் சிங்கிக்குமாகுமே. ௫௱

ஆகுந்துருச் சுன்னமும்வீரமும்
பாகும்புகழுகும் பாச்சியரைத்திட்டு
வாகுமேவீரன்மேல் வளமாகப்பூசியே
ஒகியேவூதவுறும்வீரச்சுன்னமே. ௫௱௧

வீரச்சுன்னம்.

சுன்னமாம்வீரத்திற் சூட்டியேவீரத்தை
தன்னமாம்லிங்கமுந் தாயோடுகாரமும்
ஒன்னமாயாட்டி யொன்பதுலோகத்திற்
பன்னமாய்ப்பூசப் பரிசனவேதையே. ௫௱௨

பரிசன வேதை.

வேதைத்துருசுக் குருவுடன்வீரமுந்
தாதையாந்தங்கத் தகடுமுறவாக்கிப்
போதையேவொன்ருப் பொடிசெய்தடைத்திடு
ஆதையேவண்ட மாகுந்தசங்கேளே. ௫௱௩

தசாவண்ட வித்தை.

தெசமானவண்டத்தைச் செப்பினேன்சுந்தரா
அசமானகருடனதிற் தாகஞ்செம்போத்துத்
தசமானமயிலுந் தாராவுந்தானேஞ்சு
நிசமாம்பறவையி னோரஞ்சும் அண்டமே. ௫௱௪

அண்டமுடும்பு மழுங்குமுதலையுங்
கண்டநற்பாம் புகடுகியவாமையும்

விண்ட யீதஞ்சும் விளங்கியவூர்வனந்
தண்டிதுபத்துந் தான்தசங்கண்டிடே. ௫௱௫

கண்டிடுவெண்டங் கடுகப்பணம்போலே
உண்டிபொதித்து வுற்போடநீகேளு
தண்டித்துருசுக் குருவிற்பணமரை
ஒண்டித்தவண்டங்க ளொவ்வொன்றிற்பாச்சிடே. ௫௱௬

பாச்சிரவியிற் பருகவிருசாமம்
ஓச்சியேரெண்டு கருவுந்தயிலமாம்
மாச்சியேவண்டம் மகாயோகிக்கேற்றது
ஆச்சியேவண்ட மாடுமுறைகேளே. ௫௱௭

தசாவண்டத் தயிலத்தில்.

அறுபத்துநாலு பாஷாணமுங்களங்கு

கேளேகருடன் றயிலம்பரிசிக்க
நாளேநல்நாற்பதி னுயிரத்தொன்றூடும்
ஏளேமயில் தானிருபதினுயிரம்
தாளேபதினுயிரந் தாராவுமோடுமே. ௫௱௮

ஓடுமெண்ணுயிர முறுதியாய்ச்செம்போத்து
நாடுமையாயிரம் நற்காகமேயோடும்
ஏடுமளுங்கு யிருபதினுயிரம்
நாடுநல்லாமை நால்நாங்குக்கோடுமே. ௫௱௯

நானுன்குக்கோடும் நல்லமுதலைதான்
மேனுன்குடும்பு முன்னுன்குக்கோடிடும்
சானுங்குபாம்பு காட்டுமெண்ணுயிரம்
ஊனுங்குமண்டங்க ளோடுமுறைதானே. ௫௱௰

முறையாந்தெசாண்டங்கள் மூட்டிடும்பரிசனம்
மறையானவேதத்தில் மாவீசன்சொன்னதும்
நிறையானவண்டத்தில் நேர்ந்தபாஷாணந்
துறையாகத்தொட்டுச் சூழப்பிறட்டிடே. ௫௱௰௧

பிரட்டிச்சரக்கான பேராமறுபதும்
மருட்டியுருக்கி மணிபோலேவாடிடும்
நிரட்டியவொவ்வொன்றே நேரொத்ததொந்தனை
அரட்டிக்கநூற்றுக்கு மப்பாலுமேறுமே. ௫௱௰௨

ஏறுஞ்சரக்கை யிடவாயிரத்தொன்று
தேறுநல்மாத்துத் திசைக்குப்பதினாறு
மாறுநல்லண்டத் தயிலம்வெகுபோக்கு
கூறுமேசுந்தரா கோடிகவராமே. ௫௧௩

பஞ்சவர்ணவுப்புக்களங்கு

கவராந்துரிசிக் குருவொடுசாரமு
முவராமற்கூட்டி யரைக்கவுதகமாம்
தவராமூதகத்தைத்தான் குத்திவீரன்மேல்
நவராயரைத்து நலமாயிளக்கிடே. ௫௧௪

இளக்குங்குளம்பை யெடுத்தப்பிக்கல்லுப்பில்
அளக்குங்கரிக்குள் ளேயாகவுருக்கிடு
தளக்குமணிதான் றனிச்சூதவர்னமாம்
பிளக்குமுதகத்தைப் பூட்டாய்துரிசிக்கே. ௫௧௫

கல்லுப்புக்கட்டுவேதை.

துரிசியரைத்துச் சுழைந்திட்டுவுப்புமேல்
பருசியுருகப் பச்சைநிறமாகுந்
தரிசியுதகத்தாற் றுளகமேயாட்டி
அரிசியவும்புக்கு வடவாகப்பூசிடே. ௫௧௬

பூசியுருக்கிடப் பொன்மணிபோல்நிற்கு
மாசியுதகத்தா லரைப்பாய்மனோசிலை
நேசியவுப்புக்கு நிறப்பூசிக்காயவை
மாசியுருக் கவணிசிவப்பாகுமே. ௫௧௭

மேற்படி வேதை.

ஆமேநற்கார் முகியரைத்துவுதகத்தில்
நாமேகல்லுப்புக்கு நலமாகப்பூசியே
தேமேயுருகச் சிறந்துகருப்பாகும்
காமேநல்லஞ்சாகும் வர்ணமுங்கண்டிடே. ௫௧௮

கண்டிடுமஞ்சு வர்ணலவணத்தை
ஒண்டிடக்கோத்து வுறுதாவடம்போலே
தண்டிகைக்கை சரந்தானிட்டிருப்பார்கள்
மண்டிடமூலகுரு மருமியசீஷரே. ௫௧௯

சீஷரைக்கண்டாற் றெண்டஞ்செய்சுந்தரா
சீஷர்தானுங்கட்குச் சேஷ்டமுரைதானுஞ்

சீஷரும்மீங்களுஞ் சேர்ந்தோடும்விண்ணிலே
சீஷர்துடிகாண சிகாரமடக்கிடே. ௫௨௦

அடக்குகல்மூலகுரு நமக்குச்சேஷ்டர்
தடக்குஞ்செனகாதி தானல்வருஞ்சேஷ்டர்
உடக்கும்பதஞ்சலி யுத்தமசேஷ்டர்காண்
நடக்குமுறையிது நல்மார்க்கம்பாருமே ௫௨௧

பாருமேகைச்சாரம் பழுக்கும்விதங்கேளு
மாருமேவெள்ளை மணியாயிரத்தொன்று
வாருமேபச்சை மணிபாயிரத்தொன்று
ஏருமேமஞ்சள் மணியுமெண்ணூறெடே. ௫௨௨

எடுத்தசிவப்பா மணிமிடைநீகேளு
அடுத்ததொளாயிரத்தொன் றேடுமாத்துமாம்
மடுத்தகறுப்பாமணி யேர்டுமைந்நூற்றிற்
கடுத்தவீதைஞ்சுங் கட்டியவேதையே. ௫௨௩

வேதையாமுப்பு விளங்கியேகட்டாமற்
காதையாம்பாஷாணங் கட்டவலேந்தார்கள்
தாதையாய்நிறை சவுக்காரஞ்செய்யாமல்
லாதையாய்ச்சுட்டு மாண்டவர்கோடியே. ௫௨௪

கோடிதிரும்பாமற் குடிப்பாக்கல்லுப்பைத்
தேடியேகட்டச் செப்புமேன்சுந்தரா
வேடியேமுன்வைத்த வெண்கடர்தானென்று
நாடியேசாரம் நலக்கச்சரிசேத்தே. ௫௨௫

சேத்ததேயரைக்கத் தெளிந்துசெயநீராம்
பேத்தேசவுக்காரச் சுன்னமுங்காலிடை
கோத்தேநல்லுப்புக்குக் குலாவியேபூசிடு
மூத்தேயெருவில் முத்திப்பிடமிடே. ௫௨௬

இட்டேஎடுக்கவியல் கோடிமாறுது
ஒட்டேகனமு முறுக்கித்தெளிவாகுங்
கட்டேயிதுகட்டுக் காட்டநவலோகம்
மட்டேயிருபதுக் கொன்றிடும்மாறுமே. ௫௨௭

மாத்ததுப்பத்தா மகத்தானவுப்பிலே
பாத்ததைச்செய்யாமற் பாழேரலேகிறா

கோத்ததுவுப்பல்லோ கூறிடுவாதத்தில்
போத்திதுபார்த்தோன் புகழ்சித்தயோகியே ருஉஅ

விருத்தம்.

பாரப்பாசெயநீரே நூற்றுப்பத்திற்
பரிவாகவெகுசுருக்கு மூன்றுதீரும்
நேரப்பாவிதனுலே வனந்தவித்தை
நிறைநிறையாய்ச்சொல்லி விட்டேனீதான்பாரு
சேரப்பாதிராவகந்தா னறுபத்தினுலிற்
றிறமாகச்சொல்லுகிறே னன்ருய்க்கேளு
ஓரப்பாஒன்ருக வுறைக்கச்சொல்லவே
னுத்தமனேயிதனுடைய வோட்டங்கேளே. ருஉகூ

வேறு.

மூலிகையி லுப்புவெடுத்துத் திராவகம்வைக்க

எருக்கொடுதுத்தி யிசைந்தநல்மேனி
மருக்கியவாழை மருவுமுருங்கையும்
பொருக்கியவூமத்தைப் புகழ்நாயுருவியும்
செருக்கியதென்னிலே சேர்ந்தவருகோடே. ருஙய

அறுகொடுதாழையு மன்றிற்தரண்டையும்
மறுகொடுவெள்ளும் மகத்தானபூவரசும்
தறுகொடுவொவ்வொன்ருய் சாம்பலாய்ச்சுட்டுநீ
ஒருகொடுநீரி லூறவும்வைத்திடே. ருஙக

வைத்திடுவெவ்வேருய் வாகானபாண்டத்தில்
தைத்திடுமூன்றுநாள் தட்டிக்கலக்கிடு
தெத்திடுமைந்தானுள் தெளிவெல்லாம்வாங்கியே
கைத்திடுபாண்டத்திற் காச்சிநீவுப்பேடே. ருஙஉ

உப்புவகையொன்றுக் கோரோர்பலந்தூக்கி
ஒப்பியவன்ன பேதிபலவெட்டு
செப்பியகல்லுப்புச் சிறக்கப்பலமூன்று
கப்பியசாரங் கடுகப்பலமஞ்சே. ருஙங

அஞ்சாந்துரிசி யைந்நாங்கிருபது
பஞ்சாம்படிகமும் பார்நூறுதன்பலம்
அஞ்சாம்வெடியுப்பு வைந்நூற்றியைம்பது
தஞ்சாம்சவுட்டுப்புத் தானுகுமெண்பதே. ருஙச

எண்பதிஞேடே யிசைந்தசவுக்காரம்
பண்பலம்பத்துப் பரிவானவீரங்கேள்
தண்பலம்நாலு சவுட்டானபூநீறு
நண்பலமெட்டு நலமாகக்கூட்டிடே. ௫௩௫

கூட்டுமதியுப்புக் குறையாமல்முப்பலம்
நீட்டுவளகி லுப்போயிருபலம்
பாட்டுநற்றுத்தம் பதிணைப்பலம்போடு
நாட்டுநல்லானை நலங்கியவெள்ளாடே. ௫௩௬

ஆடுங்குதிரை யடவாங்கழுதையும்
நாடும்மனுஷன் நலமாயிருவையஞ்சின்
ஓடும்நல்மூத்திரமொவ் வொன்றில்நாற்படி
தேடுறக்காச்சிச் சிறக்கவுமூப்பேடே. ௫௩௭

எடுத்திட்டவுப்பு யிசையப்பலம்பத்து
மடுத்திட்டிதுவெல்லாம் வளமாய்ப்பொடிசெய்து
படுத்திட்டுப்பத்துப் பங்காக்கிவைத்துநீ
எடித்திட்டுவோர்பங் குறவைகலையமே. ௫௩௮

கலையத்தின்மேலே கடுஞ்செங்கற்சில்லிட்டு
கலையத்தசில்லுக்கு நடுவேதமர்கேளு
ஓலையப்பெருவிர லோடத்தமர்போட்டு
நிலையொத்தமூசை நீளவும்செய்திடே. ௫௩௯

செய்திட்டமூசைத் திறமாகச்சுட்டுநீ
பெய்திட்டதூறிற் பணம்போற்றமரிட்டு
கைதிட்டமாகக் கடுஞ்செங்கற்சில்லுமேற்
றெய்திட்டங்குப்பிக் குறச்சீலைசெய்திடே. ௫௪௰

சீலைசெய்மூசைச் சிறந்ததமரின்மேல்
காலைசெய்மேலுக் கருவிரல்பொத்திட்டு
மேலைவைரந்திரம் விளங்கப்பிசகாமற்
சாலமீவசீலைமண் சமர்த்தாகக்கட்டிடே. ௫௪௧

கட்டியடுப்பேபத்திக் கடுங்குப்பிவாயிலே
ஒட்டியபீங்கானி லுறவைத்துநீபாரு
மட்டியப்பொகையொடு வந்தேசலம்விழும்
தெட்டயவன்னீரைச் சிறப்பாயெடுத்திடே. ௫௪௨

எடுத்திட்டநீரை யியலொருபங்கிலே
மடுத்திட்டுவார்த்து வளமாயுலர்ந்தபின்
கடுத்திட்டுமுன்போலக் கட்டியேயெந்திரம்
படுத்திட்டுத்தீநீரைப் பாங்காகவாங்கிடே. ௫௪௩

வாங்கிமறுபங்கில் வளமாயுலர்த்திட்டு
ஓங்கியேதீநீரையுறவாக்குமுன்போலே
வாங்கியேயிப்படி வைந்துதிறமேத்திப்
பாங்கியேவாங்கிப் பரிவாகவைத்திடே. ௫௪௪

வைத்ததிராவக மகத்தானதீனீராம்
பைத்தபின்னைந்து பங்கையும்வேறேவை
நைத்ததிராவகம் நாட்டமுறைகேளு
கைத்தவுபசாரங் கட்டிடச்சத்தாமே. ௫௪௫

பூநாகச்சத்துச் செந்தூரம்.

சத்தாகச்சுந்தரா சரக்குமுறைகேளு
நத்தானபூநாகம் நலமாயுலர்த்திட்டு
குத்தாய்த்திராவகக் ௬முறியேசத்தாகும்
வித்தாரச்சத்தினில் வெண்காரமிட்டிடே. ௫௪௬

இட்டேயுருக்க விசையமணியாகும்
மட்டேபூநாகச் சத்தோர்பலம்வாங்கி
நட்டேயுருக்கி நாட்டைந்திடநாகம்
யட்டேநற்காற்பலம் பரியுமதிற்போடே. ௫௪௭

போட்டேயுருக்கையிற் பூட்டிடச்சூதங்கேள்
நாட்டேதிராவகம் நலமானசூதத்தில்
மூட்டேகொதித்து மெழுகுமயமாகும்
ஓட்டேமெழுகை யுருக்கிநீபார்த்திடே. ௫௪௮

பார்த்திடச்சூதம் பண்பாயுருக்கிடுங்
கோத்திட்டுவோர்பலங் கூட்டுப்பூநாகத்தில்
சேத்திட்டிதுவெல்லாந் திறளவுருக்கிட்டு
மாத்திட்டகலவத்தில் வளமாய்நொருக்கிடே. ௫௪௯

நொறுக்கியேகெந்தகம் நுகர்ப்பலம்நாலு
பறுக்கியதாளகம் பலம்ரெண்டுகூட்டியே
தருக்கிமனோசிலைத் தானேபலமொன்று
பொரிக்கிப்பொடித்துப் போட்டிடுகுப்பிக்கே. ௫௫௰

குப்பியெடுத்துக் கொடுவா லுகையேத்தி
ஒப்பித்தமூன்று முற்போட்டுமுத்தீயும்
மப்பித்தசெந்தூர மருணணிறமாகும்
தப்பித்தவேதைத் தாக்காயிரத்தொன்றே. ௫௫௧

ஆயிரத்தொன்றிடும் வாம்நவலோகத்தில்
பாயுரவேகமே பார்த்துமுடியாது
தாயிரமாத்துத் தானேபதினாறு
ஓயிரப்பூநாகச் சத்தினுறுதியே. ௫௫௨

அப்பிரகச்சத்துச் செந்தூரம்.

உறுதியாய்நின்ற வுயர்ந்திடுமப்பிரகப்
அறுதியாய்வைத்து யதில்வார்த்திராவகம்
நிறுதியாய்வெந்தி நிமிஷத்திற்சத்தாகும்
பொறுதியால்வாங்கிப் புகழவுருக்கிடே. ௫௫௩

உருக்கியசத்திடை யூட்டிடுகாரீயம்
உருக்கியசத்துக்கிடைக் கூட்டுநாகத்தை
உருக்கியசத்துக் கிடைதான்சேர்சூதமும்
உருக்கியசத்துக்கிடை காலதான்றங்கமே. ௫௫௪

தங்கத்தோடெல்லாஞ் சாரவுருக்கிட்டு
எங்கொத்துநின்ற யிடைக்கிடைகெந்தகஞ்
சங்கொத்தகெந்தியிடைக் கிடைக்கால்தாளகம்
அங்கொத்ததாளகத் தைந்திடைவீரமே. ௫௫௫

வீரத்திடைதான் விளங்குமனோசிலை
பாரொத்ததெல்லாம் பரிவாய்ப்பொடிசெய்து
நேரொத்தகுப்பியில் நீட்டியவாலுகை
சாரொத்தமூன்றுநாள் தாக்கவெரித்திடே. ௫௫௬

எரித்திட்டசெந்தூர மியல்பாயிருந்திடும்
அரித்திட்டவொன்பதி லாயிரத்தொன்றுதான்
தரித்திரமில்லைச் சாகானொருநாளும்
மரித்திடுவோர்கட்கு மார்பிணிலாணியே. ௫௫௭

ஆணியேசெந்தூரமைம் மூன்றுமாத்தாகும்
வாணிதான்கேழ்க்க மாவீசன்சொன்னது
பூணியேவேதைப் புகழாகப்பார்த்தவர்
நாணியேவீசன்போல் நலமாயிருப்பாரே. ௫௫௮

இருக்குங்கபரியி லிடுநீதிராவகம்
மருக்கியேயெல்லாம் மகத்தானசத்தாகும்
சொருக்கியேகாரந் துடியாயுருக்கிட்டுப்
பருக்கியேவாங்கிப் பலந்தானிறுத்திடே. ௫௫௬

நிறுத்தேயுருக்கில் நேரேசெய்சூதம்
மறுத்தேபலங்கொடு வாங்கியுருகிடும்
ஒருத்தேவயநாக மொக்கப்பலம்போட்டு
அறுத்தேநற்றங்க மதுவும்பலங்காலே. ௫௬௰

காலொடுகூடக் கலந்துவுருக்கிடு
கோலொடுவாங்கிக் கூடப்பொடிசெய்து
சீலொடுகெந்தகஞ் சேர்பலமூன்றுதான்
தாலோடரைப்பலத் தாளகம்போட்டிடே. ௫௬௧

போடுமனோசிலை புகழாயரைப்பலம்
நீடுசவ்வீரம் நிறையோவரைபலம்
ஆடுமிவையெல்லா மடவாகக்குப்பியில்
நாடுநல்வாலுகை நலமாயெடுத்திடே. ௫௬௨

கபரிசத்துச் செந்தூரம்.

எடுத்தேதினமூன்று மேத்தியேதீயிட்டும்
மடுத்தேசிலாக்கிட்டு வளமாய்ப்பதம்பாரு
கடுத்தேயடியிக் காரகாத்தேபதம்
படுத்தேசெந்தூரம் பாங்காயிரக்கிடே. ௫௬௩

இரக்கியேசெந்தூர மிருநவலோகத்தில்
உரக்கியேரெண் டாயிரத்துக்கொன்றேயிடு
தாக்கியேமாத்துத் தானேயிருபதாம்
அரக்கியேதூம்புர மாடிடும்வேதையே. ௫௬௪

ஷைசத்தில்தூம் புரவேதை.

வேதையாந்தூம்புரம் விளம்பக்கேள்சுந்தரா
பாதையாஞ்சத்தொடு பரிவானவீரமும்
போதையாஞ்சூதமும் புகழாந்தூரிசியும்
மாதையாய்க்கூட்டி வளமாய்ப்பொடிசெய்யே. ௫௬௫

பொடித்தேதிரியாய்ப் புகழாய்த்திரிசெய்து
அடித்தேநல்லாவி னெய்படவாய்த்துவைத்ததில்
மடித்தேகடிதாசி வைத்தேசுருருப்போல்
நடித்தேகொளுத்தி நலமாயவித்திடே. ௫௬௬

அவிக்கமுன்மேலே யடைபோல்நவலோகம்
தவிக்கவேதகடாய் தான்மேலேவைத்திடு
கவிக்கக்கறுத்திடுங் காச்சக்கனகமாம்
செவிக்கத்தசதீக்ஷை செய்தோர்க்குச்சுத்தியே. ௫௬௭

நிமிளைச்சத்துச் செந்தூரம்.

சித்திநிமிளைக்குச் சேர்ந்ததிராவகம்
குத்தியேபாரு குமறிமயனமாம்
பத்தியேகாரத்தைப் பாச்சியுருக்கிட
ஒத்தியேபொன்போ லுருகுமனுயாமே. ௫௬௮

மணியோர்பலத்துக்கு மாட்டோர்பலந்தங்கம்
கணியோர்செய்சூதங் காட்டோயலமதில்
தணியவுருக்கித் தான்ரெண்டாய்வைத்திடு
பணியோரொருபங்கிற் பாச்சுமுறைகேளே. ௫௬௯

கேளேயிதற்கிடை கெடியானகெந்தகம்
நாளேயிதற்கிடை நாட்டியேவீரமும்
தாளேயிதகிடை தான்சிலைதாளகம்
வாளேயிதுவெல்லாம் வளமாய்பொடித்திடே. ௫௭௰

நகஞ்ச நிமிளைக்குரு.

பொடித்தேற்குப்பியிற் புகட்டியேசிலைசெய்
மடித்தேநல்வாலுகை வைத்தெரிமூன்றுநாள்
முடித்தேசெந்தூரமாம் முடிந்தபதம்பார்த்து
எடுத்தேநற்றேவியை யிசையவும்பூசியே. ௫௭௧

பூசிக்கநன்று புகழாந்தசதீக்ஷை
வாசிக்கயில்லாட்டால் வாழ்தீக்ஷயஞ்சுசெய்
ஓசிக்கயில்லாட்டா லொருமூன்றுதீக்ஷயாம்
மாசிக்கரெண்டொன்று வாமிக்கிச்சொல்வதே. ௫௭௨

சொல்லும் நிமிளைத்துடியாஞ் செந்தூரந்தான்
அல்லும்நவலோக மையாயிரத்தெட்டுக்
கல்லும்பழுக்குங் காட்டாய்பரிசனம்.
வெல்லும்நிமிளை வேதாந்தநாதமே. ௫௭௩

நாதநிமிளை நலமானமுன்பாதி
யோதக்குருப்பண்ண வுரைக்கிறேன்சுந்தரா

கோதமணிக்கிக்கால் கூட்டிடுவீரமுங்
காதச்சவுக்காரச் சுன்னமுங்காலிடே. ருஎச

இடுநீபுழுகு இசையவேகாலிடை
பொடுநீபடிகிற் புகழாகக்காலிடை
கொடுநீகுருவண்டுக் கூட்டதிலேம்பது
மடுநீயிதுவெல்லாம் வார்த்தரையண்டமே. ருஎரு

அண்டத்தின்வெண்கரு வாட்டிமணிக்கப்பிப்
பண்டுத்தவெய்யலிற் பாங்காயுலர்த்திட்டு
நண்டுத்தவோடும் நலமானகல்லுப்பும்
கண்டுத்தசுண்ணும்புங் காட்டியரைத்திடே. ருஎசு

அரைத்தேயதுமேலே யடவாய்க்கவசஞ்செய்
விரைத்தேயதுமேலே வெறுஞ்சீலேமண்செய்து
புரைத்தேநற்சுன்னப் பொடிக்குள்ளிதைவைத்து
கரைத்தேகெசபுடம் கனக்கப்புடமிடே. ருஎஎ

புடமிட்டுவாலேயைப் போரானவாமத்தான்
இடம்விட்டுப்போகாம லேத்தியேபூசைசெய்
தடமெட்டுஞ்சித்தியாம் தானேபுருவமையம்
நடமிட்டதாண்டவம் நாங்காணலாகுமே. ருஎஅ

காணநிமிளேக் கனத்தகுருவாகும்
ஊணக்குருவேதை யுரைக்கமுடியாது
தோணத்துரைசொல்வேன் சுந்தராநீகேளு
வாணக்குருவுக்குள் மாட்டிடுவீரமே. ருஎகூ

வீரத்திஞேடே வெண்கண்டர்கூட்டிடு
தாரொத்துநின்ற சவாதிட்டுமெத்தித்து
காரொத்தகாற்றிற் கடுகவேவைத்துநீ
பாரொத்தவேதையைப் பாச்சமுறைகேளே. ருஅ௦

பொன்னிமிளைதரு.

கேளேசவ்வாதைக் கெடியாகத்தொட்டுநீ
தாளேசரக்கைத் தடவிப்பிரட்டியே
நீளேநவலோகம் நேராயிரத்தொன்று
தோளேகொடுக்கச் சுகமாத்திருபதே. ருஅக

இருபதுமாத்தோ வென்றுயாள்நாதத்தில்
கருவதுகஞ்சநி மிளொக்கிதுகாணும்
தருவதுயேம நிமிளேயேதானுகிற்
குருவதுவானுக்காற் கூறவும்கேட்டிடே. ௫௮௨

கேட்டிடுவேம நிமிளெக்குருவாட்டு
நாட்டிடுசூதத்தில் நலமாகக்கட்டுண்ணும்
ஒட்டிடுபாஷாண முபாசம்லோகத்தில்
தீட்டிடுமோத்துத் திசைமெச்சவன்பதே ௫௮௩

அன்பதுமாத்தாகு மாடுமேதூம்புரம்
அன்பதுமாத்தாக வாடும்பரிசினம்
அன்பதுமாத்தாகவாடுமே சந்தானம்
அன்பதுமாத்துக்கு மானியுமில்லையே ௫௮௪

இல்லைமயிலண்ட மிதமானவோட்டிலே
வல்லைதிராவகம் வார்க்கக்கொதித்திடும்
நல்லயகாரம்நலக்க விதிற்கூட்டிச்
செய்தவுருக்கத் திரண்டு வுருகுமே ௫௮௫

மயூரண்டச்சத்துச் செந்தூரம்

உருகியமயிலண்ட மோங்கிய தோர்பலம்
பருகியநாகம் பாச்சத்தில்நாற்பலம்
தருகியதங்கந்தானோ் பலங்கூட்டி
தெருகும்செய்சூதஞ் சேரும்பலம்ரெண்டே. ௫௮௬

ரெண்டோடேயெல்லாம் நேராயுருக்கிடத்
தண்டோடுகல்வத்தில் தானேபொடியாக்கிக்
கொண்டோடுகெந்தகம் கூட்டத்தில்நாற்பலம்
பண்டோவீரம் பாச்சப்பலந்தானே ௫௮௭

தானேமனோசிலைத் தாளகம்ரெண்டுந்தான்
தேனேவகைக்கிச் சிறக்கவுமோர்பலம்
மானேபொடித்து மாட்டியேகுப்பியில்
வானேநல்வாலுகைவைத்து யெரித்திடே. ௫௮௮

எரித்திடுவஞ்சு நாளிதவாய்ச்சிலாக்கிட்டு
அரித்திடுஞ்செந்தூர மானபதம்பார்த்து
சரித்திடுவாமத்திற் றுயைமறவாதே
கரித்திடுஞ்செந்தூரந் காட்டுமுறைபாரே. ௫௮௯

மயூரவண்டச் சத்துக்குரு.

பாரேநவலோகம் பாச்சாயிரத்தொன்று
நேரேயிருபது மாத்தாகநின்றிடும்
தூரமேயிலோடுசொல்லமகாவேதை
தாரேயிச்சத்துத் தான்குருவாமே. ௫௯௰

ஆகும்நிமிளைக்குரு செய்தாற்போல
வாகும்மணிக்கி மாட்டிச்சரக்கெல்லாம்
பாகுபடப்பூசிப் பண்பாய்புடமிட்டுத்
தாகுமயிலண்டந்தான் குருவாகுமே ௫௯௧

குருவிற்சவ்வாதுங் கொடியநல்வீரமுங்
தருவில்நற்காரமுஞ் சாத்தியேமத்தித்து
திருவிலாச்சரத்தைச் சேர்த்துப்பிரட்டியே
மருவிலாநவலோகம் மாட்டாயிரங்காணே. ௫௯௨

தாளகக்கரங்கரக்கி-அயவீரமுமெடுத்துச் சேந்தூரம் செய்ய.

காணேயிதின்வேதை கைமாத்திருபது
தோணேகுருவாய்த் தொட்டதெல்லாங்கட்டும்
ஆணேமயிலண்ட வோட்டுக்கடுஞ்சத்துத்
தோணேவெகுபோக்குச் சொல்லமுடியாதே. ௫௯௩

முடியாதாளக மூட்டிக்கரண்டியில்
அடியாந்திராவக மதில்வாருசத்தாகும்
குடியானசத்தினிற் கூட்டிநீகாரத்தைப்
பிடியாயுருக்கப் பிரண்டுமெணியாமே. ௫௯௪

மணியிலரைபலம் வாங்கியேகல்வத்தில்
தணியநல்வீரமுந் தானுமரைப்பலம்
கணியநலரெங்குங் காட்டுவிராகந்தான்
பணியநல்லாதண்டம் பாலாலரைத்திடே. ௫௯௫

அரைத்தேயுருட்டி யடவாகக்காய்ந்தபின்
நிரைத்தேநற்சீலை நேராகச்செய்திட்டு
தரைத்தேமண்ணுக்குள் தாக்குப்பிடமைந்து
விரைத்தேவெளியில் விளங்கப்புடமிடே. ௫௯௬

புடந்தீர்ந்தெடுக்கையிற் பெலத்தகுருவாகும்
அடந்தீர்ந்தாளக மாடுமுறைகேளு

597

கடந்தீந்தக்காட்டா மணக்கின்பருப்போடோ
தடந்தீர்ந்தத்தாளகம் தன்குருபோட்டிடே. ௶௯௭

போட்டோயரைத்துப் புகழாகவைத்துநீ
மூட்டேயிரும்பின் மேலேநீபூசிட்டு
ஊட்டேவொருசீலை யுருகப்பிடம்போடு
நாட்டேயிரும்பு நலமானவீயமே. ௶௯௮

ஈயவயத்திலெடுத்தே பலமொன்று
தேகைக்குள்ளே சுழன்றுவுருகையில்
பாயோத்தநாகம் பாச்சுவிடைக்கிடை
தாயோத்தங்கந்தா னெட்டிலொன்றுமே. ௶௯௯

ஒன்றுபலந்தா னூட்டுசெயசூதம்
நன்றிதுவெல்லாம் நலமாய்பொடிசெய்து
கன்றியகெந்தகங் காட்டுபலமூன்று
தன்றுமரைப்பலந் தான்சீலைபோடுமே. ௬௱

போட்டேநற்குப்பியிற் புகழவெடுத்திட்டு
மூட்டேநல்வாலுகை மூதண்டத்தீயிட்டு
நீட்டேதினமூன்று நேராய்ச்செந்தூரிக்குந்
காட்டேயைந்தூற்றொன்று கனகமுமாமே. ௬௱௧

காந்தவீயச் செந்தூரம்.

ஆமேநற்மாந்தத்தி லடவாகயிக்குரு
தாமேநற்பூசித் தனிச்சீலைசுத்தியே
ஓமேபுடமொன்றிணி ருகியேவீயமாம்
தேமேயிவ்வியஞ் சிறக்கப்பலந்தூக்கே. ௬௱௨

தூக்கிக்குவைக்குள்ளே சூட்டியுருகையில்
தாக்கியேநாகந் தாணந்திடைபோடு
தேக்கிச்செயசூதம் சிறக்கப்பலமொன்று
வாக்குயகாரீய மறைப்பலம்போட்டிடே. ௬௱௩

போட்டிடுகெந்தகம் புகழாகக்காற்பலம்
நீட்டிடுவெல்லாம் நிறைபாவுருக்கியே
தாட்டிடுகல்வத்திற் றக்கப் பொடிசெய்து
நாட்டிடுகெந்தகம் நாற்பலமாகுமே. ௬௱௪

ஆகுமனேசிலை யதிலேயொருபலம்
பாகுமேயெல்லாம் பக்குவம்பண்ணியே

605

தாகுமேகுப்பியிற் றனையெடுத்திட்டு
ஒருமேவாலுகையுட னேற்றித்தீயிடே. ௯௱௫

இட்டேதினமூன்றி லெடுக்கச்செந்தூரம்
மட்டே நவலோக மாட்டாயிரத்தொன்று
பட்டேநன்மாத்துப் பதினைந்துதப்பாது
ஒட்டேநற்காந்த முறுதியைக்கண்டிடே. ௯௱௬

அப்பிரகாயச் செந்தூரம்.

கண்டிடுவப்பிரகங் கடியதடுக்கு
ஒண்டிடுவிக்குரு வுறுதியாய்ப்பூசிட்டு
பண்டிடியெலியாலே மெண்ணெயிற்சீலை
தண்டிடச்சுத்தித் தானேபுடம்போடே. ௯௱௭

போட்டேயெடுக்கப் புகழாகவீயமாம்
நாட்டேயிவ்வீயம் நலமாய்ப்பலமொன்று
நீட்டேவுருகையில்நேர்நாகமோர்பலம்
பூட்டேநற்சூதமும் புகழாய்பலமொன்றே. ௯௱௮

புகழானகாரியம் போடுவரைப்பலம்
நிகழானதங்கம் நீட்டதிற்காற்பலம்
தகழாயுருக்கித் தானேநொருக்கிட்டு
அகழாமனேசிலையது மூப்பலம்போடே. ௯௱௯

போட்டிதிற்கெந்தகம் புகழப்பலம்ரெண்டு
ஊட்டதில்வீர முருகப்பலமறை
நீட்டிதுவெல்லாம் நிமிரப்பொடியாக்கித்
தேட்டிதுகுப்பியிற் சிறக்கவடைத்திடே. ௯௱௰

அடைக்கமுறைகேளு வப்பனேசுந்தரா
இடைக்கியரைவாசி யெடுத்திடுகுப்பிக்கு
தடைக்குநல்வாலுகைத் தானேரித்தீமூட்டி
நடைக்கிநீமூன்றுநாள்நலமாயெரித்திட்ட. ௯௧௧

எரித்துப்பதம்பார்த் திறக்கச்செந்தூரமாம்
மரித்துநவலோக மாயிரந்தொன்றிடு
நரித்துநன்மாத்து நலமாயிருபது
பரித்துநல்லப்பிரகப் பராசத்திநாதமே. ௯௧௨

சத்தியாமப்பிரகச் சத்தினற்சூதஞ்சாம்
சத்தியாமப்பிரகச் சத்தினற்றங்கமாம்

சத்தியாமப்பிரகச் சத்தினூற்சித்தியாம்
சத்தியாமப்பிரகந் தான்போக்குமெத்தவே. ௬௱௧௩

சிற்றண்டத் தோடு.

மெத்தவேயண்டத் தோல்விளம்புறேனீயமாம்
அத்தவேமுன் போலணைக்துக்குருபூசி
பத்தவேதாரத்தைப் பார்ச்சியுருக்கிடச்
சத்தவேயண்டத் தோடானீயமாகுமே. ௬௱௧௪

ஆகுமேயண்டமட தானயீயந்தான்
தாகுமேயோர் பலந்தானேயெடுத்திடு
லாகுமேவைத்து வளமாயுருகையிற்
சாகுமேநாகந்தாகுப் பலமொன்றே. ௬௱௧௫

ஒன்றேபலமிடு வுறவானகாரீயம்
நன்றேசந்தா னூட்டுவொருபலம்
கண்ணேநற்றங்கங் காட்டுப்பலமரை
எண்ணேயிதுவெல்லா மியல்பாயுருக்கிடே. ௬௱௧௬

உருக்கிநொறுக்கி யுறவானகெந்தகம்
அறுக்கிப்பலம்நாலு வதில்வீரமோர்பலம்
தருக்குமனேசிலை தானேயிருபலம்
நொருக்கிநொறுக்கி நேர்குப்பிக்கேற்றிடே. ௬௱௧௭

ஏற்றிடுவாலிகை யிதமாகமூன்றுநாள்
பார்த்திடுசெந்தூரம் பக்குவமானபின்
காத்திடுமீசானங் கணேசன்முதற்பூசை
போற்றியேவொன்பதிற் பூட்டாயிரத்தொன்றே. ௬௱௧௮

ஆயிரமேலோடு மண்டமகாசத்துப்
பாயிரமாத்துப் பரிவாயிருபது
தாயிரசத்தை தனிக்குருபண்ணினல்
ஓயிரக்காயத்துக் குத்தவங்கண்டிடே. ௬௱௧௯

கற்பூரசிலாசத்துச் செந்தூரம்.

கண்டிடுகற்பூர சிலாசத்துமேற்குரு
ஒண்டியேபூசி யுருக்கிடச்சத்தாகும்
அண்டியேசத்துவது வோர்பலத்துக்கு
தண்டியேசூதந் தானேர்பலங்கூட்டே. ௬௱௨௰

கூட்டிதிற்றங்கங் குறையாதொருபலம்
நீட்டிதுமூன்றுக்கு நேர்சமன்கெந்தகம்
பூட்டிநொறுக்கிப் புகட்டியேகுப்பியில்
ஆட்டியேவாலுகை யடவாயெடுத்திடே. சூஉக

எடுத்திடுமூன்றுநாள் ளெரிக்கச்செந்தூரமாம்
அடுத்திடுமொன்பதி லாயிரத்தொன்றிடு
படுத்திடுமாத்துப் பதினறுதப்பாது
கொடுத்திடுசெந்தூரங் குன்றியிடையுண்ணே. சூஉஉ

உண்ணுதினம்பத்து வோங்கியேசட்டைபோம்
நண்ணும்புருவநடு நாட்டியங்காணலாம்
கண்ணிஞ்சிவக்குங் கனகமாந்தேகமும்
நண்ணுங்கவனத்திற் பாருடல்வேண்டாமே. சூஉங

கெந்தகச்செம்பு செந்தூரம்.

ஆமேயினிக்கே னறையுறேன்சுந்தரா
ஓமேநற்கெந்தியி லுறவாய்திராவகம்
வேமேகொதித்து விரவியேகாரமும்
தாமேகுகைக்குள்ளே சாத்தியுருக்கிடே. சூஉச

சாத்தியுருக்கிடச் சத்தாகும்நீபாரு
மாற்றியேயூதிட மகத்தானசெம்பாகும்
போற்றியேசத்துப் புகழ்பலமொன்றுதான்
சாத்தியேபூநாகச் சத்துமரையிடே. சூஉரு

அரையிடுதங்க மடவாயுருகையில்
நிறையிடைசூதம் நேரேபலமொன்று
கரையிட்டுருக்கிக் கவிழ்ந்துப்பொடியாக்கி
துறையிட்டகெந்தஞ் சூட்டுபலமூன்றே. சூஉசு

மூன்றுபலத்தோடே மூடியேகுப்பியில்
தான்றுகவாலுகைத் தானேற்றித்தீமூட்டி
கான்றுதினமூன்று கைமுறையாயெரி
ஊன்றுநற்செந்தூர முருக்கம்பூபதம்பாரே. சூஉஎ

பாரேயிச்செந்தூரம் பாச்சவையாயிரம்
நேரேதானெண்பது மாத்துக்குமேலோடும்
காரேயிதற்குன்றி காட்டேழுநாளுண்ண
சாரேயொருசட்டை தங்கம்போல்வீழுமே. சூஉஅ

வீழுமேசத்தை விளங்கவேயூதிடத்
தாழுமேசெம்பு தானுகும்பாருநீ
வாழுவேதங்கத்தி லாட்டிடுநூற்றென்று
கேளுமேதங்கங் கெடியானசெம்பிதே. ௯௨௯

ஷை செம்பில் தங்கச் செம்புவேதை.

செம்பிலேவொன்று சேர்நூறுதங்கத்தில்
வம்பிலேசெம்பாச்சு மகத்தானதங்கத்தில்
கொம்பிலேநூற்றெருந்தங்கு மட்டியெரித்திடும்
அம்பிலேவொட்டாம லடைக்கின்றேகண்டிடே. ௯௩௰

கண்டிடுகெந்தகச் செம்பைநாலாக்கட்டோ
ஒண்டிடுமாத்து வுறுதியைத்தாக்கட்டோ
பண்டிடமூன்றுகப் பாச்சட்டோசுந்தரா
தண்டிடும்வேகத்தை தணிக்கமுறைகேளே. ௯௩௧

முறையானகெந்தகச் செம்போர்பணவிடை
நிறையானசெம்பு விராகனில்நீயிட்டுக்
குறையாதேசெம்பொனதிர் கூட்டுத்திசைவெள்ளி
அறையானமாத்து யைந்துக்குயேருதே. ௯௩௨

ஏருதகெந்தகச் செம்பொன்றுதாயொன்று
மாருதிரும்பிலே மாட்டுதிசைக்கொன்று
கூருதிரும்பொன்று கூட்டுத்திசைவெள்ளி
தாருனமாத்துத் தானேழுகாணுமே. ௯௩௩

காணுமேலோகத்திற் காட்டியுருக்கினுல்
தோணுமேதங்கத்திற் றெருந்தமும்நூறேறும்
ஆணுமேதேவிக்கி யாதிமகாநாதம்
ஊணுமேவேதை யுரைக்கமுடியாதே. ௯௩௪

மனேசிலை சத்துச் செந்தூரம்.

முடியாமனேசிலை மூட்டியேபீங்கானில்
செடியாந்திராவகங் கெண்ணிதமாயிதில்வாரு
வடியாகவெந்து வளம்பெறச்சத்தாகுங்
நெடியானகாரத்தை நீட்டியுருக்கிடே. ௯௩௫

உருக்கியசத்து வொருபலந்தான்தூக்கி
நெருக்கிக்குகையிலே நேராயுருக்கையில்

தருக்கியநாகந் தானேந்திடைபோடு
பெருக்கியதங்கமும் பேரோர்பலம்போடே. ௯௩௬

போடேசெயச்சூதம் புகழாய்ப்பலமொன்று
தேட்டேயிதுவெல்லாந் திகழவுருக்கட்டு
நாட்டேநற்கெந்தகம் நாட்டுப்பலம்நாலு
ஊட்டேநொறுக்கி யுருகுப்பிக்கேற்றிட்டே. ௯௩௭

ஏற்றியேவாலுகை யெரித்திடுமூன்றுநாள்
போற்றியேசெந்தூரம் புகழப்பதம்பாரு
ஆற்றியேவொன்பதி லாயிரத்தொன்றிட
நேத்தியேமாத்து நிறைவுயமென்பதே. ௯௩௮

லிங்கச்சத்துச் செந்தூரம்வேதை.

நிறையவும்லிங்கத்தில் நேர்வார்திராவகம்
பறையவும்வெந்திடும் பாங்காயுருக்கிடுங்
குறையவும்போகாது கொடுமணியாஞ்சூதம்
துறையவும்சூதத்திற் சூட்டிப்பலந்தூக்கே. ௯௩௯

தூக்குப்பலந்தான் சுகமானதங்கத்தை
நோக்குமிரும்பு நேராயுருக்கிட்டு
தாக்குப்பலமொன்று தானேயிதுக்குள்ளே
ஆக்குயுருக்கி யடவாய்நொறுக்கிடே. ௯௪௰

நொறுக்கியேகெந்தகம் நுகாப்பலம்நாலு
மறுக்கியேகூட்டி வார்த்திடுகுப்பியில்
தருக்கியேவாலுகைத் தானேற்றித்தீமூட்டி
உருக்கியேமூன்று ஞளுறவாயெரித்திடே. ௯௪௧

உறவாகச்செந்தூர முருக்கம்பூப்பசும்பார்த்து
நிறையாகவாங்கியே நேராகநீகேளு
மறைவாகக்குன்றி யிடைதின்றபத்துநாள்
துறவாகுவானஞ் சூழ்சட்டைப்போகும். ௯௪௨

போகுமேசெந்தூரம் புகட்டாயிரத்தொன்று
வாகுமேமாத்து வழங்கியமுப்பதாம்
தாகுமேவொன்பது லோகமுந்தான்பொன்னும்
பாகுமேலிங்கம் பரிவாய்செந்தூரமே. ௯௪௩

கற்பம்.

செந்தூரந்தின்ன யிற்றேகமயக்கினல்
தந்தாருமாவின்பால் தான்குடிபச்சையாய்

யெந்தூரும்போகாம லெடுக்குமதிமட்டும்
கந்தூருஞ்சித்தியாங் காயத்தைக்கட்டிடே. ௬௪௪

கட்டிடுஞ்சித்தியாங் காயப்பரீக்ஷையை
நட்டிடுகத்தியால் நடுவுறவீசினுல்
ஒட்டிடுகத்தியொன்பதுண்டாகும்
முட்டிடுகாயத்தில் முள்ளுங்கிழியாதே. ௬௪௫

கிழியாதுமேலுங் கெட்டிச்சிலைபோல
அழியாதுகாய மண்டமொடுங்கிலும்
வளியாதுவாசி மறிகிப்பறியாது
தெளியாதுலகத்தே செத்தவர்கோடியே. ௬௪௬

கோடிதவஞ்செய்தாற் கூட்டிடுவாமத்தில்
ஆடியேவாயிரங் கோடிதவஞ்செய்தால்
நாடியேவந்துவிதத்தைத் தீக்ஷைநாட்டிடு
தேடித்தெசதீக்ஷ தெக்ஷணாமூர்த்தியே ௬௪௭

மூர்த்தியாய்நின்று முழுச்சக்கரமேறு
ஆர்த்தியாய்ப்பூசித் தோனவன்தெசதீக்ஷையோன்
ஊர்த்தியாமேலே யுறுமனம்வாங்காது
கீர்த்தியாய்ச்சித்தறிற் கெடியாகவாள்வாரே. ௬௪௮

வீரசத்துமணிவெள்ளை பாஷாணவெள்ளிவேதை.

வாழவேசவ்வீரம் மருவிபபாஷாணம்
தாழவேவைத்துத் திராவகம்நீவாரு
மூளவேகு மூட்டியேகாரத்தை
நீளவேயூது நிலைத்துநின்றுகுமே. ௬௪௯

ஆடியசத்துக்கு மந்தயிடைவெள்ளி
ஊடியேகூட்டி யிருக்குமுகத்திலே
தேடியேசத்திடை செபருதங்கூட்டிநீ
நாடிமணியைநலமா ரெடுத்திடே. ௬௫௰

எடுத்தமணியையியல் நாலுக்கொன்றுதான்
அடுத்தசவுக்கார மந்திடைவீரமும்
தடுத்தபுழுகுந் தானுனசீனமும்
மடுத்தமணிக்கிடை வாய்நீரிலாட்டிடே. ௬௫௧

ஆட்டியேபூசி யடவாய்மணிமேலே
நீட்டியேகாய்ந்தபின் நேரண்டத்தூளில்லை

652

மூட்டியேமூடி முதிரப்பிடம்போடு
தாட்டியவெள்ளியுஞ் சத்துங்குருவாமே. ௯௫௨

குருவையெடுத்து கொடுவங்கமாயிரம்
மருவிவுருகையில் மாட்டொன்றுசீனமாம்
மருவியசெம்பிலேங் நூற்றிக்கொன்றிடு
திருவாயசீனஞ் சிறப்பானவாறே. ௯௫௩

வாறேகுடவனில் மாட்டிடுநூற்கொன்று
தாறேயிரும்பிற் றுக்கொடு நூற்கொன்று
ஆயேநற்காயமைங் நூற்றிக்கொன்றிடு
வேறேதுமில்லே மெதுவானசீனமே. ௯௫௪

சீனத்துறையோட செய்பத்துமார்க்கமும்
வானேத்துச்சொன்னேன் மகத்தானதீனீறு
பானத்தையுண்டு பாருங்கள்மைந்தரே
காணுத்தசிப்பிமேல் காட்டுறேன்கண்டிடே. ௯௫௫

விருத்தம்.

பாரப்பாதிராவகத்தி லுபாசத்தினேடு,
பாஷாணத்துறையோடு பத்துச்சொன்னேன்
நேரப்பாபாஷாண முபசரங்களெல்லாம்
நிறைநிறையா யிப்படியேவாடலாகும்
தாரப்பாகிளிஞ்சியைத்தான் தெதட்டுமெள்ளச்
சாற்றுறேன்திராவகத்தைச் சுந்திரமேபாரு
தேரப்பாவோடுகிற சிங்காரம்போலச்
செகமெல்லாம் வாதமயமாகும்பாரே. ௯௫௬

வேறு.

மூன்மூலிகை-உப்பாதிதிராவகம்.

பாருமுன்பத்து பாங்கானதஞ்சுபோய்
பாருமுன்னஞ்சு பங்கையும்நீகேளு
ஒருமுன்தொந்த மொடுங்காமல்நீகேளு
காருமுன்வெவ்வேறாய் கடுகயிறக்கிடே ௯௫௭

கிளிஞ்சி சுத்தி

இறக்குந்திராவக மெடுத்தேயடைத்திடு
சிறக்குங்கிளிஞ்சிற் றிரமாய்முதிர்ந்து

நிறக்குமூவர்மண் ணும் நேர்சுன்னங்கூட்டியே
உறக்கக்கிளிஞ்சியை யுறவாயெரித்திடே. ௬௫௮

எரித்தேகருப்பெல்லா மிகமாய்க்கழுவியே
நெரித்தேநொறுக்கி நேராகப்பீங்கானில்
பரித்தேதிராவகம் பாச்சிடுபொங்கிவேம்
சரித்தேகுளிர்ந்தத் தலர்த்தினில்வைத்திடே. ௬௫௯

வைத்திட்டுமூன்றுநாள் வடித்தேதெளிதெல்லாம்
நைத்திட்டநட்டியை நலக்கக்கொதிப்பித்து
கைத்திட்டமாகக் கடுகமெழுகாக்கி
பைத்திட்டசாரம் பலம்ரெண்டுக்கப்பியே. ௬௬௰

சாரக் கட்டு.

அப்பிக்கவசமா யமைத்துக்குகைக்குள்ளே
ஒப்பியேசில்லிட்டு வுருகவேசீலைசெய்
கொப்பிப்புடம்போடக் கொடுஞ்சாரங்கட்டுண் ணும்
செப்பியசாரஞ் செயசாரங்கண்டிடே. ௬௬௧

கண்டிடுசாரத்திற் காசிரண்டேதூக்கி
ஒண்டிடுசிபிப்த் திராவகம்விட்டரை
தண்டிடுமரைப்பலந்தான் வீரமேற்பூசிப்
பண்டிக்குகைக்குள்ளே பாச்சிப்புடம்போடே. ௬௬௨

வீரக் கட்டு

போடும்புடமொன்றிற் புகழமணியாகும்
நீடுஞ்சவ்வீரத்தை நீட்டநவலோகம்
ஓடுமேநூற்கொன்றுக் குறுமாத்துவொன்பது
ஆடுமேவீரமாண்மை யாஞ்சாரமே. ௬௬௩

சூத மயனம்.

சாரம்பணமென்று தனிவீரமோர்பணம்
ஆரநற்சூதமது வோர்பணம்விட்டு
நேரவரைத்திட்டு நீட்டியேசிப்பிநீர்
சாரவேசூதந் தானுமயனமே. ௬௬௪

மாசித் திரசம்.

மயனத்தின்பேரு மாசித்திமாரசம்
பயனித்தசூதத்திற் பணவிடையேதாக்கிக்

665

கயனித்தசாரமுங் காணோர்பணவிடை
தயனித்தவீரமுந் தானோர்பணந்தூக்கே ௬௫

தூக்கியேசூதந் துடியாய்ப்பலமொன்று
தாக்கியேவிட்டுத் தான்வாருசிப்பிநீர்
தேக்கியேயோட்டத் திரண்டுமணியாகும்
வாக்கியேமூசையில் மருவவுருக்கிடே. ௬௬

உயர்தேவ தாரசம்.

உருக்கியசூதமுயர் தேவதாரசம்
பருக்கியதேவதார சத்திற்பணந்தூக்கு
நெருக்கியசாரம் நேரேபணந்தூக்கு
தருக்கியவீரந் தானோர்பணமெடே. ௬௭

எடுத்தேயரைக்கையி லிதில்வார்பலஞ்சூதம்
மடுத்தேநச்சிப்பிநீர் வார்த்தேயரைத்திடு
கடுத்தேயுருட்டிக் கடியகுகைவைத்து
மடுத்தேயுருக்கவு மணியாகவாடுமே. ௬௮

ஆதி மகாரசம்.

ஆடும்ரசத்தின் பேராதிமகாரசம்
ஓடும்நற்செம்புரசத்திற் பணந்தூக்கு
தேடும்நற்சாரஞ் சிறக்கப்பணந்தூக்கு
நீடுநல்வீரமும் நேரேபணமெடே. ௬௯

எடுத்தேயரைத்து யிதில்வார்பலஞ்சூதம்
மடுத்தேநற்பிநீர் வாத்தேயரைத்திட்டு
தடுத்தேகுகையிற் றூங்கியுருக்கிடப்
படுத்தேகுகையிற் பாங்காகநிற்குமே. ௭௦

உருத்திராசம்.

நிற்கும்ரசத்தின்பேர் நிலையானருத்திரன்
நற்குமிதிலோர் பணந்தூக்குநண்பாபத்
தற்குநற்சாரந் தானேபணந்தூக்கு
மற்குநல்வீர மதிலோர்பணமெடே. ௭௧

எடுத்தேயரைப்பா யிசையவேசிப்பிநீர்
மடுத்தேவொருபலம் வாரிதிற்சூதத்தை

672

கடுத்தேபரைத்துக் காட்டிக்குகைக்குள்ளே
கொடுத்தேயுருக்கச் சுழன்றுநின்றுடுமே. கூஎ௨

பிரமரசம்.

ஆடுமணிப்பே ரப்பனேசுந்தரா
நீடும்பிரமரச மென்றுபேர்சொல்வார்
கூடும்நற்பிரம ரசத்திற்பணந்தூக்கி
ஓடும்நற்சார மொருபலங்கூட்டிடே. கூஎங

கூட்டியேவீரங் குறையாதொருபணம்
மூட்டிடுசிப்பிநீர் முழுங்கவரைத்திடு
நாட்டிடுசூதம் நலமாய்ப்பணமொன்று
ஊட்டிடுவாட்டி யுருக்கிநீபார்த்திடே. கூஎச

பரக்குச் சந்தானசூதம்.

பார்த்திடுசூதப்பேர் பாக்குச்சந்தானமாம்
போர்த்திடிசந்தான சூதத்திலோர்பணஞ்
சாற்றிடுசாரந் தானேபணமொன்று
கோர்த்திடுவீரங் குறிப்பாய்பணந்தானே. கூஎரு

பாலரசம்

தானேயிதெல்லாந் தாக்கியேசிப்பிநீர்
வானேயரைத்து மாட்டுப்பலஞ்சூதம்
கோனேயுருட்டிக் குகையிலுருக்கிடு
வானேயிதன்பேர் வாலாசமாமே. கூஎகூ

ஆமேநற்பால சத்திற்பணமெடு
ஓமேநற்சாரமொரு பணமேதூக்கி
வேமேநல்வீரம் விளங்கப்பணமொன்று
தாமேநற்சிப்பிநீர்தான் குத்தியாட்டிடே. கூஎஎ

நிர்மலசூதம்-

ஆட்டிடினற் சூதமதிலேபணம்வாரு
ஊட்டிடுவெல்லா முறுட்டி புருக்கிடு
நீட்டிடிநாமம் நிர்மலசூதங்காண்
பூட்டிடிற்சூதம் புகளித்துக்கண்டிடே. கூஎஅ

கண்டிடுநிர்ம்மல சூதத்திலோர்பண
பண்டிடுசாரம் பணமேநிறுத்திடு

தண்டிடுவீரந் தானேபணம்போடு
ஒண்டிடுசிப்பிநீ ருருக்கவரைத்திடே. ௩௭௯

நீலகண்டசூதம்.

அரைக்கையிற் சூதமதிலோர்பலம்வாரு
நிரைக்கையிலாட்டி நிமிரக்குகையேற்றி
தரைக்கையிலூது தளம்பிபணியாகுந்
துரைக்கையிற்சூதப் பேர்சொல்நீலகண்டரே. ௩௮௰

கண்டருடனே கைமுறையாகவே
ஒண்டியேசொன்னே னொருபத்துச்சூதமுந்
தண்டியேபத்துக்குள் தனித்தனியொவ்வொன்றிற்
கண்டிடுவேதையுங் காயமுஞ்சித்தியே. ௩௮௧

சித்திரசந்தான் சேர்ந்தபலமொன்று
உத்தநற்றங்க மொருபலமேகூட்டி
ஒத்தேயுருக்கியொரு மணியாய்வாங்கிப்
பத்தேநொறுக்கிப் பரிவாகக்கேளுமே. ௩௮௨

கேளுமேகெந்தகங் கெடியாகயிந்திடை
வாளுமேகூட்டி மருவிடுகுப்பியில்
நாளுமேவாலுகை நலமாய்யிதையேற்றி
தாளுமேமூன்றுநாள் தானேயெரித்திடே. ௩௮௩

தேசரசச் சேந்தூரம்.

எரித்தேபதத்தி லிறக்குஞ்செந்தூரமா
மரித்தேநவலோகத் தாயிரத்தொன்றிடு
பரித்தேநன்மாத்து பதினாறுந்தப்பாது
மரித்தேகெடுக்கா தேமாசித்தாகொண்டிடே. ௩௮௪

கொண்டிடுகுன்றி யிடைதான்தினமொன்று
பண்டுமறுபது நாள்கொடுநீகேளு
தண்டிடுசட்டை தானென்றுபேய்விடும்
மண்டிடுகாய மருணனிறமாமே. ௩௮௫

ஆமேபராபரத் தாதியாம்நின்றநீர்
தாமேதடுத்தாண்ட சச்சிதாநந்தமே
வாமேவரைதோறும் வாங்குமேசட்டைதான்
ஓமேகடாக்ஷத்து வுற்பனஞ்சொல்லுமே. ௩௮௬

தத்துவம் தொண்ணூற்றாறுக்கும் சட்டையும் தொண்ணூற்றாறுதாம்.

சொல்லுகிறேன்சுந்தரா சுகமாகக்கேளுங்கள்
சொல்லுகிறேன்தத்துவ தொண்ணூற்றாறுக்குஞ்
சொல்லுகிறேன்சட்டையுந் தொண்ணூற்றுவாறேபோஞ்
சொல்லுகிறேன்பின்பு கேள்தோலுமுரியாதே. ௲௮௭

உரியாதுசட்டை யொடுங்கிற்று தத்துவம்
மரியாதுதேக மால்கோடிபோகிலுந்
தெரியாதேலோகத்தோர் செத்தார்வெகுகோடி
அரியாதேயைவரு மழிந்தார்கள்காணுமே. ௲௮௮

காணுமேயைவருங் கைவிட்டுப்போனதேன்
பூணுமேபெண்ணினாற் போனாரேதேவர்கள்
தோணுமேசித்தர்கள் தோலாசைத்தள்ளினார்
ஊணுமேயுப்பி முறுதியாப்புளியுமே. ௲௮௯

உப்பின்புளியின்குணம்.

புளியின்குணங்கேள் பெருத்ததிரைமீறும்
அளியும்லவணத் தாலப்பாரைமீறுந்
தெளியுமுதுரெண்டாற் செகமெல்லாங்கெட்டுது
ஒழியுமொழியுமென் றோதினார்சித்தரே. ௲௯௰

சித்தர்தாஞ்சொன்னது செகச்சாலகற்பந்தான்
ஒத்தல்லோவுப்பையொழிகாமலோகத்தோர்
செத்தல்லோபோனார் செகத்துநூல்பார்த்தவர்
கற்றல்லோசாகாமற் கற்பதுகல்வியே. ௲௯௧

கல்விதானென்செயுங் கடுநாக்குரிசைக்கு
கல்விதானென்செயுங் கல்விமயக்கத்தை
கல்விதானென்செயுங் காமநோய்கொண்டக்கால்
கல்விதான்வந்தால் கட்டாய்மனதையே. ௲௯௨

கற்பத்துக்குப்பத்தியம்.

மனதுக்குயேற்ற வழிசொல்வேன்சுந்தரா
மனதுக்குவுப்புமேல் மோகந்தீர்ந்திட
மனதுக்குவுப்பை வளமாகக்கட்டியண்
மனதுக்குவொத்த மாபுளிகேளுமே. ௲௯௩

694

கேளும்புளியாரை கெடியாப்புளிகூட்டித்
தாளுமிளகுந் தனிப்பாலுநெய்கொள்ளு
மேவளுஞ்சிறுகீரை விளங்கும்பொன்னுக்கண்ணி
தேளும்பணியாரஞ் சிறுபயர்கொண்டிடே. ௯௯௪

கொண்டிடுவெல்லாங் குலாவியசர்க்கரை
தண்டிடுதேன்பழந் தனித்தமதுரங்கள்
ஒண்டிடுகோரக் கருதியாங்கற்பமாம்
பண்டித்ததாம்பூலம் பகருமுறைகேளே. ௯௯௫

தாம்பூலச்சுன்னம்-கற்பச்சுன்னம்.

கேளேயிச்சுன்னம் கெடியானவுத்மமம்
நாளேசிலாசத்து நற்சுன்னம்நல்லதங்கா
காளேகன்னுற்சுன்னங் கடுமேநீங்கிடுந்
தாளேபவளந் தனிச்சுன்னமாகுமே. ௯௯௬

ஆகுமேவுப் புளியொடுசுன்னமும்
பாகமேசொன்னேன் பதையாவற்கொண்டேறு
வாகுமேயிப்படி வையாமற்சித்தர்கள்
சாகுமேனென்று சாற்றினூர்சித்தமே. ௯௯௭

விருத்தம்.

கற்பமுண்டுயேறுதற்கு வரிசைசொன்னேன்
கைமுறையாயுலகமெல்லாஞ் சித்தாய்ப்போக
அற்பமென்றுயென்னூலைச் சொன்னுனுகி
லழுந்துவானவன் கோடிநரகத்துள்ளே
சொற்பமென்று காயசித்திகொண்டுதேறு
தொடர்ந்துவுன்னே விட்டகுறைதூக்குந்தூக்கும்
னிற்பமென்று மனம்பிடித்துநில்லுநில்லு
நிச்சயந்தா னென்னூலிற்சித்தியாமே. ௯௯௮

தேவரசக்குரு-வேறு.

ஆகியதேவ ரசம்பலமொன்று
வாகியதங்க மாட்டிடுமுப்பலம்
தாக்கியகூட்டித் தானேயருக்கிட்டு
பாகியமேற்பூசப் பருவமுங்கேட்டுடே. ௯௯௯

கேட்டிடுவீரங் கெடியாஞ்சவுக்காரம்
நாட்டிடுசீனம் நலமாப்புழுகொடு

தீட்டிடுபூரம் சிறக்கவகையொன்றி
மூட்டிடுமும்மூன்று காசிடைதானுமே. ௭௱

தானுமேயெல்லாந் தானரைவாய்நீரால்
வானுமேயெல்லா மணிமேறேபூசிட்டு
காணுமேயண்டோடுங் கடலினுரையோடும்
மூணுமேரெண்டு முறுகப்பொடிசெய்யே ௭௱க

பொடியைக்குகை யிலேபோட்டுமணிவைத்து
நெடியப்பொடியில் நிறம்பகேல்வைத்திட்டு
மடியச்சில்லிட்டு வளமாகச்சீலைசெய்
அடிக்கடியோர்புட மாருதம்போட்டிடே. ௭௱௨

போட்டிடுநீயீசானம் புகழ்சிவபூசைசெய்
மூட்டுநீவாசியை முதிரக்குளிர்ந்தபின்
நாட்டுநீவாங்கு நலத்தகுருவாகும்
ஓட்டுநீதங்க முறுதியாஞ்சுன்னமே ௭௱௩

சுன்னப்பரியிலே சூட்டியேவீரமுஞ்
சுன்னப்பரியிலே சூட்டியேசினமும்
சுன்னப்பரியிலே சூட்டிப்புழுகிட்டு
சுன்னப்பரியிலே சூட்டியரைத்திடே. ௭௱௪

அரைத்ததைத்தொட்டு வறுபத்துநாளுக்கும்
நிரைத்ததைப்பூசிநீ நீட்டியேயூதிட
தரைத்ததுசுன்னமாம் தானேசரக்கெல்லாம்
சுரைத்தரையொவ்வொன்றிற் பாங்கானவேதையே. ௭௱௫

சுன்னத்துறை வயணம்.

வேதைக்குச்சுன்னத்தில் வீரமும்லிங்கமும்
பாதைக்குக்காரமும் பாச்சியரைத்திட்டு
தாதைக்குநூற்கொன்று தாக்கிடிலொன்பதி6
மாதைக்குமாத்து மகத்தாம்பதினேந்தே. ௭௱௬

பதினேந்துமேலே பறந்திடுமென்பது
விதிமிஞ்சியோடும் வெவ்வேம்றசரக்கெடு
பதிமிஞ்சியொன்பதில் மாட்டிடுமேலேற்றி
கெதிமிஞ்சியோடுங் கெடியானவேகமே. ௭௱௭

பரிச்சுன்ன வேதை.

வேகப்பரிச்சுன்னத் தோடேசவ்வாதிட்டு
மேகப்பரிச்சுன்னத் தோடேபிடுவீரம்
வேகப்பரிச்சுன்னத் தோடிடுகாரமும்
வேகப்பரிச்சுன்னத் தோடேயரைத்திடே. எ௱அ

அரைத்தமருந்தை யாட்டமுறைகேளு
உரைத்தவுபரச மொருநூற்றிருபதும்
விரைத்தேதடவி விளங்கவுருக்கிட
கரைத்தேமணியாய்க் கண்விட்டுயாடுமே. எ௱கூ

ஆடுமேவொவ்வொன்றி லந்தயிடை தங்கம்
நாடுமேசூதமும் காட்டும்பரிக்கிடை
ஊடுமேகெந்தக மொக்கச்சமன்கூட்டி
தேடுமேகுப்பியிற் சேர்த்துச்செந்தூரியே. எ௱ய

செந்தூரமானதை தேய்க்கநவலோகம்
பந்தூருநூற்கொன்று பாய்ச்சப்பசும்பொன்னும்
எந்தூருமோடு மிபல்நூற்றிருபதுக்
கந்தூருமாயிரங் கடந்திட்டுவோடுமே. எகக

உபசரக்களங்கச் செந்தூரம்.

ஓடுமுபரசச் சத்துவாஞ்செந்தூரம்
நாடுமேநூற் றிருபதுநீகேளு
தேடுமேகலப்பமாய் சீராகவொவ்வொன்று
ஊடுமேதின்னிலுறுதியாங்காயமே. எகஉ

காயமிறுகுங்கடிய வுபரசம்
மாயமலத்தை மருகியேதள்ளிடும்
ஓயநரம்பிலுறுகின்ற தோஷம்போம்
நேயசமாதிக்குள் நிர்ம்மலங்காட்டுமே. எக௩

காட்டுமேயேலே கடந்துகுருபதம்
காட்டுமேமேலே கதிரொளியாம்வெளி
காட்டுமேமேலே காணுயறுவரை
காட்டுமேமேலே கண்கொளாநித்தமே ௱கச

அறுவரையின் விபரம்

நிர்த்தயறுவரைநேர் தாண்டிக்காட்டிடு
நிர்த்தவொளிக்குள்ளே நேரேயிமுத்திடும்

715

நிர்த்தத்திற்சென்றால் நிலைமீளமாட்டார்கள்
நிர்த்தத்திற்கொங்கணர் நிலைகடந்தாரே ௭௧௫

கடந்தாரேயென்குரு கயிலாசசின்மயத்
தடந்தானேயேறிச் சாதகமாகாமல்
இடந்தாரேகோடி யியல்பானசித்தர்கள்
நடந்தான்பராபர நாதாந்தவீதியே ௭௱௧௬

வீதியிலோட வெருளுவார்சித்தர்கள்
வீதியிலோட வெருளுவார்தேவர்கள்
வீதியிலோட வேசத்தரிஷிகள்
வீதியைப்பார்க்கையில் வேதிப்பார்காணுமே ௭௱௧௭

பரிச்சுன்னத்திற்கட்டு.

காணுமேசெம்பு ரசந்தான் பலமொன்று
நோணுமேகாரீயஞ் சூட்டுபலமொன்றுப்
பூணுமேதங்கம் போடுபலமரை
நாடுமேவொவ்வொன்றாய் நலக்கவுமூதிடே. ௭௱௧௮

ஊதிமணியா யுருக்கியெடுத்திட்டு
ஆதியாந்தாளக மதிலிட்டுமுப்பலம்
ஓதிநறுக்கி வுறு குப்பிக்கேற்றிட்டுச்
சாதியாம்வாலுகை தன்னுக்குள்வைத்திடே. ௭௧௯

வைத்தேதினமூன்று மாட்டியேதீயெரி
கைத்தேகளங்காகுங் கைகண்டபேர்க்கிது
பத்தேநவலோகம் பாய்ச்சிடுநூற்றின்மேல்
அத்தேநல்மாத்து வைம்மூன்றுகாணுமே. ௭௨௰

ருத்திரரசச் சேந்தூரவேதை.

காணுமேருத்திர ரசந்தான்பலமொன்று
நீணும்நிமிளைநேரே பலமொன்று
தோணுமேதங்கஞ் சூட்டுப்பலமொன்று
பூணுமேபலமூன்றும் புகழாயுருக்கிடே. ௭௨௧

உருக்கியேவாங்கி யுடைத்துப்பொடியாக்கி
நெருக்கியேதாளக நேரேசமன்கூட்டி
தருக்கியேகுப்பியிற் றானேற்றிவாலுகை
பருக்கியேமூன்றுநாள் பதைபாமற்றீயிடே. ௭௨௨

723

இட்டேபதம்பார்த்து யிறக்கச்செந்தூரமாம்
மட்டேவைந்நூற்கொன்று மாட்டிடுமொன்பதில்
நட்டேநன்மாத்து நலமாயிருபதாங்
கட்டேநல்வேதை காணிதுபாருமே. எஉரு

பிரமரசச்செந்தூர வேதை.

பாரும்பிரமரசந்தான் பலமொன்று
தாருமேதுத்தத்தின் சத்தோர்பலமொன்று
நேருமேதங்கம் நீட்டும் பலமரை
ஊருமேமூன்று முருக்கியெடுத்திடே. எஉச

எடுத்தேநெருக்கு யிதற்குச்சமன்கெந்தி
மடித்துப்பொடிசெய்து மாட்டிடுகுப்பியில்
கடுத்துநல்வாலுகைதானே தினமூன்று
அடுத்துப்பதம் பாரருணனிறமாமே. எஉரு

ஆமேயிச்செந்தூர மாயிரத்துக்கொன்றிடு
போமேநல்மாத்துப் புகழாகவைன்பது
ஓமேயிதின்வேதை யோடும்வெகுதூரங்
தாமேவுகெந்தகச் சத்தின்பலந்தானே. எஉசு

சந்தான சூதசெந்தூர வேதை.

தானானசந்தான சூதபொருபலம்
வானானபூநாகச் சத்துமொருபலம்
கானான தங்கங்காட்டுப் பலமொன்று
தேனானதெல்லாந் திரளவுருக்கிடே. எஉஎ

திரண்டமணியைத் திரளப்பொடிசெய்து
அரண்டநற்கெந்தக மந்தயிடைக்கூட்டி
புரண்டநற்குப்பியிற் போட்டேற்றிவசலுகை
உரண்டெனமூன்று நாளோட்டெரித்திடே. எஉஅ

எரித்தேபதம்பார்த்து யெடுக்கச்செந்தூரமாம்
அரித்திடுமொன்பதி லாயிரத்துக்கொன்றிடு
பரித்திடுமாத்துப் பயித்தாறறுபது
மரித்திடுந்தேகம் மரியாமற்கேளுமே. எஉகூ

கேளுமேசெந்தூரங் கெடியாகநெல்லிடை
தாளுமேதின்னு தனியரைமண்டலம்

730

வாழுமேதேகமால் ருத்திரன்வரை
நாளுமேபூநாக நலத்தசஞ்சீவியே. எ௱ய

பாலரசச்சேந்தூரம்.

சஞ்சீவிபாலரசத்திற் பலமொன்று
பஞ்சீவிகெந்தகச் சத்தோர்பலங்கூட்டி
வஞ்சீவிதங்கமாட்டுப் பலமொன்று
ஒஞ்சீவியெல்லா முருக்கியெடுத்திடே. எ௱க

எடுத்தேநொறுக்கி யிடைக்கிடைகெந்தகம்
மடுத்தேகலந்து மாட்டிடுகுப்பியில்
தொடுத்தடுப்பேற்றி சுழன்றெரிமூன்றுநாள்
படுத்தேசெந்தூரமாம் பதத்திலிறக்கிடே. எ௱உ

இறக்கியசெந்தூர மிடுமாயிரத்துக்கொன்று
திறக்கியமாத்து சிறப்பாமெழுபது
முறக்கியகாய மூதண்டசித்தியாம்
பிறக்கியுலகத்தோர் பெண்ணுலழிந்தவே. எ௱ங

இல்வாழ்க்கை.

அழியாமற்சித்தி யறையுறேன்சுந்தரா
வழியாகச்செந்தூரம் வளமாகநெல்லிடை
தழியாகக்கொண்டு வாதானரைமண்டலம்
ஒளியாகப்பாலே போனுழிக்கும்வாழ்வாரே. எ௱ச

வாழ்வானவாழ்வு மகத்தானவாழ்வித
தாழ்வானவாழ்வு சமுசாரப்பொய்வாழ்வு
நாள்வானரவியினல் நலமானவயசுபோம்
மாள்வார்பிறந்தோர நேகமாங்கோடியே. எ௱ரு

நிர்ம்மலரசச் சூதச்சேந்தூரம்.

கோடியாம்நிர்மலச் சூதமொருபலம்
யாடியாமப்பிரேகச் சூதமொருபலம்
நாடியாந்தங்கம் நலத்ததோர்பலம்
ஊடியதெல்லா முறைவாகவாட்டிடே. எ௱சு

ஆட்டிநொறுக்கி யந்திடைகெந்தி
மூட்டினேகுப்பியில் முதிரெடுவாலுகை
நாட்டியேமூன்றுநாள் நலமாயெரித்திடு
தீட்டியசெந்தூரம் சிறுகதிர்மேனியே. எ௱எ

மேனியாஞ்செந்தூரம் விரைந்துரெண்டாயிரம்
ஆணியாமொன்பது லோகத்தணைத்திடு
பாணியாமாத்துப் பயித்தெட்டுயெண்பது
வேணியாமப்பிரேக வேகமிதுபாரே. ௭௩௮

பாரேயிச்செந்தூரம் பரிவாகநெல்லிடை
தாரேயிருபது நாளிது தானுண்ணு
நேரேயருணன்போல் நிச்சயஞ்சித்திபாம்
காரேபெண்ணாசை யிற்காணிற்பிசகாதே. ௭௩௯

நீலகண்டமாசூதசெந்தூரம்.

பிசகாமல்நீல கண்டராந்தன்ரசம்
அசகாதொரு பலமப்பாயெடுத்திடு
கசகாதேநாகங் காட்டுபலமொன்று
தசகாததங்கந் தானோர்பலம்போடே. ௭௪௰

போட்டயிலைக்கெல்லாம் பூட்டுமனோசிலை
நீட்டநொருகி நிரைத்திடுகுப்பியில்
மூட்டவேவாலுகை முசியவெடுத்திடு
நாட்டவேமூன்றுநாள் நலமாயெரித்திடே. ௭௪௧

எரித்தேசெந்தூர மியலாய்ப்பதம்பார்த்து
பரித்தேநவலோகம் பாச்சாயிரத்தொன்று
வரித்தேநல்மாத்து வளமாகத்தொண்ணூறு
அரித்தேயிச்செந்தூர மரைநெல்லிடைதான். ௭௪௨

தானேகேள்நீல கண்டரசந்தானும்
வானேபணமிடை வாழ்சாரமோர்பணம்
காணேநல்வீரங் காண்பாய்பணமிடை
பாணேவெறுரசம் பாய்ச்சாய்பலமொன்றே. ௭௪௩

ரசக்குளிகை இதற் குதாரணவிபரம்.

நன்றாயரைத்து நலமாயுருக்கிடு
பண்டானசூதம் பருமணியாம்நிற்கும்
கன்றாய்மணிக்கிடை காட்டிடுசூதமே. ௭௪௪

சூதத்தைக்கூட்டி சுடியரைசிப்பிநீர்
வாதித்துருக்க மணியாய்த்திரண்டிடும்
போதித்துயிப்படி பூட்டறூற்றெருங்கனை
நாதித்துயேறும் நண்பாணகுளிகையே. ௭௪௫

746

குளிகைக்குச்சாரணைக் கூட்டமுறைகேளு
களுகைக்குக்கெஞ்சா விரையேபலம்பத்து
ஒளிகைதலைமயி ருயர்ந்தபலம்பத்து
நளுகயிதுரெண்டும் நருக்கடைபாண்டமே. ௭௪௬

பாண்டமடைத்து பரிந்தூர்தமரிட்டு
ஏண்டியவாய்க்கு யிசையவேசில்லிட்டு
தாண்டியசிலை தானேகவசித்து
போண்டியபூப்புடம் ரோடுதயிலமே. ௭௪௭

தயிலத்தில்சுக்கிலந் தானுகுஞ்சுரோணிதம்
வெயிலித்தவிஞ்சி விளங்கியசாறுடு
பயிலித்துகூட்டிப் பருவமாய்மத்தித்து
மயிலித்தபூரமு மாட்டிநீவைத்திடே. ௭௪௮

வைத்ததயிலம் வளமாய்க்குகைபூசி
அற்றசயசூதமது வைத்துருக்கையில்
தைத்தனப்போட தானேவகைகேளு
கைத்தனவாழை கடுஞ்சித்திரமூலமே. ௭௪௯

மூலத்துடனே முதிர்ந்தசதுரக்கள்ளி
கோலொத்துமூன்றுங் கூட்டியேசுட்டநீர்
ஓலொத்தநீறிற் கரைத்திடுவுப்பைநீ
வாலொத்ததொவ்வோர் வகைக்குப்பலம்நாலே. ௭௫௦

நாலுபலந்தா னுட்டுநவாச்சாரம்
நாலுபலந்தா னுட்டுவெடியுப்பு
நாலுபலந்தா னல்லயெவாச்சாரம்
நாலுபலந்தா னற்சத்திச்சாரமே. ௭௫௧

சாரத்திடைக்குத் தானிடுகல்லுப்பு
சாரத்திடைக்குத் தானிடுசவுட்டுப்பு
சாரத்திடைக்குத் தாக்கிடுயிந்துப்பு
சாரத்திடைவளையல் தன்னுப்புகாணுமே. ௭௫௨

காணுமேயெண்பலங் கட்டியகடல்நுரை
பூணுமேகெந்தகப் போடுமிருபலம்
தோணுமேதாளகஞ் சூட்டுமொருபலம்
ஊணுமேரெண்டு பலம்லிங்கமூட்டிடே. ௭௫௩

754

மூட்டிடுவீரம் முழங்கப்பலம்நாலு
நாட்டிடுவெண்காரம் நலமாய்ப்பலம்நாலு
கூட்டிடுசீனங் குறையாம்பலமூன்று
ஓட்டிடுவளைய லுப்புபலமஞ்சிடே.   எருச

இடுநீயமுரியினுப்பு பலம்ரெண்டு
மடுநீயிதெல்லாம் வளமாயரைத்திட்டு
அடிநீயிதெல்லா மமைத்திவைபீங்கானில்
தடுநீநற்சாரணை சாத்தவுங்கேளுமே.   எருரு

குளிகைக்குயிடை திட்டம்.

கேளுஞ்சகடு குளிகைக்குச்சுந்தரா
நாளும்பதினோர் களஞ்சிசெயசூதந்
தாளுங்கவன குளிகைக்கிடைகேளு
வாழும்பதினேழ் களஞ்சியும்வைத்திடே.   எருசு

வைத்திடுசுரபிக்கு வாகாய்ப்பதினெட்டு
நைத்திடுபோகிக்கு நாலுன்குதான்வைப்பாய்
கைத்திடுஞ்சந்தானி காட்டுபதினேழு
தைத்திடுங்காமுனி தான்பதினென்பதே.   எருள

குளிகையின் பெயர்.

பாதியாமிருபத் தொன்றேநிறுத்திடு
நதியானவஷ்ட மாசித்துக்குளிகைக்கு
கதியாமிருபத் தைந்தேகமலினி
சோதியானமுப்பது சொன்னேன்சொரூபமே.   எருஅ

சொரூபத்தினோடே தொகுத்தேனிடைமுறை
மருபத்ததிகந்தான் வையாதேசுந்தரா
கவுத்திசித்தர்கள் கட்டியசாத்திரம்
உக்குவத்திடையில்லை யோடாதுவீதியே.   எருகூ

வீதியாந்தொந்தத்தை விட்டேகுகைக்குள்ளே
சாதியாய்நின்று சலமாயுருக்கையில்
ஓதியாம்பூநாகச் சத்தைந்திடைகூட்டி
காதியாம்புடமிட்டுக் கண்டுமுகம்பாரே.   எசூய

பாரேசந்தானம் பளிச்சென்றுமின்னையில்
நேரேதிரைபோல நின்றூர்புடம்போடு
தாரேதிரையற்று தனுக்கென்றுமன்னினுற்
சேரேமுகந்தான் றெளிவாகத்தோன்றுமே.   எசூக

762

தோன்றும்பதத்திற் சூழக்குகைவாங்கி
என்றுமிச்சூத முட்டேமறுகுவை
ஊன்றிடவப்பிரே கச்சத்தந்திடைகூட்டி
கான்றியேயாடையிற் கனபுடம்போடே. எசுஉ

போட்டேமுகம்பார்த்துப் பொலிவாகத்தீர்ந்தபின்
பாட்டேவுபரசப் பாஷணச்சத்தையும்
நீட்டேமுறைமுறை நோகவொவ்வொன்றாய்
ஊட்டேவுபரச மொருநூற்றிருபதே. எசுங

குளிகைக்குச் சாரணைதிட்டம்.

இருபதினோடே யியலருபத்தனல்
கருவதுமாறி காட்டியசாரணைத்
தருவதிரத்தினந் தான்தங்கச்செம்பும்
உறுபதுளொன்பது லோகமதுகூட்டே. எசுச

கூட்டியதெல்லாங் கொடுத்துவிடுவிக்கில்
நீட்டியசேறுபோல் நின்றார்புடம்போட்டு
ஊட்டியசேறு முறுதித்திரையாகும்
நீட்டித்திரையில் நேராகயிட்டியே. எசுரு

இட்டேபொடியெல்லா மிருத்திடுசாரத்தை
தொட்டவுபரசஞ் சூழரசமுட்கொள்ளு
நட்டேரசந்தான் நலத்தயிடைநிர்க்கும்
பட்டேகுளிகைக்கும் பாங்காகப்பண்ணுமே. எசுசு

பண்ணுந்துறைதோறும் பாய்ச்சுக்குகைவேறு
தண்ணுங்குகைதோறுத் தயிலமும்பூசிவா
எண்ணும்மிருநூற்று மூன்றையுமேற்றினல்
கண்ணுமோர்சாரணை காட்டியசகடிதே. எசுஎ

சகட்டையேமூத்திரஞ் சாரணைதீர்த்திட
தகட்டையேகெவினத்திற் றானேயெடுத்திடு
முகட்டையேமூவைந்து மூட்டிவிடுவித்தார்
பகட்டையேகாமிநீர் பாங்காகப்பண்ணுமே. எசுஅ

பண்ணிடுமட்டமா சித்திக்குமுப்பது
தண்ணிடுகமலிக்கித் தானங்கேயைம்பது
தொண்ணிடுதொண்ணூறு சொரூபமணிக்கேதான்
கண்ணிடுசாரணை காட்டமுற்றையிதே. எசுகூ

குகையின் விபரம்.

முறையாய்க்குகைக்குள்ளே மோசங்கள்வாராமல்
நிறையானமண்தான் நேரேபணிரெண்டு
கறையாமுமிதான் கறுக்காறுகூட்டியே
காறையாக்கமுதை மலமதுரெண்டெடே. எஎ௰

எடுத்திடுவெண்க லிசைந்தப்பொடிரெண்டு.
நடுத்திடுசீலை நலமாய்ப்பலம்ரெண்டு
இடித்திடுவெல்லா மிசையப்பதங்கொண்டு
கடுத்திடுமூசையிற் கைமுறைசெய்திடே. எஎக

செய்திட்டமூசையிற் செய்திடுசாரணை
கைதிட்டமாகக் காட்டினேன்சுந்தரா
பைதிட்டமூசையிற் பாசினுர்சாரணை
மெய்திட்டமாகும் விழுந்துகிழியாதே. எஎஉ

விருத்தம்.

பாரப்பாகுளிகைக்கு யிடையேமீறில்
பாங்காச்சாரணையைத் தீர்த்தானுகில்
நேரப்பாவந்தபத்தில் மயக்கித்தள்ளும்
நிமிஷத்திலங்கிருக்க நிலைக்கொட்டாது
தாரப்பாயெடுக்கையிலே தலைகீழாகுஞ்
சகித்தக்காலகிரியோ,கொண்டுமீறும்
சேரப்பாகுளிகைக்கு நிறைமேயாசொல்லார்
செகத்தோர்க்குக்குளிகைசெய்யத் திறஞ்சொன்னேனே.()

திராவகம்-வேறு.

பாங்காய்திராவகம் பரிவாகச்சொல்லுகிறேன்
தாங்காவெடியுப்புத் தானேபலம்பத்து
ஓங்காய்ப்படிக்கி யுயர்ந்தபலமெட்டு
ஆங்காதவன்ன பேதிபலம்ரெண்டே. எஎச

பலமொன்றுகல்லுப்புப் பார்பலமிந்துப்பு
வலமொன்றுநல்ல தான்வளைகிலுப்பு
தலமொன்றேருபலஞ் சவுட்டுப்புதான்ரெண்டு
குலமொன்றிருபலங் கூட்டுபூநீறுமே. எஎரு

கூட்டுநவாச்சாரங் குறையாதொருபலம்
நீட்டுநல்வாழை யினுப்போவரைப்பலம்

ஆட்டியுருவி யினுப்பதரைப்பலம்
மூட்டுவெள்ளுப்பு முயன்றரைதானுமே. ௭௭௬

தானுமிதுவெல்லாஞ் சார்ப்பொடியாக்கி
கோனுமிதுவெல்லாங் கொட்டிகலயத்தில்
வானுமிதின்மேலே வைத்தேதமர்ச்சில்லு
தேனுமிதின்மேலே சேர்த்துக்குகைவையே. ௭௭௭

வைத்தேகுகைதுரில் வாகாய்ப்பணம்போலே
நைத்தேபொதித்து நற்குப்பிச்சாய்ப்பாக
கைத்தேவிலப்புரங் கடுங்குப்பிபோத்திட்டு
ஒத்தேதமரெல்லா முறவாகச்சேர்த்திடே. ௭௭௮

ஏழுவுபரசச்சரக்குச்சூதம்.

சேர்த்திட்டுச்சீலைச் சிறக்கவேமண்செய்து
காத்திட்டுப்போற்றிக் கடுகவேதீயிட்டு
மாத்திட்டகுப்பிவாய் வைத்திடுபீங்கானைப்
போத்திட்டதீநீர் பொலிவாய்விழுகுமே. ௭௭௯

விழுகுந்திராவகம் விந்தைகேள்சுந்தரா
எழுகின்றவப்பிரேகச் சத்துவொருபலம்
தழுகின்றகல்வத்தில் தாக்கிநொருக்கிட்டு
முழுகுந்திராவக மூட்டியிதில்வாரே. ௭௮௰

வார்த்துயிருசாமம் வைத்தபின்நீகேளு
போர்த்துநல்வீரம் போட்டதிலோர்பலம்
கோர்த்துக்கிளறி குமட்டிவைமூன்றுநாள்
ஏற்றியரைக்க வெழுந்துரசமாமே. ௭௮௧

ரசமாகக்காந்தத்தின் சத்தோர்பலமொன்று
அசமாய்நொருக்கி யதில்வார்திராவகம்
நிசமானவீரமும் நீட்டதிலோர்பலம்
அசமாகமூன்று நாளரைத்திடுசூதமே. ௭௮௨

சூதமாமிப்படி தொகுப்பாயெடுத்திட
வேதமாமுபரசம் விளம்புறேன்சுந்தரா
வாதமாம்பூநாகச் சத்தையுஞ்சூதஞ்செய்
நேதமாய்நிமிளையின் சத்தையுஞ்செய்திடே. ௭௮௩

செய்திடுங்கற்பூர சிலாசத்தைச்சத்தாக்கி
செய்திடுமண்டோடு சிறக்கவுஞ்சத்தாக்கி

செய்திடுநண்டோடு தீர்க்கவுஞ்கத்தாக்கி
செய்திடுவேழு வுபாசச்சூதமே. ௭௮௪

உபரசலோகங்களில் சூதமாக.

உபாசம்போலே வூட்டக்கேளேகத்தில்
தபாசநாகந் தானேபலமொன்று
கவாசத்திராவகங் காட்டியொருசாமஞ்
சுபாசவீரம் சூட்டுப்பலமொன்றே. ௭௮௫

ஒன்றுப்புடம்போட்டுறுகவைமூன்றுநாள்
நன்றுயழைக்க நற்சூதமாயிடும்
கன்றுகவிப்படு காரீயமாட்டிடுந்
தன்னுகச்சூதமாம் தான்பாருமீயமே. ௭௮௬

ஈயத்தைப்போலே யிரும்பில்நீர்பொட்டிட
பாயொத்தவீரமும் பாயச்சியதிரும்
காயொத்துமூன்று நாள்கடந்துயரைத்திட
தாயொத்தசூதமாந் தனயங்கண்டிடே. ௭௮௭

கண்டிடுமிப்படி கடுந்தங்கத்தேபூட்டி
ஒண்டிடுமஞ்சா நாளுறுகவரைத்திடு
பண்டிடுந்தங்கம் பாலரசமாகும்
மண்டிடவிப்படி வாழ்செம்பிலேற்றிடே. ௭௮௮

ஏற்றியேசெம்பி லிட்டேதிராவகம்
போற்றியவீரமும் பூட்டிவைமூன்றுநாள்
மாற்றியோலாங்கள் மத்திக்கச்சூதமாஞ்
சாற்றியேவாங்குநீ தனிப்போக்குக்கேளுமே. ௭௮௯

ஏழுவகையுபாசமும்
பஞ்சலோகாசமும் சேர்ந்தசெந்தூரம்

கேளுமுபாசங் கெடியானசூதமும்
ஆளுமேயஞ்சுவகை லோகசூதமும்
தாளும்பனிரெண்டு தான்னிடைகேளு
வாழும்வகைக்கோர் பலமதுவாங்கிடே. ௭௯௰

வாங்கிட்டுவெல்லா மறுகலவத்திட்டு
ஒங்கியசிப்பநீருற வாரிதுக்குள்ளே
தேங்கியசெயசாரம் சேர்த்துவராகன்றுன்
காங்கியிருகாசு காட்டியவீரமே. ௭௯௧

வீரத்தினோடே விட்டரைசிப்பிநீர்
காரத்தினோடே கடுகவுருக்கிடு
சாரத்தின்சூதந் தளும்பியுருக்கிடும்
நேரத்தின்சூத நீகேள்செந்தூரமே. ௭௬௨

செந்தூரஞ்செய்யத் திறங்கேளுசுந்தரா
கந்தூருஞ்சூத மிடைக்கூட்டிக்கெந்தகம்
தந்தூரநொறுக்கித் தனிக்குப்பிக்கேற்றிட்டு
வந்தூருவாலுகை வளமா யெடுத்திடே. ௭௬௩

ஷை - பன்னிரண்டு சத்துச்செந்தூரம்.

எடுத்திட்டெரிப்பா யியல்பாகமூன்றுநாள்
அடுத்திட்டசெந்தூர மருணணிறமாகும்
படுத்திட்டவொன்பதிற் பாய்ச்சாயிரத்தொன்று
நடுத்திட்டமாத்து நற்பதினாறுமே. ௭௬௪

பதினாறுபோலே பாலனு மூன்றேகம்
கெதிநாறவேகுன்றி யிடைகொள்ளமண்டலம்
மதிநாறுமீசன் மாமாயிகதிச்சொன்ன
விதிநாறுசாவு வெறும்பொய்யுமானதாம். ௭௬௫

வேறு

கடுக்காய்.

தானுமரிதகி சார்ந்தவிரித்தாயாள்
னுவாவனதுற்கி மலத்தையறுப்பவள்
கோனும்வரவிகுள் கொடு நோய்க்குப்பண்டிதி
கானுமற்கற்பககடுக காயின்பேரே. ௭௬௬

மிளகு

மாதமறுக்கிமா நித்திரைபோக்கி
போதமலத்தை போக்கியசிற்பரி
காதம்பரிசிக்கக் கடுங்காரகோபத்தி
வேதமிளகின் விளங்கியநாமமே ௭௬௭

சதுரக்கள்ளி

ஆகியராக்ஷசி யடங்காதசத்திநான்
போகியப்பாலிபுகழ் முள்ளிசூலினு
தாகியமுறுக்கி சதுர்முகவேதியாய்
வாகியகாட்டில் வளர்சதுரக்கள்ளியே ௭௬௮

கைத்தாழை.

குமரிகுறத்தி கொடுங்கடகநாறிதான்
அமரியசோதி யலகைக்குராக்ஷசி
வமரிமலத்தை மாசறத்தள்ளிச்சி
கமரியநாமங்கைத் தாழைப்பேருமே. ௯௯

சிவகரந்தை

போக்குமுலேச்சி புகழாங்குணத்திதான்
வாக்கிச்சிவன்முடி வாகித்தகன்னியாள்
தாக்கப்பரிமனி தாகமடக்கித்தான்
நாக்கபநாறுங்காந்தையினுமமே. ௱

பொற்றலை

பொற்றலைவல்லிபுகழ் செங்கொடிச்சிதான்
நற்றலைப்பொன்னி நலங்கியபொற்பூவி
சிற்றலைதேவி சிவந்தகரிசாலை
கற்றலைபொற்றலை கையாந்தகரையே ௱௧

சீந்தில்

அமுர்தவல்லி யழகுபொற்சீந்திதான்
குமுர்தசஞ்சீவி கொடியவிஷகாரி
திமிரக்கடவி சிவசஞ்சீவிதான்
அமுர்தத்தலைச்சீக் தியதனுடநாமமே. ௱௨

வேம்பு.

சாகாதமூலி தான்விஷபக்ஷணி
வாகானநிம்பமது ரகசப்பிதான்
ஆகாப்பழங்காய்க ளாக்கியசத்தி
தாகானவேம்பின் றன்னுடநாமமே. ௱௩

குன்றி.

கறுத்தமுதச்சி கரியசெங்குன்றிதான்
ஒறுத்தவெளுப்பி வுயர்மலைக்குருவி
நிறுத்தகுணக்காரி நேரானநங்கிச்சி
மறுத்தகொடிச்சி மலைக்கருங்குன்றியே. ௱௪

கையாந்தகரை.

வதனமாம்பூண்டு மாகரிசாலைதான்
சுதனத்திரிபுரம் சிட்டோன்புதல்வன்

விதனத்திருமால் விளக்கியகண்ணனும்
கதனத்தெழுபுகை கையாந்தகரையே. ௲௫

குப்பைமேனி.

திரிபுரமெரித்தோன் செகமுறுமேனி
கரியரியுரித்தோன் காலாக்கினியோன்
மரிமுறைமசக்கி மாற்சாலமோகினி
கொரியிவைபேர்தான் குப்பைமேனியே. ௲௬

செருப்படை.

சிற்றிலைப்பாதந் தேகச்சோதிதான்
அத்தன்புள்ளடி யதிசாம்பல்வருணி
முற்றிலைச்சிறிய செருப்படைப்பேரே
உற்றிலைச்சிறிய செருப்படைப்பேரே. ௲௭

சிவனர் வேம்பு.

பாலலைவென்றோன் கபாலபாணியோன்
கோலேனீசன் கோனேதிரிசூலி
கோலன்வேம்பு கொடியமாயமைத்துனன்
பாலன்சிவனர் வேம்பின்பெயரே. ௲௮

வாலுழுவை.

சேங்கோலவித்துச் சிறத்தசரஸ்வதி
தங்கோலக்கன்னி சாதகச்சத்தி
பங்கோலவாணி பாட்டுக்குடையாள்
மங்கோலமாகும் வாலுழுவைப்பேரே. ௲௯

தூதுவேளை.

முள்ளுக்கொடிச்சி மூதண்டக்கன்னி
நள்ளுவனத்தி நயனசஞ்சீவி
தள்ளுசங்கோளந் தான்பகநாசினி
ஒள்ளியதூது வேளையின்பேரே. ௲௰

தக்கோலம்.

ஆகுநற்கோவி யடவுயர்ஜீவி
வாகுநற்கேசி மாமோக்கச்சத்தி
பேயகுநல்வாகி புரியஷ்டசித்தினி
தாகுநல்நாமந் தக்கோலப்பேரே. ௲௧௧

சாதிக்காய்.

கப்பற்றுறைச்சி கடுங்காயலாகிரி
செப்பலுறச்சி சிறுகாய்க்குசத்தி
வெப்பநல்வாருதி போரர்குடிச்சி
சப்பநல்நாமஞ் சாதிக்காய்ப்பேரே. ௮௧௨

கோடிவேலி.

கொடியகடுந்தீக் கூறியவன்னி
அடியதணலத்தி யாங்காரசத்திதான்
செடிதயணலால் சீர்வன்னியானவள்
கடியவினமங் கருக்கொடிவேலியே ௮௧௩

சரக்கோன்றை.

சடைமுடிகொத்து சம்புக்குப்பொற்சபம்
நடமிடுமீசன் நல்லபொற்கொன்றை
தடமுடிநிர்த்தன் சாதகவன்னி
கொடைமுடிசரமாங் கொன்றையின்பேரே ௮௧௪

நிலப்பனை.

முத்திபெழுந்திடு முன்கோலவேராம்
பத்தியபூமிப் பனையெனச்சொல்லுவார்
அத்தியகானத் தமர்ந்த குறத்தி
நித்தியநாமம் நிலப்பனைப்பேரே. ௮௧௫

அழிஞ்சில்.

ஆகுந்தெரிசினை யாதியங்கோலம்
போகுநல்வித்துண்ணி புகழானஜீவினி
வாகுந்தெரிசினி மாயிந்திரசாலி
தாகுமழிஞ்சி தன்னிடபெயரே. ௮௧௬

புளியாரை.

ஆரிசடைச்சி யாம்பிலாவாரை
தாரியகற்பத்தி தாகமடக்கி
வாரிபுளிச்சிமா தோஷம்நீக்கிதான்
போரியாய்நின்ற புளியாரைப்பேரே. ௮௧௭

எருக்கு.

ஆகியமற்க மண்டத் திற்பானுவாம்
தாகியதீப்பால் சாதகச்சூரியன்

818

வாகியசெந்தீமாரவிவிந்துதான்
தாகியவெருகின் றன்பலப்பேரே. அகஅ

மருது.

தணம்புருகுஞ்சந்தான் காட்டுச்சாரைதான்
அணபியமஞ்சி யாசைக்குறியவன்
தணம்பியவீரியஞ் சார்மலைக்குஞ்சரம்
இணம்பியமருக்குக் கிசைத்திட்டநாமமே. அககூ

கோவை.

மண்ணுமுழுங்கி மாதம்புரத்தியாம்
கொண்ணயனுமத்தி கோட்டுறுகன்னியாம்
இண்ணயக்கோவைக் கொடுத்திடுநாமமே. அஉய

சிறுகீரை.

குப்பைக்குடையாள் கூற்றுவன்றங்கச்சி
அப்பைச்சுருக்கி யாரோக்கியக்காரி
நப்பைக்குடைச்சி நற்காய்சித்திச்சி
செப்பியநாமஞ் சிறுகீரைப்பேரே அஉக

பொன்னுங்கண்ணி.

கண்ணுக்கிணியாள் கடுஞ்சீதளத்தி
நண்ணும்பகலே நக்ஷத்திரந்தோன்றி
விண்ணுக்குமூர்த்தி வெண்காயசித்திச்சி
பொன்னுற்றபொன்னுங் கண்ணியினமமே அஉஉ

ஆடுத்தின்னுபாளை

ஆடுண்ணுவால மடங்காக்கசப்பி
பாடுண்ணுச்சஞ்சீவி பாதளமூலி
நாடுண்ணுக்கோபம் நல்லெமன்கற்பம்
பாடுண்ணுமாடுண்ணுப் பாளையின்பேரே. அஉங

வெற்றிலை.

தாம்பூலமாதற்சாதடலட்சுமி
நாம்பூலகன்னி நலநாகவல்லிதான்
ஓம்பூலகன்னி யருபல்லயிழகியாம்
வேம்பூலதேவி வெற்றிலைநாமமே அஉச

கெருடக்கிழங்கு.

கொல்லன்கோவை கொடியகற்கோவையாம்
தல்லனநின்றது சாகாக்கிழங்குதான்

ஒல்லனல்லார முதிரக்குடோரியாம்
கொல்லன்கெருடக் கிழங்கின்பேரே அஉரு

சாப்பத்திரி.

பத்திரிபொற்பூ பருகியலாகிரி
அத்திரிகிள்ளே யலர்ந்தலகிரியாம்
கத்திரிவாணிகடுங் காமமச்செல்விதாள்
சத்திரச்சாதியாம் சாபத்திரிப்பெயரே. அஉசு

கிராம்பு.

காருக்குமுன்பு கடலடிபுஷ்பம்
வாருற்றசின்னிமருவும் பரங்கிச்சி
நேருற்றவன்னி நேர்தாகச்சாந்தியாம்
தாருற்றகிரம்புக்குச் சாற்றியநாமமே. அஉஎ

திப்பிலிமூலம்.

நறுக்குமூலம் நற்கண்டுமூலமாம்
சிறுக்குந்தோம்புர மெனுமூலந்தான்
மருக்குங்குடோரி மாருதநாசினி
பெருக்குந்திம்பிலி மூலத்தின்பெயரே. அஉஅ

விழுதி.

காட்டுவகத்திகடுவு ஷநாசினி
மூட்டுநற்சித்தி முதுநரைநாசினி
ஊட்டுநற்சிற்பரி வூழிக்குறுதியாம்
நீட்டியவிழுதிக்கு நிலேத்திடுநாமமே. அஉகூ

இரத்தமண்டலி

வாருனசந்திரி மருவுசாணகிதாஸ்
தாருங்குளத்திற் சார்ந்ததுளசியாம்
வீருமுதிரம் விளக்கியசத்தி
பேருனரெத்த மண்டலிப்பெயரே. அ௩ம

தாட்டாமணக்கு

காட்டுக்கொட்டை கடுகியதுண்டிதான்
பாட்டுக்குப்பஞ்ச முகமானருத்திரி
ஏட்டுக்கனலி யெலியாலு மென்பார்கள்
நாட்டியகாட்டா மணக்கின்நாமமே. அ௩க

மருதாளி.

ஐவணமாலி யழகுயர்வண்ணத்தி
கைவணக்கன்னி கடியசிறப்பியர்ம்
மெய்வணச்சேம்பி மெத்தவிஷத்திதான்
மைவண்ணமாகும் மருதாளிப்பெயரே. அ௲உ

கெஞ்சா.

கோரக்கர்மூலி கொடியோகக்கற்பத்தி
தாரெத்தசித்தர் தாணுண்ணுமூலி
வாரொத்தயோகம் வளர்த்திடும்ஞானிதான்
நேரொத்தகெஞ்சா நிலைப்பெரும்பேரே. அ௲௩

நிலவாகை.

பாதாளவாகைப் படரும்பரைச்சி
வேதாளகன்னி வேணமலம்போக்கி
பூதாளமங்கைப் புழுவின்குடோரி
நீதாளமான நிலாவகைப்பேரே. அ௲௪

கட்டுக்கோடி.

அப்பைத்திரட்டி யானந்தவல்லி
தப்பைக்கொடிச்சி சலபாஷணியாம்
உப்பைத்திரிச்சி யுதிரநிறத்தி
சப்பைசேர்கட்டுக் டுகொடியினுமமே. அ௲௫

பிரண்டை.

வச்சிரவல்லி மரவுறுசத்தி
கச்சிரநான்முகக் கடியகொடிச்சிதான்
உச்சிரதந்தி யுருகுங்கனலியாம்
நச்சிரப்பிரண்டை காட்டியநாமமே அ௲௬

வல்லாரை.

குளத்துக்குறத்தி கொடிபகசப்பி
அளத்துவயலுக்கு ளழகானவல்லிச்சி
தளத்துச்சிறுக்கி சாதகச்சித்தி
வளத்துப்பெரிய வல்லாரைப்பெயரே. அ௲௭

தாம்பிரச்சிகை.

சந்துகற்பரங்கி தாம்பிரக்கட்டி
கொந்துபருவதக் குவட்டிடைக்குஞ்சுவாம்

838

பந்துற்றகம்பிபரு மனைச்செம்புதான்
தந்துற்றதாம்புரந் தன்சிகைப்பெயரே. அ௯அ

மயூரச்சிகை

பருவதக்குச்சு பாரமபிற்குச்சுவாம்
அருவதரோகை யறுமுகன்விசிறி
தருவதச்சுருட்டிச் சாகாதமூலி
மருவதமயூரச் சிகையுடனுமமே. அ௯சு

கண்டங்கத்திரி.

கண்டங்காரி கடுமுள்கொடிச்சி
தண்டிலைநாமத்தி தான்கபநாசினி
பண்டிலைக்கத்தரி பழம்பொன்னிறத்தியாம்
ஒன்டியகண்டங் கத்திரிப்பெயரே. அ௪௰

கானற்றனுவு.

கானமவாங்கடுங் கொட்டைமாவாம்
லானகர்சித்தர் மருவியகற்பமாம்
ஊனகசாந்தி யொளிவிடுசெம்மரம்
தானகக்கானற் றனுவின்பெயரே அ௪க

பிரமி.

பேயானபிரமி பேருற்றசாம்பிராணி
வாரானசேற்றில் வளர்த்தமடச்சிதான்
தாராமுதிரந் தான்மலநாசினி
பேராகநின்ற பிரமியின்பெயரே. அ௪உ

தில்லை.

ஆடியகூத்த னம்பலவிருக்ஷம்
நாடியநிர்ந்தன் நமனைவெருட்டியாம்
மூடியவன்னி முதுகனற்பாலி
தேடியதில்லை மரத்தின்பெயரே அ௪௩

கப்பட்டி.

சுரபிகருமி தோதகக்கன்னி
மரபிகனலி வாரணக்கரிச்சி
திரபிசிறுபாலி சென்மராக்காசி
காபியாம்கல் லகப்பட்டிநாமமே. அ௪௪

மாவிலங்கு.

மாந்தமறுக்கி மகத்தானவன்னிதான்
காந்தக்கடுவன் கடுமாவிலங்கு
எந்தயகொத்து மெழும்பியதீச்சுடரீ
நாந்தயமா விலங்கின்நாமமே. அசரு

தேற்றுமரம்.

தண்ணீறுஞ்சேறுந் தான்வேறுசெய்தவள்
பண்ணிபவுடல்நீர் பருகமுறித்தவள்
புண்ணியசுத்தி பொருங்கபநாசனி
தென்னியதேற்று மாத்தின்பெயரே. அசசு

புளியான் சிறுகீரை.

புளியாஞ்சிறுகிரை பெருங்கொடிக்கீரையாம்
வளிசிறுசெங்கொட்டை மாசெம்புமூலிகை
களிசிறுராயங் கழியாதநாயகி
ஒளிசிறுபுளியாங் கீரையின்பெயரே. அசஎ

நீராளி.

முதளைப்பூடு முயன்றசெங்கொடிச்சி
அதளைச்செங்கொட்டை யழகுபூச்சூடிதான்
நிதளைச்குளந்தி நீறிற்குடிச்சிபமாம்
அதளையாம் நீராளியின்பேரே. அசஅ

செவ்வலரி.

சிவந்தவல்லி செப்புக்குடத்தி
தவந்தலிங்கங்கள் தான்பெற்றகன்னியாம்
நவந்தவிஷத்தி நல்லநிறப்பாலி
தவந்தசெவ்வலரி தன்னிடநாமமே. அசகூ

சிவந்த நாயுருவி.

சிவந்தநாயுருவிறு சேர்மணிக்கயறுதான்
அவந்தபரமார்க்க மடுசிலைக்காரமாங்
கவந்தருந்தணற் காரத்திற்காரங்காண்
தவந்தேசிவந்த தன்னுயுருவியே. அருய

சிவந்த சதுரக்கள்ளி.

திண்டிராவிச்சிச் சிவந்தசதுர்முகி
தண்டியபாலித னிக்கானல்வாகினி

ஒண்டியவிரத்த முறிகின்றபாலிதான்
தண்டியவிரத்தச் சதுரக்கள்ளியே. அ௫உ

சத்திச் சாரணை.

கன்னிகுமரி கடுந்தேரிலைச்சிதான்
மன்னியகுளக்கரை வசித்தசாத்திதன்
உன்னியகோதை யுயிருக்குநாயகி
தன்னியசத்திச் சாரணைப்பெயரே. அ௫௩

வில்வம்.

கூவிளம்பத்திரி கொடுமூவிலைச்சி
காவலைமுள்ளாய்க் கலந்தவிருகூத்தி
தவலையீசர்க்குச் சாத்தியபத்திரம்
நாவலைவில்வத்தை நாட்டியநாமமே. அ௫ச

பேய்த் தும்பை.

நாட்டுச்சணச்சி நற்கானற்பேய்ச்சிதான்
நீட்டுச்செடிச்சி நேரேகறுப்பியாம்
மூட்டுச்சடைச்சி முதிர்ந்தக்கப்பியே
பேட்டுக்கிசைந்த பேய்த்தும்பைப்பேரே. அ௫ச

பேய்க் கொள்ளு.

சுனையுறுங்கானந் தொல்புகழ்சத்தி
கனையுறுகொத்துக் கசப்புறுகொள்ளுமாம்
மனையுறுமூக்கு மத்தக்காணந்தான்
பிணையுறுநாமங்கள் பேய்க்கொள்ளுக்காமே. அ௫௫

பேய்க்கடலை.

ஓங்குஞ்சுருத்தி யொழுகுநீர்க்கடலைதான்
வாங்கும்வெறிச்சி மருவியநேசத்தி
பாங்குஞ்சுணச்சி பரிபொன்மேனிச்சி
ஏங்குநல்பேயங் கடலையினமமே. அ௫௬

பேய்த்துவரை.

கசந்ததுவரை கடியசுனையோனும்
அசந்துவழுதோ ணுகாவேறியோன்
பசந்தபிசினி பருஞ்சுருநாறியாம்
நசந்திடும்பேயாந் துவரையினமமே. அ௫எ

858

அழுகண்ணி.

அழுகுங்குமரி யாகாவெறிச்சிதான்
ஒழுகுநற்கன்னி யுருண்டமடலியாம்
தழுகுநன்னுகம் போற்றன்படமூக்கிதான்
நழுகுநல்லழுகண்ணி நாமமுமாமே. அ௱அ

தொழுகண்ணி.

குண்ணிச்செடிச்சி கூடுங்கொடிச்சியாம்
நண்ணிப்பிறந்து நலங்கும்நற்பூஷணி
ஒண்ணிச்சுருளி யோங்கியகாமிதான்
எண்ணித்தொழுகண்ணிப் பேரெனச்சொல்லுமே. அ௱௯

முடவாட்டுக்கால்.

மலைக்கால்சிலைக்கால் மருவியகற்கால்
நிலைக்காற்றலைக்கால் நேராய்முடங்குங்கால்
உலைக்காதவுஞ்ச வுறுசிலைமேஷக்கால்
முலைக்கால்மலைபன் முடவாட்டின்காலே. அ௯௰

நாகசிங்கி.

பொடியகொடிச்சி பொருமுஞ்சுணச்சியாம்
நெடியநன்மூக்கில் நேர்ந்திட்டதும்பிதான்
அடையகுளத்தி றமர்ந்தமரத்தியாம்
நடியதோர்நாகமாஞ் சிங்கியின்பெயரே. அ௯௧

இருப்பவல்.

மன்னியகாட்டு மருக்கொழுந்தென்பார்
தன்னியபுத்தர்கைச் சம்மட்டியென்றும்பேர்
பன்னியமேனிப் பருங்காணற்கன்னியாம்
உன்னியவிருப்பவலுக் கோங்கும்நாமமே. அ௯௨

தேள்கொடுக்கில்லை.

மேவுமணச்சி விருச்சிகப்பூண்டுதான்
தாவுங்கொடுக்கிலைச் சாறுசிவப்பி
காவுங்கடுத்தி கடியவிஷத்தியாம்
தேவுந்தேள்கொடுக்கிலைச் செப்பியபேரே அ௯௩

கருவூமத்தை.

கறுத்தநிறத்தி கடுக்கச்சடைச்சி
நிறுத்தகறுப்பி நீலத்தூரிதான்

864

முறுத்தலாகிரி மூதண்டச்சித்திச்சி
நறுத்தகவூமத்தை நாட்டியநாமமே. அ௬௪

(பொன்னூமத்தை.)

பொங்குசடைச்சிப் பொன்னிறபுஷ்பி
எங்குமேமத்தியே மத்ததூரிதான்
தங்கியசிங்கமுகம்போலத்தான்காய்ச்சி
நங்கியபொன்னூ மத்தையினமமே. அ௬௫

சோதி விருட்சம்.

காட்டச்சோதி கடுந்தீபச்சோதிதான்
நீட்டச்சோதி நேரண்டசோதியாங்
கோட்டச்சோதி கொறிமலைச்சோதியாம்
ஆட்டச்சோதி யாமம்மரப்பேருமே. அ௬௬

நச்சுபுல்லு.

சாந்தசெந்தெற்பை தனிமூலஞ்சிவப்பிதான்
சேந்தமலைச்சிதிரள் சோதிபென்னும்பேர்
ஆய்ந்தவிருட்சத்தி யாவுண்ணக்கொல்லிதான்
நாந்தெனநச்சாம் புல்லிநாமமே. அ௬௭

சுணங்க விருட்சம்.

சொல்லுநாய்க்குட்டி சூழக்குலைச்சிதான்
வெல்லுஞ்சுவான மேதினிவிருட்சம்
நல்லுங்குலச்சி நற்பால்முலைச்சிதான்
தல்லுஞ்சுணங்கமாந் தன்விருட்சப்பேரே. அ௬அ

எருமை விருட்சம்.

மேதினிவிருட்சம் மெய்க்கடாவிருட்சம்
சாதகப்பாலி தாயாமெருமைதான்
ஓதகக்காலி யுறுகக்கனைச்சாளாம்
தேகவெருமைக் கண்மரப்பேருமே. அ௬௯

செந்தாபோவை.

சிவந்தநிறத்தி சேலொத்தபாலிதான்
தவந்தகுழச்சி சாதிலிங்கத்தியாம்
உவந்தகொடிச்சி வொருகோடிசித்தியாம்
பவந்தசெந்தாடு பாவையிநாமமே. அ௭௰

உரோம விருக்ஷம்.

ரோமச்சுருளி நோக்குடற்சல்லியாம்
தாமந்தியிற் றூன்சுறுநாறியாங்
காமங்குண்டலி கடுமயிர்த்தொங்கலி
நாமமாமுரோம விருக்ஷத்துக்காகுமே. ௮௭௧

சாயா விருக்ஷம்.

போகாநிழலியாம் புண்ணியவந்தரி
தாகாரவியாள் சாயாதேவிதான்
வாகாம்நிலைத்தவள் வளமுறுமொழியாள்
சாகாவிதியாள் சாயாவிருக்ஷமே ௮௭௨

முண்டணி விருக்ஷம்.

முண்டணிகண்டி முழுமரக்காடுதான்
கண்டணிமொட்டச்சி கடுங்கோபக்கன்னியாம்
பண்டிணிபாலி பரிபநல்வேதிச்சி
விண்டிணிமுண்டமாம் விருக்ஷத்தின்பேரே. ௮௭௩

கருநெல்லி.

ஆகியபிறங்கி யருநெல்லிநீலிதான்
வாகியமேகம்போல் வளர்ந்தநிறத்தியாம்
தாகியகாயம் க்ஷணத்திலேபேதிச்சி
நாகியகருநெல்லி நாமமுமாமே. ௮௭௪

கற்றாமரை.

கல்லரவிந்தங் கரியமால்நேத்திரம்
நில்லாதகற்பூ நீரிலாத்தாமரை
தல்லாசகஸ்திரந் தனிக்கோட்டுபுஷ்பமாம்
நல்லாகக்கல்லி னற்றாமரையிதே. ௮௭௫

கல்லாரை.

கல்முகப்பிரமங் கடியநால்வேதியன்
செல்முகக்காந்தை சிறுமலைக்குறுத்திதான்
வெல்முகக்கிழவி வேண்டுகோட்டத்திதான்
நல்முகக்கல்லி னல்லாரைப்பேரே. ௮௭௬

கற்சேம்பு.

குவடுறுசெம்பு கொடுமலைப்பறைச்சிதான்
தவடுறுசாமை தாதகப்பரங்கியாம்

நிவடுறுகனகை நெடியமாதங்கி
நவடுறுகல்லின் நலமானபேரே. அஎஎ

கல்லாணி

கல்விஷக்காந்தைக் கடுஞ்செம்புகருதீதான்
சொல்விவிஷக்குவுடு சொற்பெருஞ்சுந்தரி
மல்விஷக்காளி மாலிங்கவாசினி
அல்விஷக்கல்லுக் கருளியநாமமே. அஎஅ

மூவிலைக் குருந்தம்.

கருநிலக்குருந்து கடுவிஷக்கிழங்குதான்
வருநிலசூலம் வச்சிரக்குருந்தாம்
தருநிலக்கிழவி தனிச்சூதவையிரியாம்
குருநிலமூவிலைக் குருந்திநாமமே. அஎகூ

கருநோச்சி.

கோபிகறுப்பி கொடியநற்குண்ணி
தாகசடைச்சி சட்டையைநீக்கி
ஓபிகறுப்பி வுக்கிரமாசத்தி
காபிநற்சித்தி கருநொச்சிப்பெயரே. அஅ௦

கோடி வேலி.

காவிகறுப்பி கருஞ்சித்திரமூலம்
ஆவிக்கனலி யாதிமகாமூலி
சேவிச்சிலைமணச்சி சேந்துடல்வேதிச்சி
நேவித்தகன்னி நேர்கொடிவேலியே. அஅக

முத்தெருக்கஞ்சேவியம்.

எழுத்தாணிப்பூடு வெழுந்தகதிரிதான்
வழுத்தாதபூமியில் வாசித்தப்பத்திரி
அழுத்தாதகாமி வாசைக்குடோரியாம்
நழுத்தாமுக்தெருக்கின் நலமானநாமமே. அஅஉ

சேந்திரா.

கசந்தகொடிச்சி கானச்சிவப்பிதான்
அசந்தவனலிபா மாயாசக்கட்டிச்சி
அசந்தகுடிச்சி வருகனல்நாசனி
திசந்தனற்செம்பின் செந்திராயின்பேரே. அஅங

செவ்வகத்தி.

ஆகுமசியவா ளழகுசிவப்பிதான்
தாகும்பெரிச்சி சந்திரன்றங்கச்சி
தோகுங்குணலிது வாமதசபத்திரி
பாகுஞ்செவ்வகத்திப் பரிவானநாமமே. அஅச

செம்பலிப்பூண்டு.

பாங்குச்சிகப்பி பயிரையெரிப்பவள்
ஓங்குங்குடிலி ஒலிதநாசினி
வாங்குஞ்செறுமி மாரத்பந்தனி
தாங்குநற்செம்பல்லி தன்னிநாமமே. அஅரு

நீலச்சோதி.

நீலங்காளி நேர்சகக்கன்னியாம்
ஆலங்கண்டனி யழகாங்கறுப்பிதான்
கோலக்குடிலி கொடிதானகற்பத்தி
தூலமாம்நீலப்போ சோதியினமமே. அஅசா

மூளகுதக்காளி.

காகமாசிகடுங் குட்டத்தாளிதான்
வேகவேசி வெண்தணலாற்றியாம்
பாகமோகினி பாலனைக்காத்தவள்
தாகமுளகாகுந் தக்காளிநாமமே. அஅஎ

மயில்.

சங்காரனுதன்று னேறுவாகனன்
நங்காகக்காட்டில் நலத்தஞ்சுவர்ணத்தான்
பொங்காகக்கண்ணன் புகழ்நாகச்சத்துரு
நங்காகலின்னுமம் நன்மயிலின்பேரே. அஅஅ

கோழி.

குமரக்கொடியோன் குக்கிடராசன்தான்
அமருமெஞ்ஞானி யரசனுக்கொற்றவன்
சமருக்குடையோன் சாகசவீரனும்
சமமாகக்கோழிக்குச் சாற்றியநாமமே. அஅகூ

கெருடன்.

அமுர்தச்சடத்தோனும் பக்ஷிராசன்
குமுர்தத்திருமால் கொள்கிபவாகனம்

ஓமூர்தச்சற்பத்துக் கோங்கியசத்துரு
தமூர்தக்கெருடன் தன்னுடனமமே. அ௯௰

தாகம்.

பட்சிப்பறையன் பரவைக்குவீசன்தான்
முட்சிக்கொடியோன் முநிசனிவாகனன்
தட்சிக்கருமுகிற் றுனுகும் வாசந்தான்
கட்சியினமங்காக் கையின்பேருமே. அ௯௧

முதலை.

மகரிமலாங்கி மடுவுக்குநாயகி
தகரியதண்டிச்சிதாஞ் சிதாஞ்சிறுபக்ஷணி
விகரியிரவில் விருமலந்திண்ணிதான்
முகரியநாமங்கள் முதலையின்பேருமே. அ௯௨

ஆமை.

கடலைச்சிறிக்கிக் கடுவட்டச்சக்கரி
உடலிற்றியாணி யுத்தமயோகிதான்
படியிற்பரிசனம் படுமுன்னெடுங்கியாம்
அடலிற்றநாமமா மையின்பேருமே. அ௯௩

செம்போத்து.

சிவந்தகண்ணன் செம்புதைவாசிதான்
தவந்தநடையோன் சண்டாளப்போத்தாங்
கதந்தசிறகோன் கடியசெம்மேனியன்
நவந்தசெம்போத்துக்கு நாடியநாமமே. அ௯௪

தாரா.

அன்னநடைச்சி யழகுள்ளபேடைதான்
கன்னக்குளத்திற் களித்தாடுங்கன்னியாம்
பன்னச்சிறகி பருந்ததைத்தின்பவள்
தன்னைத்தநாமங்கள் தாராவின்பேருமே. அ௯௫

ஊர்க்குருவி.

பட்டணவாசி பறவைச்சிறுக்கிதான்
கட்டணக்குந்தி கடுங்கிரகவாசினி
அட்டணசீவ னடைக்கலக்குருவியாம்
நட்டணவூரில் நலத்த குருவியே. அ௯௬

ஊர்வனம்.

அளங்கு.

சில்லுச்சிடச்சி சிறுமலைவாசியாம்
மல்லுச்சுருளி மாட்டொருத்திண்ணியாம்
கல்லுப்புதைச்சி கடுவச்சிரதேகிதான்
அற்லுற்றநாம மளுங்குடபேருமே அ௲எ

உடும்பு.

வானகச்சூலி மலைமேற்காட்டோணுன்
கானகக்குன்றில் கடுங்குகைவாசினி
ஆனத்தானுக்கு வாணுனசத்திதான்
ஓனகநாம முடும்பிற்பேருமே. அ௲அ

கருநாகம்.

சிவன்கைக்குக்கங்கணம் சேர்சிவனுசனம்
தவங்கைமால்மெத்தை தக்ஷன்கார்க்கோடன்
உலங்கைக்குப்பூணி யுறுதிமாகவாணி
கவங்கைக்குநாமங் கருநாகப்பேருமே. (அ௲௯)

கல்லாமை.

தாங்கியநற்குகை தாமோதரனுமாம்
வாங்கியபஞ் சவரியவாரணத்தோன்
ஓங்கியகாட னுருண்டவடிவனுங்
காங்கியயென்பார் கல்லாமைப்பேருமே. ௲௱

கட்டெறும்பு.

மருவிச்சிறியோன் மாபலமுள்ளவன்
கருவிக்கடுத்துவான் கடிக்கும்நடுமணி
தருவிச்சுரையே தன்னினக்குரியவன்
கருவியகட் டெறும்பினமமே. ௲௱௧

பூநாகம்.

பூமிகரம்ப புதுக்குளப்புத்துவாம்
காமிசஞ்சீவி கடுநாமமட்சயம்
சோமிசுடர்க்கொடி சொற்பூமிநாதமாப்
தாமியநாக்குத் தன்னுகப்பேருமே. ௲௱௨

இந்திரகோபம்.

மேகத்தின்விந்து விளங்குமழைத்துளி
தாகத்தின்மின்ன வின்றன்னிடநாதமாம்
நாகத்தின்வர்னம் நல்லிந்திரகோபமாம்
பாகத்தினட்சயம் பாருஞ்சஞ்சீவியே ௲௱௩

விருத்தம்.

பாடினேன்மூலிகையின் சாதியெல்லாம்
பறப்பினமுமூர்வினமும் பகுத்துச்சொன்னேன்
நாடினேனூற்றேடு வேழுஞ்சொன்னேன்
நலமாகக்கற்பத்துக் கெடுத்தமூலி
தேடினேனண்டத்திற் சாத்திரங்களெல்லாந்
திறமாகவென்னூலபோற் செப்பக்காணேன்
ஓடினேனேனைமந்தா மலைகள்தோறும்
உற்றுப்பார்நூல்களெல்லா மொளிப்புதானே ௲௱௪

வேறு.

வராகத்தின்போக்கு.

முதிர்ந்தவராகம் முன்னான்வரண்டிது
எதிர்ந்தேபிடித்து ருரையின்றிமூன்றுநாள்
பதுந்தேவலைகத்துப் பருவமாய்த்தொப்புளில்
அதிர்ந்தேகிழித்து வதில்வைக்கக்கேளுமே. ௲௱௫

கேளுமேதாளகங் கெடியாகப்பாய்ச்சிட
ஆளுமேயிருபத் தஞ்சுபலமதி
நாளுமேகெந்தகம் நாட்டுப்பலம்பத்து
தாளுமனேசிலைத் தானும்பலம்பத்தே ௲௱௬

பத்துக்கெவுரி பங்காப்பலமெட்டு
ஒத்துக்கபரியுடனே பலமைந்து
நத்துநற்சூதம் நாட்டுப்புலமைந்து
மத்தித்திவையெல்லாம் வளமாய்ப்பொடிசெய்யே ௲௱௭

பொடியையெடுத்துப் புகழாம்வராகத்தில்
அடியவேதொப்பளி லறுத்தேதுணித்ததை
நெடியவேவைத்து நேராகக்கட்டி
மடியவேபாண்டத்தில் வளமாகவைத்திடே. ௲௱௮

909

வைத்திட்டுப்பூமியில் வாசலும்நால்விட்டுக்
கைத்திட்டுச்சூழவே காறைகடுக்கிட்டு
ஓத்திட்டுவாசலி லோடியேயீய்ப்பிக்கி
கொய்த்திட்டுநாறி முழுப்புழுவாகுமே. ௬௱௬

ஆகும்புழுத்தானட வாகப்பொன்னிறம்
வாகுமேமோநாலு வாசலிலேவரும்
பாகுமேநிந்தம் பதமுறெடுத்திடு
ஓகுமேயெல்லா முருளவெரித்திடே. ௬௧௰

வராகத்தயிலம்.

எடுத்தப்புழுவை யியல்பாயுருக்கிட
மடுத்ததயிலமாம் வாங்கிடுபீங்கானில்
கடுத்கதுரிசி கடுஞ்சுன்னங்காசிடை
அடுத்தசவ்வீர மதுரெண்டுங்காசிடே. ௬௧௧

காசிடையொன்று கடுந்தகச்சுன்னமும்
ஓசிடமூன்று முறுகப்பொடிசெய்து
தூசிடக்கொட்டித் துழாவித்தயிலத்தில்
வாசிடைவைத்து வாமத்தைப்பூசியே. ௬௧௨

பூசிக்கவாதம் போகாதுசித்தியாம்
பூசிக்கக்காயம் புகழாகசித்தியாம்
பூசிக்கவாசி போக்கொடுமேலோடும்
பூசிக்காமாண்பர்க்குப் பொய்யாகும்வாதமே. ௬௧௩

வாதத்தினோடே மாகாயச்சித்தியும்
போதித்தபேரும் புகழ்நூல்கொடுத்தோரும்
வேதத்தின்வாக்கியம் வெறுப்புற்றுலவர்மனம்
காதத்தில்வாதங் கடந்துபொய்யாகுமே. ௬௧௪

ஷை வராகத்தயிலத்தில் - நவலோகவேதை.

ஆகுத்தயிலத் தடவானவேதைகேள்
வாகும்ரவிதான் வளமாய்ப்பலம்ரெண்டு
தாகுமேநின்று தானேவருகையில்
பாகுமேதயிலம் பாச்சொருதுள்ளியே. ௬௧௫

துள்ளியைவாங்கச் சூழ்மாத்துப்பணிரெண்டாந்
தெள்ளியவிப்படி செலுத்தநவலோகம்

ஒள்ளியமாத்தாகு மோடாதுவப்புக்கு
அள்ளியவித்தை யாடும்வராகமே. ௬௧௬

வராகத்தின்காலை வளமாய்த்தறித்திட்டு
தராகத்தின்சூதம் தானதிலேவார்த்து
ஓராகத்தயில மொருதுளியேதூத்தி
நிராகத்தசீலைமண் நேராகச்செய்திடே. ௬௧௭

செய்துபுடம்போடச் செயமாகுஞ்சூதந்தா
கைதிடுஞ்சூதத்தைக் காணவுருக்கிடு
நைதிடுஞ் சூதம் நலமய்ப்பலமொன்றில்
பைதிடும்நாகம் பாச்சாய்ப்பலம்ரெண்டே. ௬௧௮

ரெண்டுமுருகையில் நேர்காசிடைதங்கம்
ஒன்றுகொடுத்து வுருக்கியேவாங்கி
பண்டுவிடைக்கெல்லாம் பாய்ச்சியகெந்தகம்
மண்டும்பொடிசெய்து மாட்டிடுகுப்பியே. ௬௧௯

ஷைநவலோகவேதையிற்சூதகட்டுச்செந்தூரம்.

குப்பியைவாலுகைக் கூட்டியெரித்திடு
ஒப்பியசெந்தூரம் முருகும்பதம்பாரு
ஒம்பியவாயிரத் தொன்றிடுவான்பதில்
தப்பியமாத்துத் தான்பதினஞ்சுமே. ௬௨௰

இதுவும்மேற்படிதயிலத்தில்
பாஷாணச்சத்து

அஞ்சுமேபாஷாண மறுபத்துநாலுக்கு
மிஞ்சுமேதயிலம் விளம்பச்சுருக்கிடு
கெஞ்சுமேசத்து கெடிமாகக்கட்டுண்ணும்
தஞ்சுமேநூற்றொன்றுத் தாக்குடாயொன்பதே. ௬௨௧

ரூன்பதுலோகமு மோங்கிப்பசும்பொன்னும்
வன்பதுமூல்லை மகாலவித்தைதான்
தின்பதுக்காகாது செய்தொழிற்காணுது
நன்பதுவேதை நாட்டினவாறுமே. ௬௨௨

விருத்தம்.

பண்ணியென்றவராகத்திற் றொழிலேசொன்னேன்
பார்ப்பவற்க்குவெகு வெகுதான்பதம்பொய்யாது

புண்ணியமாம்புருஷருக்கு வாதசித்தி
பொல்லாததுரோகிக்குப் பொய்யாய்ப்போகும்
நண்ணியதோரென்னூலைக் கொடுத்தோர்பாதம்
நலமாகத்தொழுதிடவே யெல்லாஞ்சித்தி
கண்ணியவர் மனம்நொந்தா லொன்றுமில்லை
கவனித்தேசுந்தரா கண்டுபாரே. ௯௨௩

வேறு.

உபரசமானவொரு நூற்றிருபதும்
தபரசம்பாஷாணந் தானுமறுபதும்
நவரசத்தோடே நலமாயுறவாக்கி
சிவரசச்சிலசரி செப்புறேன்கேளுமே ௯௨௪

காந்தசத்துக் கிண்ணியில் சேலசரி விதம்.

கேளும்நீகாந்தங் கொடியாகச்சத்தோடு
வாளும்நீவட்டிலைப் போலேயிதைப்பண்ணு
நாளும்நீமையம் நடுவேவரையிட்டு
ஆளும்நீயப்பிரகச் சத்திநற்கிண்ணியே. ௯௨௫

கிண்ணுகடைந்து கெடியாம்வரைக்குள்ளே
ஒண்ணியேதாக்கு வுருகச்சிமிள்போலே
நண்ணியேமேலே நலமாய்மெழுகுசெய்
தண்ணியும்பூகாது தான்செல்யோகமே ௯௨௬

பூநாகச் செந்தூரம்.

செலசரிக்குள்ளே செலுத்தமருந்துகேள்
பிலசரிபூநாகச் சத்தொருகாசிடை
நலசரிநாகமும் நாட்டொருகாசிடை
சலசரிசூதமுங் காட்டொருகாசுமே. ௯௨௭

காசிடைரெண்டு கடியமனோசிலை
ஒசிடச்சத்தா யுறவாங்கிநீபோடு
மாசிடத்தங்கமாட்டொருகாசுதான்
தாசிடவெல்லாந் தவளவரைத்திடே. ௯௨௮

அரைத்தபொடியை யடவாகநீகேளு
விரைத்தநற்பொற்றலை சாறதுவிட்டரை
திரைத்ததெல்லுபோலச் செய்தேயுலர்த்திடு
நரைத்தவதில்வைத்து நற்கிண்ணிமூடுமே. ௯௨௯

முடியேதீபமு திரக்கிழ்வைத்திடு
நாடியேரெண்டுநாள் நலமாகப்பார்த்திடு
தேடியேசெந்தூரந் திறமாய்ச்சிவந்திடும்
ஓடியேவொன்பதிலோரைஞ்சு நூற்றிடே. ௬௩0

இட்டிடமாத்து வியல்பாய்ப்பதின்மூன்று
நாட்டியவேதை நாடியேவோடிடும்
பட்டிடலோகம் பரிசைபேதித்திடும்
தெட்டிடச்சிலசரி செய்யுந்திறமிதே ௬௩௧

கெந்தகச் சத்துக் களங்கு வேதை.

திறமானகெந்தகச் சத்தொருகாசிடை
நிறமானகாரீயம் நேரொருகாசிடை
அறமானதங்கமது வரைகாசிடை
உறமானமாக வொக்கவுருக்கிடே. ௬௩௨

உருக்கிநொறுக்கி வுறவிடுஞ்சூதங்கே
தருக்கியரெண்டு காசிடைதான்சூதம்
பருக்கியதாளகம் பாச்சுமுக்காசிடை
நெருக்கியேபொற்றலைச் சாற்றிலரைத்திடே. ௬௩௩

அரைத்ததைத்தெல்லுப்போ லடவாகவில்லைசெம்
திரைத்ததைவெயிலில் திறமாகக்காயவை
நிரைத்ததையுள்வைத்து நேர்கிண்ணிமூடியே
சுரைத்தநற்றீபமுஞ்சூட்டி நெய்வார்த்திடே. ௬௩௪

வார்த்திட்டுமூன்றுநாள் வளமாயெரிகையில்
கோர்த்திட்டதாலத்தில் குமுறவேநீர்விடு
ஏர்த்திட்டபூசை யீசானத்தேசெய்யும்
மார்த்திட்டமுள்ள மகத்தாங்களங்கிதே. ௬௩௫

களங்கையெடுத்துக் காட்டொருநூற்றொன்றில்
அளங்கியவொன்பதிலே யிரண்டுமாத்தாகும்
தளங்கியவேதை சலியாதுவுப்புக்கு
நளங்கியசெலநரி நற்றொழிறகாணுமே. ௬௩௬

அப்பிரகச் சத்துச் செந்தூரம்.

காணுமேவப்பிரகச் சத்தொருகாசிடை
பூணுவேசூதம் புகழாகக்காதிடை
தூணுமேசூதம் சூட்டுக்காற்மாசிடை
நாணுமிருகாசு நாட்டிடுகெந்தியே. ௬௩௭

கெந்தியினோடே கெடியாயிதுவெல்லம்
பொந்திரைப்பாய்ப் பொற்றலைச்சாற்றிலே
பந்தியவில்லையாய்ப் பாங்காப்பிடித்திட்டு
சந்திச்செலசரி யாட்டுசெந்தூரமே. ௬௩௮

ஆட்டுசெந்தூரத்தை யஞ்ஞூறுலோகத்தில்
பூட்டுநூறொன்று புகழ்பத்துமாற்றாகும்
நாட்டுதினங்குன்றி நலமாகக்கொண்டிடில்
தீட்டியகாயம் திறமாகச்சித்தியே. ௬௩௯

காந்தசத்துச் செந்தூரம்.

சித்தியாங்காந்தக சத்தொருகாசிடை
பத்தியாம்நாகம் பாச்சொருகாசிடை
மத்தியாந்தங்கம் மாட்டுகாற்காசிடை
யத்தியாமனோசிலை யதிரெண்டுகாசிடை. ௬௪௰

இட்டுவரைப்பாயி யல்வேளைச்சாற்றிலே
மட்டிடுவருட்டி மருவவே நெல்லுப்போல்
நட்டுவுருட்டி நலமானகாலத்தில்
உருட்டியேமூடி யுருகமெழுகிடே. ௬௪௧

இட்டேகீழ்தீப மேத்தியமூன்றுநாள்
பட்டேசெலத்தைப் பருவமாய்வார்த்துவா
கட்டேயிடுநெல்லு கடுகப்பொறிந்தபின்
பட்டேசெந்தூரம் பவநிறமாமே. ௬௪௨

ஆகுமேசெந்தூர மன்பதுக்கொன்றிடு
தாகுமேமாத்துத் தானெட்டுத்தப்பாது
வாகுமேநித்தம் வளம்பெறக்குறியுன்
பாகுமேதேகம் பளிச்சென்னுங்கற்பமே. ௬௪௩

மயூரசத்துச் செந்தூரம்.

கற்பமயூரங் கடுகியேசத்தெடு
நற்பவிதிலே நலக்கொருகாசெடு
அற்பரசந்த நாட்டொருகாசிடை
விற்பநற்றங்கம் விராந்துகாற்காசிடே. ௬௪௪

இடேநல்கெந்தி யிடுரெண்டுகாசிடை
மட்டேயிதெல்லாம் வார்த்தாறைபொற்றலை

945

கட்டேயுருட்டிக் கடுந்தெள்ளுப்போற்செய்து
தொட்டேஜெலசரி சூட்டிடையைவைத்திடே. ௬௪௫

வைத்திடுதீபம் மருவிடுமூன்றுநாள்
நைத்திடுவுள்ளே நலமாய்ச்சிவந்திடும்
அத்திடவேதை யன்னூற்றுக்கொன்றிடு
மைத்திடுமூவைந்து மாத்தாகுங்காணுமே. ௬௪௬

காணுமேசெந்தூரங் கைமுறைகுன்றிதான்
பூணுமேகொள்ளு புகழொருமண்டலம்
ஊணுமேமேனி வொளிவாமையல்போலத்
தோணுமேசித்தி சொரூபத்தைக்காட்டுமே. ௬௪௭

தாளகச் சத்துச் செந்தூரம்.

காட்டுமேதாளகச் சத்தொருகாசிடை
நீட்டுமேகாரீயம் நேரொறுகாசிடை
ஊட்டுமேநாக முறவொருகாசிடை
பூட்டுமேசூதம் புகழாகக்கூசுமே. ௬௪௮

காசுமேரெண்டிடை கலப்பாயிதிற்கெந்தி
வாசுமேதாம்பூலச் சார்வார்த்தகையிடி
ஓசுமேதெல்லுப்போ லுருட்டியுலர்த்திடு
கூசுமேஜலசரி கூட்டிநீவைத்திடே. ௬௪௯

வைத்திடுதீபம் மருவத்தினம்ரெண்டு
நைத்திடுயீசானம் நாட்டிடுபூசையே
கொத்திடவுள்ளே குமுறிச்செந்தூரமாம்
பத்திடவொன்பதிற் பாய்ச்சிடு நூற்றெருண்ணே. ௬௫௦

கபரிசத்துச் செந்தூரம்.

ஒண்ணுங்கபரி யுறுசத்துக்காசிடை
பண்ணுனபால சரமொருகாசிடை
தண்ணுனதக்கந் தானேர்பணம்ரெண்டு
மண்ணுனமுக்காசு மனோசிலைமாட்டிடே. ௬௫௧

மாட்டியரைத்திடு மத்தையின்சாற்றினல்
நீட்டியுருட்டி நேராகத்தெல்லுப்போல்
ஒட்டிச்சிலசரிக்குள் வைத்துமூடியே
காட்டியேமூன்றுநாள் கடுந்தீபம்வைத்திடே. ௬௫௨

வைத்திடவுள்ளே வளமாய்ச்செந்தூரிக்கும்
ஓய்த்திடவாயிரத் தொன்றிடுவொன்பதில்
நைத்திடமாத்து நாலேஞ்சிருபதாம்
பைத்திடவேதை பணவேதையாகுமே. ௬௫௩

953

நிமிளைசத்துச் செந்தூரம்-

ஆகும்நிமிளை யதனிடசத்திலே
வாகுமோர்காசிடை வளமாயெடுத்திடு
தாகுமோர்சூதமும் தானொருகாசிடை
பாகுமோர்தங்கம் பணமூன்றுபாச்சிடே. ௬௫௪

பாச்சுமுக்காசிடைப் பரிவாமனேசிலை
ஒச்சுநற்றும்பூலச் சாறதுவுறவரை
ஆச்சுநல்வில்லையா யடவாயுலர்த்திடு
மூச்சுச்செலசரிக்குள் வைத்துமூடுமே ௬௫௫

மூடியேதீபம் மூன்றுநாள்வைத்திடு
நாடியேதாரு நலத்தசெந்தூரமாம்
ஓடியேவொன்பதி லோரஞ்சிநூற்றதில்
ஆடியமாத்துவைம் மூன்றுகாணுமே. ௬௫௬

இந்திர கோபசத்துச் செந்தூரம்.

காணுமேயிந்திர கோபமாஞ்சத்திலே
பூணுமேகாசிடைப் புகழாய்நிறுத்திட்டு
ஓணுமேசூதமொரு காசிடைகூட்டு
பரணுமேதங்கம் பணவிடைபாச்சுமே. ௬௫௭

பாச்சிடுகெந்தி பரிவாய்முக்காசிடை
ஒச்சிடப்பொற்றலைச் சாற்றிலுறவரை
ஆச்சிடவில்லையா யடவாயுலர்த்திட்டு
மூச்சிடச்சிலசரிக்குள் வைத்துமூடிடே. ௬௫௮

மூடியேமூன்றுநாள் முதிரவைதீபத்தை
நாடியேதண்ணீர் கலமாயிரைத்துவார்
ஊடியேவுள்ளே வுருக்குஞ்செந்தூரமாம்
ஆடியேவொன்ப திலேஞ்நூற்றுக்கொன்றிடே. ௬௫௯

இட்டசெந்தூர மிதமாய்த்தினங்குன்றி
மட்டாகமண்டலம் வாங்கிடுதேனிலே
கட்டானமேனி காணிந்திரகோபமாம்
தொட்டானசித்தியாம் சொன்மாத்திருபதே ௬௬0

சித்தண்டோடு சத்துச் செந்தூரம்.

இருபதுபோனபின் னியல்பானவண்டோடு
வருவதுசத்தாய் வாங்கியேகாசிடை
தருவதுசூதந்தா னொருகாசிடை
உருவதுதங்க மொருபணந்தூக்கே ௬௬௧

தூக்கிடுநாகஞ் சூழவோர்காசிடை
தாக்கிடுகெந்தகந் தானுமுக்காசிடை
போக்கிடுதாம்பூலச் சாற்றூர்புகழ்ந்தாரை
வாக்கிடுவில்லையாய் வளமாய்யுலர்த்திடே. ௬௬௨

மலத்திட்டவில்லையை யூட்டச்சிலசரி
உலத்திட்டதீபம் வைத்திடுமூன்றுநாள்
பிலத்திட்டுவுள்ளே போய்ச்செந்தூரிக்கும்
கலத்திட்டவொன்பதிற் காட்டுநூற்றெண்ணுமே. ௬௬௩

ஒண்ணிடமாத்து வோர்பத்துக்கண்டிடும்
நண்ணிடக்குன்றி நல்கிடமண்டலம்
பண்ணிடகாயம் பரிசிடவேதையாம்
தண்ணுடச்சிலசரி தன்தொழிற்பாருமே. ௬௬௪

சிலாசத்துச் செந்தூரம்.

பாரேசிலாசத்துப் பாக்கானசத்திலே
நேரேயொருகாசு நிறுத்துயெடுத்திடு
தாரேநற்காசிடை தாக்கிடுநாகமும்
ஊரேநற்சூத மொருகாசிடையிடே. ௬௬௫

இடையோர்பணந்தா னிதிலிடுதங்கத்தைக்
குடையானதாளகங் கூட்டுமுக்காசிடை
தடையானபொற்றலைச் சாற்றிலறைத்திடு
படையான்வில்லைபோற் பாங்காகக்கட்டிடே. ௬௬௬

கட்டியேவில்லையைக் கடுகச்செலசரி
ஒட்டியேவைத்து வுருமெழுகிட்டு
தட்டியேதீபம் தான்மூன்றுநாளிட்டு
மட்டியேசெந்தூரம் மாசிவப்பாகுமே. ௬௬௭

சிவப்பானசெந்தூரஞ் சேர்த்திடுநூற்றொன்று
நவப்பாம்நவலோகம் நன்மத்துப்பத்லரை

968

உவப்பானவேதை யோடுஞ்சுருக்காக
தவப்பாஞ்செலசரி தானுங்குணமிதே. கூசுஅ

கல்நார் சத்துச் செந்தூரம்.

குணமாங்கல்நார் சத்துக்கூட்டொருகாசிடை
மணமானநாக மாட்டொருகாசிடை
தனமானகாரீயம் தானொருகாசிடை
அணமாயரைக்காசிடைத் தங்கம்போடுமே. கூசுகூ

போடுமுக்காசிடைப் புகழானதாளகம்
சாடுநல்வெற்றிலைச் சாற்றாலரைத்திட்டு
நீடுநல்வில்லையாய் நேரவைசிலசரி
கூடுதல்மூணுநாள் குறைபாததீபமே. கூஎ௰

தீபமலையாமற் சிறந்துவார் நெய்யதில்
கோபஞ்சூட்டாமற் கொடுஞ்சலம்விட்டுவா
தாபநற்கிண்ணிமேற் சாற்றியநெற்பொரி
பாவுமுறைதோறும் பாரய்ப்பருவமே. கூஎக

பருவத்துடன்செய்யப் பாங்காய்ச்செந்தூரமாம்
உருவொத்தவொன்பதி லோட்டொடுநூற்றொன்று
திருவொத்தமாற்றுத் திகழப்பணிரெண்டு
கருவொத்துவாடுங் காணிதின்போக்குமே. கூஎஉ

இராசவத் தசத்துச் செந்தூரம்.

போக்கானவத்சம் புகழ்ந்தெடுசத்தாக
வாக்காகக்காசிடை வளமாய்நிறுத்திடு
தாக்காகநாகந் தானொருகாசிடை
நீக்காகச்சூதம் நேரொருகாசிடே. கூஎங

இட்டிடுதங்க மியல்பாய்ப்பணம்ரெண்டு
மட்டிடுகெந்தகம் மாட்டுமுக்காசிடை
ஒட்டிடப்பொற்றலைச் சாத்திலரைத்திட்டு
நட்டிடவில்லையாய் நலம்பெறக்காய்ந்திடே. கூஎச

காய்ந்தபின்வாங்கிக் கடாவிச்சிலசரி
வாய்ந்தபின்மூன்றுநாள் வைத்திடுதீபமும்
ஒய்ந்தபின்பாரு முறுதிசெந்தூரமாம்
ஆய்ந்தபின்னூற்றொன் றணைத்தும்போருமே.. கூஎரு

பாருமேவொன்பதிற் பத்தரைதப்பாது
நேருமேகுன்றி யிடைதின்னமண்டலம்
தாருமேகெந்தகந் தன்னீலவர்னமாம்
காருமேவாசியைக் கண்டவாறிதே. ௯௭௬

சாஸ்திர வேதிசத்துச் செந்தூரம்.

வாருனசாஸ்திர வேதியன்சத்கெடு
கூருனகாசிடை குலாவிநிறுத்திடு
தாருனநாகத் தாளுருகாசிடை
சீருனசூதந் திறமாகக்காசிடே. ௯௭௭

இடுநீபரிதானியல் பாய்ப்பணம்ரெண்டு
மடுநீமுக்காசிடை மகத்தானகெந்தியை
படுநீகுமரியின் பாலாலரைத்திடு
அடுநீகல்வில்லேபோ லடவாகச்செய்திடே. ௯௭௮

செய்திடுவில்லேச் சிலசரிக்குள்வைத்துப்
பைதிடுங்கிண்ணியைப் பத்திரமாய்மூடி
கைத்திடுநீரைக் காட்டியேமூட்டுவாய்
ஐத்திடுமூன்று நாளாட்டிவிளக்கிடே ௯௭௯

இட்டதுரைக்கெல்லா மியல்பாகப்பூசைசெய்
நட்டநற்செந்தூரம் நாட்டாயிரத்தொன்று
பட்டணமாத்துப் பதினாறுகண்டிடும்
தொட்டனவெல்லாஞ் செலசரியோகமே. ௯௮௰

செலசரியோகஞ் செய்வதுசூக்ஷமாம்
செலசரியோகஞ் செய்வதுசொற்பமாம்
செலசரியோகஞ் சிவயோகிக்கேற்றது
செலசரியோகந் தேவியின்வித்தையே. ௯௮௧

விருத்தம்.

அப்பனேசெலசரியின் மெழுகுசொன்னே
னதற்கெடுத்தசெந்தூரப் போக்குச் சொன்னேன்
ஒப்பனே யுபரசத்தினிளங்கள்கூட்டி
யூட்டுகிறவரிசையெல்லா முறவாய்ச்சொன்னேன்
நப்பனேவுபர சத்திலிப்படியேகூட்ட
நண்டாகச்செந்தூரங் கெட்டியாகும்
கற்பனேகளொன்றுமில்லேக் கறந்தபடிசொன்னேன்
காட்டினார்சின்மயந்தான் காட்டினாரே. ௯௮௨

பாறையுப்புக்கட்டு-வேறு.

பூவாதேநின்றபுகழ் குப்பைமேனிதான்
தாவாதரைத்திடுதான் தேங்காய்மட்டுதான்
பாவாய்ப்பழம்புளிபார் தேங்காய்மட்டது
ஓவாக்கடல்நுரை யுருகவரைத்திடே. ௯௮௩

அரைத்தேயமுரியாலது தேங்காய்மட்டெடு
நிரைத்தேயிம்மூன்றும் நேரேயிடித்திடு
யரைத்தேமெழுகு போற்பாங்காய்பதத்திலே
தரைத்தேயடைபோலத் தான்ரெண்டுசெய்யுமே. ௯௮௪

செய்யுமடையொன்றிற் சிறக்கக்குழித்திடு
தையுஞ்சவுக்காரச் சுன்னமுஞ்சாரமும்
நையுமரைக்க நற்குழம்பாகும்
பையுஞ்சமுத்திரப் பாறைனுப்பேடே. ௯௮௫

உப்பையெடுத்து வுடைத்துவுதிர்த்திட்டு
செப்பயபாக்கு போற்றிறமாகவுப்பேடு
கப்பயவுப்புக்குக் கடியகுழம்பப்பி
அப்பையுலர்த்திட்ட வாய்க்குழிவையே. ௯௮௬

வைத்தேகுழிதோறும் மருவியகல்லுப்பை
கைத்தேமறுவடை காணுதேமூடிநீ
ஒய்த்தேமறுவொடு வுறவைத்துமேல்மூடி
தைத்தேநற்சிறுமண் சாதகஞ்செய்திடே. ௯௮௭

செய்திட்டுநன்றாய்ச் சிறக்கப்புடம்போட்டு
கைத்திட்டமாகவே கட்டிடுவுப்பெல்லாம்
பைதிட்டுவாங்கிப் பாங்காயடைதன்னை
மெய்திட்டவமுரிலை விட்டேயரைத்திடே. ௯௮௮

அரைத்தேமுன்போல வடைத்தட்டுரெண்டாக
நிரைத்தேகுழித்து நிரைநிபையுப்பைவை
பரைத்தேயடைமூடிப் பாங்காகமுன்போல
தரைத்தேபுடம்போட்டுத் தானங்கொடுத்திடே. ௯௮௯

எடுத்தேவடையை யிபல்பாயமுரியில்
மடுத்தேயரைத்து வளமாயடைபண்ணு
கடுத்தேகுழித்துக் கட்டுமுன்னுப்பெல்லாம்
படுத்தேயடைமூடிப் பாங்காய்ப்புடம்போடே. ௯௯௰

991

போடுநீயிப்படி புகழாகவைந்திரம்
ஆடுநீதோறுமடை நீபரைத்துசெய்
நாடுநீவுப்பு நலமாம்வயிரம்போல்
கோடுநீமாறுமற் குழுறவுங்கட்டுமே. ௬௬௧

கட்டியவுப்பைக் கரியிலுருக்கிடு
ஒட்டியேபோகாம லுருக்கிடுலோகம்போல்
தட்டியேவொட்டினுல் சத்துப்புடமுன்போல்
நெட்டியேதானுப் நிறந்தவைரமே. ௬௬௨

வயிரமாமுப்பு வளமாகக்காசிடை
கயிரமானின்று கலந்துவுருகையிற்
செயிரமாம்நாகஞ் சேரொருகாசிடை
தயிரமாந்தங்கத் தானேர்பணமிடே. ௬௬௩

இட்டேயுருகையி லிடுகாரமீர்பணம்
மட்டேயரைப்பண மாட்டிடுசாரந்தான்
நட்டேயுருகையில் கற்காசுலிங்கந்தான்
தட்டேயிதிலிடத்தான் வாங்கியாடுமே. ௬௬௪

ஆடுமுகத்தி லைகாமனேசிலே
நீடுமேரெண்டு காசிமைபோட்டுவா
கூடுமேவீரமுங் கொடுகவாருகாசிடை
தேடுமேயெய்லாஞ் சிதறுமல்வாங்குமே. ௬௬௫

பாறையப்புச் செந்தூரம்.

வாங்கியேவுப்பு வளமாய்ச்செந்தூரமாம்
ஓங்கியேவேதை யொருநூற்றுக்கோடிடும்
தாங்கியேவோடாது சாஸ்திரவேதையாம்
பாங்கியேவுப்புப் பரிசித்துவாகுமே. ௬௬௬

ஆமேலவண மாடியருகையில்
ஓமேநற்றுத்தம் வொவ்வொன்றாய்நீரூட்டிடு
தாமேசவ்வீரந் தானேந்திடைபோடு
சேமேவெட்டொன்று சேர்த்திடுதங்கமே. ௬௬௭

தங்கமுந்துத்தமுஞ் சார்ந்துவுருகையில்
பங்கயவீரத் திடையிடுலிங்கத்தை
நங்கயவீரத் திடைரெட்டிகெந்தகம்
அங்கயநீட்டி யடவாய்ச்சிவக்குமே. ௬௬௮

சிவக்குஞ்செந்தூரந் திறமாயிரத்தொன்றில்
நவக்கவலோகம் நாட்டப்பசும்பொன்னும்
தவக்கவொன்றில்லைத் தாண்டிடுந்தூம்புரம்
பவக்கத்திரிதிரி பரிசைவேதிக்குமே. ௯௯௯

வேதிக்குமுப்பு விளங்கொருகாசிடை
ஆதிக்குநின்று வசந்துவுருகையிற்
போதிக்குநிமிளைப் பூட்டொருகாசிடை
தாதிக்குஞ்சுதந் தானொருகாசிடே. ௲

நிமிளைசத்து செந்தூரம்.

இட்டிடுதங்க மியல்பாகக்காசிடை
மட்டிடுவீர மாட்டதிற்காசிடை
நட்டிருகாசிடை நலத்தமனோசிலை
பட்டச்செந்தூரம் பாங்காயிறங்குமே. ௲௧

இறங்குஞ்செந்தூர மிடுமோயிரத்தொன்றி
லுறங்கியவொன்பது லோகமும்வேதிக்கும்
தறங்கியமாத்துத் தானேபதினைந்து
உலங்கியவுப்புக் குருகின்றவாறிதே. ௲௨

க்ரீய செந்தூரம்.

வாறானவுப்பை வைத்தொருகாசிடை
தாறானகாரீயந் தானொருகாசிடை
தேறாகநின்று திரண்டுவருகையில்
வீறானகாசிடை விடுவிதிற்சூதமே. ௲௩

சூதத்திடையொன்று சூட்டதிற்றங்கத்தை
சூதத்திடைபோலச் சூட்டிடுலிங்கத்தை
சூதத்திடைபாதி சூட்டிடுவீரமும்
சூதத்திடைரெட்டி சூட்டிடுகெந்தியே. ௲௪

கெந்தியினோடே கேளுஞ்சாரக்கெல்லாம்
அந்தியேவாங்கி யடவாகக்கட்டுண்ணும்
சந்தியந்தீருஞ் சார்ந்துசெந்தூரமாம்
பந்தியமொன்பதிற் பாச்சும்நூற்றொன்றே. ௲௫

ஒன்றானமாத்து வோங்கிப்பணிரெண்டு
தன்றானவேதை சலியாதுவுப்புக்கு

1006

கன்றுனகாரீயம் கடுஞ்சுறுக்குப்புக்கும்
நன்றும்நிகண்டுக்குள் நாட்டியவாறிதே. ௲௬

